# வைத்திய
# ந்திரிகா




# वैद्यचान्द्रिका

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்ரிகை

Vol. 11 June 1949 No. 6

ஆசிரியர்:

பண்டிட் S. M. ஸுந்தரராஜாசாரியர்

வருஷச் சந்தா ரூ. 5—0—0

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
மாதப் பத்திரிகை.

இங்கிலீஷ் மாதம் முதல் வாரத்தில் வெளியாகும்.

வருஷச் சந்தா ரூ. 3-0-0

பத்திரிகைக்கும், மண்டலத்திற்கும் சந்தா ஸம்பந்தமான வர்ஷாரம்பம் ஜனவரி முதல் டிஸம்பர் முடிய. (Calender year). 1948-ம் வருஷத்திய சந்தாவை 1948 ஜனவரி 25–தேதிக்குள் மணியார்டர் மூலம் அவசியம் அநுப்பிவிடப் பிரார்த்திக்கப்படுகிறது.

ஷை தேதிக்குள் சந்தா அநுப்பாதவர்களுக்கு மண்டலசந்தாவை வஸூலிக்க பிப்ரவரி சந்திரிகை V. P. P. மூலம் அநுப்பப்படும். மண்டலத்தில் அங்கத்தினராக இருக்க விருப்பமில்லாவிடில் ஷை தேதிக்குள் தபால் மூலம் தெரிவித்துவிட வேண்டும்.

சந்தா, விளம்பர விஷயங்கள் அனுப்பவேண்டிய விலாஸம் :—

ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M.
உபகார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
17. சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சினுப்பள்ளி.

சந்தாதாரரின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந் தேதிக்குள் சந்திரிகை கிடைக்காவிடிலும் மேற்படி விலாஸத்திற்கு உடனே தெரிவிக்கவும்.

---

ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி, ஆயுர்வேதாசார்ய,
ஆசிரியர்: வைத்திய சந்திரிகா,
ஆத்ரேயாசிரமம், தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி.

என்ற விலாஸத்திற்கு சந்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய கட்டுரைகள், செய்திக் குறிப்புகள், ஸந்தேஹங்கள், பதில்கள், சர்ச்சைகள், சிகித்ஸைக் குறிப்புகள், (Case Sheets) விமர்சத்திற்குப் புத்தகங்கள், பதில் பத்திரிகைகள் இவை போன்றவை யெல்லாம் அனுப்பப்படவேண்டும்.

குறிப்பு :— சந்திரிகையில் பிரகாசமாகும் இதரர்களுடைய கட்டுரைகளில் காணும் மதபேதங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி யல்ல. பிரசுரத்திற்கு அநுப்பவேண்டிய விஷயங்கள் தெளிவான எழுத்தில் காகிதத்தில் ஒருபக்கத்தில் கொஞ்சம் இடம் (Margin) விட்டு எழுதப் படவேண்டும். விஷயத்தைப் பிரசுரிக்க காலம், இடம், அளவு முதலியவைகளில் ஆசிரியருக்குப் பூர்ண ஸ்வாதந்தர்யம் உண்டு.

---

ஸ்ரீ:

# இரஸ சாஸ்திரம் ஒரு கலை.

## அதன் முற்கால தற்கால நிலைமைகள்

[வைத்யரத்னம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஏ.கே.ஏ.ஸி.
ஆயுர்வேதபூஷணம், ஆயுர்வேதாசார்ய, சென்னை.]

பண்டைக்காலத்தில் பரதகண்டம் சாஸ்திர அறிவாலும் கலைஜ்ஞானத்தாலும் சிறப்புற்று, நாகரிக நாடுகளுள் முதன்மை பெற்றிருந்தது. அதை நினைத்து நாம் இப்பொழுது திருப்தி அடைவதற்கில்லை. இப்பொழுது அச்சாஸ்திரங்களின் நிலைமையும், அக்கலைகளின் தன்மையும் எவ்வாறு உள்ளன வென்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். அப்பரிசீலனையிலிருந்து எழும் பலனைக்கொண்டு, அக்கலைகளைச் சீர்திருத்தவோ விருத்தி செய்யவோ ஏற்றவாறு முயன்ருலன்றி, கடந்துபோன மேன்மையைக் குறிப்பிட்டு இப்பொழுது பெருமை பாராட்டுவதிற் பயனில்லை.

வெகு ஸாதாரணமான கைத்தொழில்களைத் தவிர்த்து, சாஸ்திர முறைகளைக் கொண்டு நிகழ்ந்த வேலைப்பாடுகளும் கலைகளும் வெகு உபயோகமான வகையில் கற்றறிந்த முற்காலத்திய உயர்வகுப்பினரால் ஊக்கத்துடன் விருத்தி செய்யப்பட்டு வந்தன. வைத்திய சாஸ்திர ஸம்பந்தமான அறிவு மாத்திரமல்ல, இக்காலத்தில் எஞ்ஜினீரிங் என்று வழங்கப்படும் கலையைக் குறிப்பிடும் ஸ்தாபத்யம் (ஸ்தபதி வித்யா) என்கிற கலையும், மெடலர்ஜி என்று வழங்கப்படுகிற லோஹவித்யையும், மற்றும் பல கலைகளும் வெவ்வேறு துறைகளில் விருத்தியடைந்து பழக்கத்தில் இருந்து வந்ததாக ஸூத்ரதாரமண்டலன் என்பவர் இயற்றிய "ராஜவல்லபம்" முதலிய ஸ்தாபத்ய சாஸ்திரங்களைக் கொண்டு நமக்கு விளங்குகிறது. இக்கிரந்தங்களினும் புராதனமான சுக்ல யஜுர்வேதத்திலும், தைத்திரீய ப்ராஹ்மணத்திலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு

இந்நாட்டில் அவ்வித சாஸ்திரங்களையும் கலைகளையும் பயின்று தொழில் நடத்தியவர்களின் நாகரிக மேன்மை பல ஸந்தர்ப்பங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு உயர்நிலையிலிருந்து இந்நாட்டுக் கலைஞானம் துரத்ருஷ்டவசமாய், ஜாதி மதவேற்றுமை விஷயமாய் வரையறுத்து வழக்கத்துக்கு வந்த கடுமையான விதிநியமங்களால் செழிக்க வகையன்றி எழுத்தளவில் பண்டைய நூல்களில் மழுங்கிக் கிடக்கின்றது.*

புராதனமான ஆர்ஷக் கிரந்தங்களில் (முனிவர்கள் இயற்றிய நூல்களில்), முக்கியமாய் வாத்ஸ்யாயனர் இயற்றிய காமஸூத்திர நூலில் விவரிக்கப்பட்டுள்ள அறுபத்தினாலு வகையான கலைகளுள் இங்கு சிலவற்றைக் குறிப்பிடுகிறேன் :

**ஸுவர்ண ரத்ன பரீக்ஷை:** அதாவது பொன், இரத்தினங்கள் சுத்தம் அல்லது அசுத்தமான தன்மையுள்ளனவா என்பதையும், அவற்றின் குணா குணங்களையும், மற்றும் அவற்றின் உபயோகாதிகளையும் தெரிந்துகொள்வதற்கான உபாயங்கள்.

**தாதுவாதம், லோஹ விஞ்ஞானம்:** இவற்றைப்பற்றிய விஷயங்கள். இரஸவாதம் எனப்படும் தாதுபரிணாம விஷயத்திலிருந்து அயம் முதலிய உலோஹங்களைக் கண்டறிந்து வெவ்வேறு கனிகளிலிருந்து அவற்றைப் பிரித்தெடுத்து, பலவேறு காரியங்களுக்கு உபயோகமான வகையில் அவற்றைப் பக்குவம் செய்யும் அறிவு.

**மணிராக ஆகரஞ்ஞானம்:** வெவ்வேறு இரத்தினங்களுக்கு அவற்றின் பலவித நிறங்களாலான குணாகுணங்களையும், அம்மணிகள் உற்பத்தியாகும் நிலங்கள் அல்லது அவ்வித பூமியின் தன்மைகளையும் ஆராய்வதற்குரிய அறிவு.

**பாஷாண—தத்வாதிகளின் த்ருதியும் அவற்றின் மாரணமும்:** சங்கபாஷாணம், கௌரிபாஷாணம், வைக்ராந்தம், தாள

* Dutt's Civilization in Ancient India (pp. 155—157) பார்க்கலாம்.

கம் முதலியவற்றை வேதை செய்யும் அல்லது திராவகம் செய்யும் முறைகளையும், அவற்றை பஸ்மம் செய்யும் முறைகளையும், அவற்றின் உபயோக வகைகளையும் விளக்கும் வித்யை.

**தாதுக்கள் ஓஷதிகள் இவற்றின் ஸம்யோகக்ரியா ஞானம்:** என்றால்— சிலாஜது, மநச்சிலை, இரஸகம் முதலிய தாதுப் பொருட்களையும், வெவ்வேறு பச்சிலை மூலிகை முதலியவற்றையும் எந்தெந்த முறையில் ஒருமிக்கக் கூட்டினால் எந்தெந்த மாறுபாடு ஏற்படும், அவற்றால் எவ்வெவ் வுபயோகங்கள் விளையும் என்கிற உண்மைகளை உணர்த்தும் வித்யை.

முற்கூறிய விஷய விஞ்ஞான முறைகள் மிக்க உபயோகமான கலைகள் என்று சுக்ரநீதி ஸாரமும் (4-ம் அத். 2-ம் பிரகரணம்) ஸ்பஷ்டமாகக் கூறுகிறது. அவற்றுள் இரண்டொரு ச்லோகங்களை மாத்திரம் இங்கு மாதிரிக்கு எடுத்துக் குறிப்பிடுகிறேன்:

धातुसाङ्कर्यपार्थक्यकरणं तु कला स्मृता ।
संयोगापूर्वविज्ञानं धात्वादीनां कला स्मृता ॥

"கந்தகம், துத்தம், அன்னபேதி, மநச்சிலை முதலிய தாதுப் பொருட்களும், அயம் வங்கம் முதலிய உலோஹப் பொருட்களும் ஒன்றோடொன்று சேருவதாலாகும் மாறுபாடுகளையும், ஒருமிக்க சேர்ந்துள்ள பலவித தாதுப் பொருட்களைத் தனித்தனியே பிரித்தெடுக்கும் வகைகளையும் விவரிக்கும் சாஸ்திரம் 'கலை' எனப்படுகிறது. அவ்வாறு தாதுப் பொருட்களுடையவும் தாதுக்கள் மூலிகைகளுடையவும் பலவேறு சேர்க்கையாலான மாறுபாடுகளை விளக்கி, அவற்றின் அபூர்வத் தோற்றங்களையும் உபயோகங்களையும் அறிவிக்கும் வித்யையும் 'கலை' எனக் கூறப்படுகிறது." என்பது அந்த ச்லோகத்தின் கருத்து.

क्षारनिष्कासनज्ञानं कलासंज्ञं तु तत् स्मृतम् ।
कलादशकमेतत् स्यादायुर्वेदे प्रधानतः ॥

"வெவ்வேறு ஓஷதிகளிலிருந்தும், மூலிகைகளிலிருந்தும், தாதுப் பொருட்களிலிருந்தும் 'க்ஷாரங்கள்' என்கிற

உப்புச் சத்துக்களைப் பிரித்தெடுக்கும் வித்யையும் 'கலை' என்று வழங்கப்படுகிறது. ஆயுர்வேதத்தில் பத்துவித மான கலாஞ்ஞானம்* மிகப் பிரதானமாகக் கூறப்பட்டுள் ளது.''

உடம்பைப் பிடித்து மர்த்தநம் செய்யும் முறையும் ஒரு கலையாகக் கருதப்பட்டு அனுஷ்டானத்தில் இருந்து வந் தது. ஸ்ரீ ஹர்ஷனுடைய கலாவல்லவர் அடங்கிய ஸபை யில் பட்டபாணனுக்கு நண்பர்களாயிருந்த கலாவல்லவர் களுள் மந்தாரகன் என்கிற பிஷக்கும் (வைத்தியர்), லோ ஹவித் என்கிற உலோஹங்களின் தத்துவமறிந்தவரும் (Metallurgist), விஹங்கமன் என்கிற தாதுவாதியும் (Assayar), கேரளிகா என்கிற ஸம்வாஹிகையும் (உடம்பு பிடிப்பவள்–Massage expert) இருந்து வந்ததாக ஹர்ஷ சரிதம் (முதல் உச்சுவாஸம்) கூறுகிறது.

வேதம் ஆதியில் இந்நாட்டில் பிரசாரமான காலத்தில் நமது மூதாதைகளாயிருந்த முனிவர்களும் குருமார்களும் அவரவர் கற்றுணர்ந்த ஒவ்வொரு வித்யையும் அவரவரிஷ் டப்படி அனுபவபூர்வமாய் உபயோகித்து, உலக நன்மைக் காக அவ்வத் தொழிலை நிகழ்த்தி வந்தார்கள். ஸுச்ருதரு டைய கொள்கைப்படி சவ சரீரத்தைச் சேதநம் செய்து உடலின் உள்ளமைப்புகளை உள்ளபடி அறிந்தாலேயன்றி, சரீரதத்துவ ஸம்பந்தமான பிரத்யக்ஷஞ்ஞானம் மாணுக்கருக் குப் போதியவாறு உண்டாகாதென்று மிகப் பண்டைக் காலத்திலேயே நமது வைத்தியர்கள் உணர்ந்திருந்தனர். ஆகையினாலேயே,

तस्मान्निस्संशयं ज्ञानं हर्त्रा शक्यस्य वांछता ।
शोधयित्वा मृतं सम्यक् द्रष्टव्योऽङ्गविनिश्चयः ॥

---

*ரூப்ய ரத்ன பரீக்ஷை, மணிராகஞ்ஞானம், தாதுவாதம், ஆகர ஞ்ஞானம், விருக்ஷாயுர்வேதம், கேசமார்ஜந கௌசலம், யந்திர மாத் ருகா, பாஷாண தாத்வாதி த்ருதி மாரணஞ்ஞானம், தாது–ஓஷதி ஸம்யோகக்ரியா ஞானம், தாது ஸாங்கர்ய பார்த்தக்ய யோகஞ்ஞானம் என்பவை ஆயுர்வேத ஸம்பந்தமான பத்துப் பிரதான கலைகள். இவற்றுள் ரூப்ய ரத்ன பரீக்ஷை என்பதே ஸ்வர்ண ரத்ன பரீக்ஷை என்றும் கூறப்படும்.

" சல்ய சாஸ்திரம் என்கிற சஸ்திர சிகித்ஸா ரூபமான வித்யையில் ஐயம் திரிபற அறிவு பெற விரும்புபவன் இறந்தவனது உடலை உருப்பு உருப்பாகச் செவ்வனே அறுத்துப் பார்த்து, உடற்கூறு ஸம்பந்தமான ஒவ்வோர் அம்சத்தையும் உள்ளபடி நேரிற் கண்டறியவேண்டும்" என்று ஸுச்ருதர் வற்புறுத்தியிருக்கிறார். ஆனால் சவ சரீரத்தைத் தொடுவது கூட பரிசுத்தத்திற்குக் கேடு விளைவிக்குமென மனு முதலியவர்கள் விதி ஏற்படுத்தி விட்டதால்* ஆர்யர்களிற் பெரும்பான்மையோர் ஸுச்ருதர் முதலிய சல்ய சஸ்திர நிபுணர்கள் கூறிய அரிய முறையை அநாதரவு செய்யலாயினர். அநேகமாய் ஆசார்ய வாக்படருக்குப் பிறகு சவசரீர சோதனையும், கத்தி யெடுத்து அவசியமான சல்ய சிகித்ஸை செய்யும் வழக்கமும், சரீர தத்துவமான கலையும் நம்மவரது கையிலிருந்து நழுவிவிட நேர்ந்தது.

சல்ய சிகித்ஸை முதலிய கலைகளைப்போலவே ஸ்வர்ணகாரவித்யை, லோஹகார வித்யை முதலிய கலைகளும், துரத்ருஷ்டவசமாய் உயர்குலத்தினருக்கு ஒவ்வாதவை யெனக் கருதப்பட நேர்ந்தது. தாதுவாதம், லோஹவித்யை முதலிய அரும் பெரும் கலைகளும் ஏட்டிற் கல்விகளாய் அனுபவத்திற் கொவ்வாத அரு மருந்துகளாயின. தொழிலுக்கும் ஜாதிக்கும்— பிற்காலப் பயன் அறிந்தோ அறியாமலோ— ஏற்படுத்திய உயர்வு தாழ்வு ரூபமான ஸம்பந்தம் இந்நாட்டில் மாத்திரமல்ல, மேனாட்டிலுங்கூட முற்காலத்தியவரால் கற்பிக்கப்பட்டு, கலாவிருத்திக்குச் சிறிது இடையூறு ஏற்படுத்தியதுண்டு. சுமார் கி. மு. 300 வருடங்களுக்கு முன்பு கிரீஸ் தேசத்து வேதாந்திகளுள் முக்கியமானவரா யிருந்த அரிஸ்டோடல் (Aristotle) என்பவர் இரும்புவேலை பொன்வேலை, மருந்துத் தொழில், தச்சுவேலை முதலிய தொழில்களெல்லாம் தத்துவஞ்ஞானத்தின் அபிவிருத்திக்கு இடையூறு செய்பவை யென்றும், அத்தொழில்களில் ஈடுபடுபவர் நுண்ணறிவு பெற்ற தத்துவஞ்ஞானிகளுடன் சேர்ந்து வாழக் கூடாமல் தாழ்ந்தவராய் விடுகிறார்களென்றும் சில நியமங்கள் ஏற்படுத்தினர்.

---

* மனுஸ்ம்ருதி, அத். 5, ச்லோ. 64, 85, 87.

அதன் பயனாக உலோஹங்கள் தாதுக்கள் ஓஷதிகள் முதலியவற்றைப் பக்குவம்செய்யும் இரஸாயன சாஸ்திரிகளும், ஔஷதம் தயாரிப்போரும் ஜாதி பஹிஷ்காரத்திற்குள்ளாக நேர்ந்தது.* ஆனால் ஊக்கமும் திடசித்தமும் படைத்த மேனாட்டுக் கலைவல்லோர் பலர் வேதாந்திகள் ஏற்படுத்திய அநாவசியமான அவ்வித நியமங்களைப் பொருட்படுத்தாது, உடற்கூறு கலை, சஸ்திர சிகித்ஸா வித்யை, இரஸாயன கலை முதலியதை, அவற்றின் ஒப்பற்ற உபயோகங்களைப் பகுத்தறிவுடன் யோசித்து, காலக் கிரமத்தில் மேம்பாடடைய முழு முயற்சியும் எடுத்துக் கொண்டனர். இந்நாட்டிலோ இடைக்காலத்திய இந்து மதத்தினர் சஸ்திர சிகித்ஸையை நாவிதர்களுக்கும், அஸ்த்தி ஸந்தாந கலையைக் குயவர்களுக்கும், விஷவித்யையைப் பாம்பாட்டிகளுக்கும், மூலிகைகளைப் பகுத்தறிந்து பயிரிட்டு உபயோகிக்கும் தொழிலை வில்லி வேடர்களுக்கும், தாதுவாதம் இரஸாயநம் இவ்வேலைகளைப் பஹிராகிகளுக்கும் ஏற்ற வேலைகளென ஏளனமாகக் கருதி அலக்ஷியம் செய்யவே, ஆயுர்வேதம் இப்பொழுது ஆதரிப்பாரற்று ஏழ்மை நிலைமை யடைய நேர்ந்தது.

பரமாணுவாதம் முதலிய பிரத்யக்ஷ தத்துவார்த்தங்களை விளக்க வந்த கணாதர் முதலியவரது வைசேஷிக ஸித்தாந்தங்கூட (பௌத்தமதக் கொள்கைகளைத் தொலைக்கக் கருதிய) ஆசார்யர்களால் அஸச்சாஸ்திரம் என்று நிராகரிக்கப்பட நேர்ந்தது.

"तस्मादेवम् असारतरतर्कसंदृब्धत्वात्, ईश्वरकारण श्रुतिविरुद्धत्वात्, श्रुतिप्रवणैश्च शिष्टैः मन्वादिभिः अपरिगृहीतत्वात् अत्यन्तमेवानपेक्षास्मिन् परमाणुकारणवादे कार्या श्रेयोर्थिभिरिति वाक्यशेषः" *(2-2-17)*

"தர்க்கசாஸ்திரத்திலிருந்து முற்றிலும் ஸாரமில்லாத அம்சங்களைக் கொண்டு இயற்றப்பட்டிருப்பதாலும், உலகத்திற்கு மூலகாரணம் ஈச்வரன் என்று கூறும் வேதவாக்கியங்களுக்கு விரோதமாயிருப்பதாலும், வேதப் பிரமாணமாகக் கொண்ட மனு முதலிய மேன் மக்களால் ஏற்றுக்

* Meyer's "Hist. of Chemistry" Ed. 1898. p. 10 பார்க்கவும்.

கொள்ளப்படாமையாலும் இம்மை மறுமைகளிற் பெரும் பேறுகளைப் பெற விரும்புபவரால் பரமாணு காரணவாதம் முற்றிலும் உபேக்ஷிக்கப்பட வேண்டும்" என்று ஸூத்திர பாஷ்யம் கூறுகிறது.

சிறந்த உயர்வகை உடைகளை நெய்தலும் சேணியனுக்கே தகும், உயர்ந்த அணிகலங்களை அழகாகச் செய்தலும் கம்மாளருக்கே உரியதென்றும் கூறி உயர்தரக் கலைகளை உதறித் தள்ளிய நாட்டில் உத்தம கலைஞ்ஞானம் சீர்குலைந்ததென்றால், அதில் வியப்பொன்றுமில்லை. இப்பொழுதும் வடமொழியில் கணித சாஸ்திரமும், ஜ்யோதிஷ சாஸ்திரமும், இரஸாயந சாஸ்திரமும், மற்றுமுள்ள புராதந கலைகளும் சீர்திருத்தி விருத்தி செய்யக் கூடாதவாறு அவ்வளவு முற்றிலும் அலங்கோலமாய் விடவில்லை. அவற்றிலும் முக்கியமாக ஆயுர்வேத வைத்தியர்களின் கவனம் இரஸ சாஸ்திரத்தை அபிவிருத்தி செய்வதில் அதிகம் செல்லுமானால், மேனாட்டு வைத்தியர்களுக்கு முன்னால் நமது வைத்திய சாஸ்திரத்தின் பெருமையை விளக்கிக் காட்ட வழி யேற்படும். ஆயுர்வேத வைத்தியத்தின் பெருமையிற் பெரும் பகுதி நமது இரஸ சாஸ்திரத்தைப் பொருந்தியுள்ளது. இவ்வுண்மை யறிந்தே, ஸுச்ருத ஸம்ஹிதையைப் பிரதி ஸம்ஸ்காரம் செய்து, காய சல்ய சிகித்ஸைகளின் பெருமையைத் தான் மதிப்பதாக விளக்கி விட்டு, அவ்வளவு பெருமை வாய்ந்தது இரஸ சாஸ்திரம் என்பதை யுணர்ந்தே, ஸித்த நாகார்ஜுனன் இரஸ சாஸ்திரத்தைத் தனது நூலாலும் பிரயோக முறைகளாலும் இந்நாட்டில் முன்பு நிலைநாட்டினார். ஆயுர்வேதத்திற்கு அநுபந்தமான இரஸ சாஸ்திரம் என்னும் இப்பெருங் கலையை விருத்தி செய்ய ஆயுர்வேதத்திற் பற்றுள்ள அனைவரும் ஏற்ற உபாயங்களைத் தேட உத்ஸாஹத்துடன் உழைப்பார்களாக.

# புளிச்சக்கீரை

[Dr. R. K. பழனியப்பா, H. L. M. S. சேலம்.]

தமிழில் : புளிச்சக்கிரை, காசிலிக்கிரை, புளிச்சிறுக்கிரை, செடிக்காசரை, காசினிக்கிரை.
ஸம்ஸ்க்ருதத்தில் : माचकफलामल Machaka phalamla.
தெலுங்கில் : கோங்குகூரா Gongu kura.
கன்னடத்தில் : Pinidrikegida.
இங்கிலீஷில் : Brown Indian hemp.
லத்தீன் : Hibiscus cannabinus.
இந்துஸ்தானியில் : பத்ஸான் Patsan எனவும் பெயர்.

**செய்கை:—** ஸ்நிக்தகாரி (Emollient) இலகுமலகாரி (Laxative) காமவர்த்தினி (Aphroddisiac).

இதில் செடிக்காசரை, சீமைக் காசரை, கொடிக்காசரை என மூன்றுவகை உண்டு. மூன்றுவகையும் குணத்தில் ஏறத்தாழ ஒன்றே. வழக்கத்தில் அதிகப்படியாக உபயோகிப்பது செடிக்காசரையே.

**உபயோகம்;—** வாத நோய்கள், சிலேத்ம வியாதி, இரத்த பித்தம், கரப்பான் சொரி சிரங்கு, வீக்கம், வாந்தி, அரோசகம், அஸ்தி தாதுகத சுரம் சீத உஷ்ணபேதி, மூலரோகம், ஆசனக்கடுப்பு, ஆசன எரிச்சல், ஆசனத் தினவு, சிசுக்களுக்கு அடித்தள்ளுதல் முதலியன தீரும்.

உஷ்ணதிக்கத்தால் காணும் சீதபேதி, உஷ்ணபேதி மலச்சிக்கலுக்கு முதன்மை பெற்ற மருந்தாக உபயோகப்படுத்தலாம். எந்த மருந்திலும் Serum இன்ஜெக்ஷனிலும் (Injection) தீராத சீதபேதி, சீதரத்தபேதி, ரத்தபேதி, இவைகளுக்கு ஷி கீரையை உணவாகவும், கஷாயம், லேகியமாகவும் செய்து உபயோகிக்கின் சில தினங்களில் அதி ஆச்சரிய குணம் பெறலாம். ஆயுர்வேத சாஸ்திரத்தில் மிகக் கொடிய கன்ம ரோகம் என்று சொல்லக்கூடிய ரோகங்களில் ஒன்றான மூலரோகத்தில் மூலச்சூடு, மூலவாய்வு, மூல முளை, கீழ் மூலம், மூலச் சதைபோன்ற பலவுக்கும் இக்கீரையை தினசரி உணவில் ஒன்றாகத் தவறாமல் உண்டுவர மூலரோகமே நிர்மூலமாக மறைந்துவிடும் என்பது திண்ணம். அனுபவமுமாகும்.

சிலர் வாயினின்றும் துர் நாற்றம் உண்டாகும். பக்கத்திலுள்ளோரிடம் பேசுவதற்கும் அஞ்சச் செய்யும். அத்தகையோரும், சிலருக்கு வாயின் இருபுறமும், நாவிலும் அடிக்கடி புண் உண்டாகி தொந்தரவைத் தரும் அத்தகையோரும் இக்கீரையை அதிகாலையில் பச்சையாகவும் அல்லது கஷாயம், சமயல் முறைப்படியும் உபயோகிக்கின் அவ்வியாதி நீங்கி சுகுணமுண்டாகும். நாபிச் சூடு நீங்கும். நாபிச் சூட்டால் ஏற்படும் க்ஷயம் நீங்கும். நீர்ப்பை, நீர்த்துவாரத் (Kidney and Bladder) தில் உஷ்ணம், மேகாதிகளால் உண்டாகும் சொட்டு மூத்திரம், அதி மூத்திரம், மதுநீர் போன்ற வியாதிகளையும் நீக்கும் குணமுண்டு.

இரசகந்தக பாஷாணுதி, உஷ்ண மருந்துகளால் உண்டாகும் வெப்பத்திற்கு கஷாயமாக உபயோகிக்கின் அவைகளால் ஏற்பட்ட உஷ்ணம் நீங்கும். இன்னும் தாய் தந்தையரின் மேகச்சூட்டால் குழந்தைகளுக்கு ஏற்படும் கணை, கணமாந்தம், பெருமலம், கணச்சூடு, மூத்திரம் மஞ்சளாகவும் சுண்ணும்புநீர் போலவும் போதல், இத்தகைய வியாதிகளுக்கு இக்கீரையை பானகம், ஷர்பத் (Syrup) ஆகவோ தயார் செய்து உபயோகிக்கின் அந்நோய் தீர்ந்து பாலர்கள் செழுமை பெற ஏதுவாகும்.

இன்னும் இக்கீரை இரத்தத்தை சுத்திகரித்து இரத்தவிர்த்தி செய்து இராஜகருவிகளுக்கு பலங்கொடுத்து தாதுவிர்த்தியையும், தாதுபுஷ்டியையும் தரும். உணவில் ருசியும் தரும். இதற்கேற்ற உணவு 'களி' என்னும் கேழ்வரகுச் சாதமே. நம் சென்னை ராஜதானியில் இதனை அறிந்து அதிகமாக உபயோகிப்பவர்கள் ஆந்திரராகிய தெலுங்கு தேசத்தவரே. இதனை உபயோகியாத ஆந்திரரே கிடையாது எனலாம். இதனை சட்னியாக செய்து உபயோகிப்பதில் தீரர்கள். இதனை அவர்கள் கோங்கூரா சட்னி என பிரியமாக உண்ணுகிருர்கள். நம் தமிழ் நாட்டிலோ இதன் குணம் அறியாது இதனை உண்ணுபவர்களை பரிகசிக்கிருர்கள். இதன் அருமையை அறிந்தால் பரிகசியார்கள். ஆனுல் கிராமவாசிகளில் பெரும்பாலோர் இதன் அருமை அறிவார்கள்.

இக்கீரையில் அதிக முற்றலும் மிக்க இளவலு மில்லாதபடி எடுத்து இத்துடன் உப்பு, பச்சைமிளகாய், கொத்துமல்லிக்கீரை, புளி இஞ்சி கூட்டி நெய்யில் அல்லது எண்ணெயில் வதக்கி பூண்போடாத உலக்கையால் நன்ருக மசிய இடித்து சுத்தமான எண்ணெய் தாராளமாய் விட்டு உளுத்தம்பருப்பு கடுகு, காயம், சீரகம், வெந்தயம் முதலியவற்ருல் தாளிதம் செய்து சேர்த்து மறுபடியும் இடித்து வேண்டுமானுல் தேவையான அளவு நெய் எண்ணெய் சேர்த்து கல்சட்டி அல்லது ஜாடிகளில் பத்திரப்படுத்தி தினசரி ஆகாராதிகளுடன் உப

யோகித்து வந்தால் மேற்கண்ட குணம் பெறலாம், நாவிற்கும் ருசியிருக்கும். இன்னும் பலவீனம், இரத்தக்ஷீணம், பாண்டு, காமாலை, அரோசகம், அன்னத்துவேஷம், பித்தப் பிணிகள் பிரமை, நாவரட்சி, தாகம் முதலிய நோய்கள் உண்டாகாமல் தடுத்து ஆரோக்கியந் தரும்.

இதனால் செய்யப்படும் சில மருந்துகள், அரிஷ்டங்கள் பெரும்பான்மை வைத்தியர்கள் அறியாததும் எனக்கு ஆசிரியராயமைந்தவரும் சித்த வைத்தியத்தில் தனக்கு இணையில்லை யென பிரகாசித்த காலஞ்சென்ற சென்னை, உயர் திரு வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமி பிள்ளை அவர்களால் யான் அறிந்த சில முறைகளை கீழே எழுதுகின்றேன். இவை வைத்தியர்களுக்குப் பெரும் பயனைத் தரும் என்பது திண்ணம்.

### 1. மாஜீகாசவம்.— (புளிச்சக்கீரை அரிஷ்டம்)

50 பலம் புளிச்சக்கிரையை 16 படி தண்ணீர் விட்டு 4-ல் ஒருபாகமாகச் சுண்டக் கஷாயம் செய்து வடிகட்டி 1000 தோலா சர்க்கரை சேர்த்து பழகிய பானையில் போட்டு அதில் வாய்விளங்கம், திப்பிலி, கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, ஏலரிசி, பச்சிலை, சிறுநாகப்பூ, மிளகு வகைக்கு தோலா 5— சூர்ணம் செய்து சேர்த்து சீலை செய்து 1 மாதம் சந்தானம் செய்து எடுத்து, கால், அரை அவுன்ஸ் தினம் காலை, மாலை 2 வேளை சமபாக ஜலம் சேர்த்து உபயோகிக்க, இருமல், மாரடைப்பு (மூச்சு முட்டல்) தொண்டை வியாதி பயங்கரமான க்ஷயம், இரத்தம் வருதல் (க்ஷய இருமலில் ஆர்ட்டரி முறிந்து வரும் இரத்தம்) தீரும்.

### 2. காசினி சர்பத்— (மகோதரத்திற்கு)

காசினி வேர், காசினி விதை, சோம்பு வேர், சோம்பு, கோவை வேர், ரோஜாப்பூ, ஆப்சனதீன் தொக்மேசுூஸ், அனிசூன், மணத்தக்காளி வற்றல், கார்ப்பஸ், குலேபனப்ஷா, சடாமாஞ்சில், தாமரைப்பூ கௌதமான் சாஜீரா வகைக்கு தோலா ஓண்ணேகால், ரேவல் சின்னிக்கிழங்கு மூன்றேகால் (இதற்கு பதில் இங்கிலீஷ் முறை பல்விஸ் ரூபர்ப் Pulvis Rhuburb) புளிச்சக்கிரை (காசினிக்கிரை) ச்சாறு 24 பலம் (24 அவுன்ஸ்) கற்கண்டு பலம் 30.

செய்முறை:— சாறு கற்கண்டு நீங்கலாக உள்ள சரக்கைப் பொடித்து ஒண்ணரை படி சலத்தில் கியாழமிட்டு அரைப்படி வந்த சமயம் வடிகட்டி காசினிச்சாற்றையும் (பொடித்த) கற்கண்டையும் (கற்கண்டு கிடைக்காவிடின்) திடம் நாட்டுச் சர்க்கரை சேர்த்து குழம்பு பதமாக (ஷர்பத் பதத்தில்) காய்ச்சி வைத்துக்கொள்ள

வேண்டும். வேளைக்கு 1 அல்லது 2 டீஸ்பூன் விதம் தினம் 2 வேளை பசுவின் பாலில் கொடுக்கவும். இதில் மலம் போகும், நீர் இறங்கும், இல்லையேல் அளவை அதிகப்படுத்தவும். மலம் அதிகமானால் அளவைக் குறைக்கவும். (மாலையில் மருந்தை நிறுத்தியும் விடலாம்) இப்படி 7 நாள் கொடுக்க மகோதர நோய் தீரும், நல்ல குணங் காணலாம். வயிறு வீக்கம், மேல் மூச்சு, திணருதல், வயிற்று சங்கடம் எல்லாம் நாளுக்குநாள் குறைந்துவிடும்.

பத்தியம்:— பால் சாதம், காரமில்லாத கஞ்சி முதலியவைகள் சிறந்தது. அற்ப நோயாயின் இச்சாபத்தியம்.

இதனை மேல் உபயோகிக்க நீங்கும் பிணிகள்;—

வாய்வால் உண்டாகும் வீக்கங்கள், மூலமுளைகள், கட்டிகள், பெருஞ் சிரங்குகள், புழுக்கள் நெளிகின்ற அழிபுண்கள் ஆருத விரணங்கள், பழுக்காத கட்டிகள், கட்டி உடைந்த பின்னும் முளைவராமல் தொந்தரவு செய்யும் துர்நீர் வியாதிகள் போன்ற இவைகளுக்கு இக்கீரை பச்சையாக அரைத்தும், வேகவைத்தும், எண்ணெயில் வதக்கியும் மேல் பத்தாக போட்டு வருதலால் குணமுண்டாகும், வாய்வுகளை கரைப்பதிலும் கட்டிகளை பழுக்கவைத்து உடையச் செய்வதிலும் இரணங்களை ஆற்றுவதிலும் இத்தழை மிகச் சிறந்தது (Antiseptic) ஆக விளங்குகின்றது, இன்னும் கஷாயம் செய்து புண்களைக் கழுவதினால் நற் குணமுண்டாகும்.

# மணி—மந்திர—அவுஷத ஆராய்ச்சி

[டாக்டர். T. G. ராமமூர்த்தி அய்யர்,
ரிடயர்ட் மெடிகலாபீசர், ஈரோடு.]

(Vol, IX, No. 11. 301-ம் பக்கத் தொடர்ச்சி.)

எரி நக்ஷத்ரங்கள் (Meteors or shooting stars) பூமியில் அநேக தேசங்களில் விழுந்தவைகளை ஆராய்ந்ததில், இரும்பு, தாமிரம், கந்தகம், பல ரசாயனப் பொருள்களும், சிலவற்றில் வைரம் என்னும் ரத்தினமும் இருந்ததாக தெரிவிக்கப் படுவதினின்றும், இஜ்ஜீவராசிகளை ஆளும், வான வாசிகளின் சரீர அமைப்பு மேல்கண்ட வஸ்துக்களாலமைந்த தென புலப்படுகிறது. வைரமணியானது சுக்கிரன் என்னும் கிரகத்துக்குகந்ததென்பதாக ஜோதிட

நூல் கூறுகிறது. இப்படியே எந்தெந்த நிறத்துடன் விளங்குகிறதோ அந்தந்த நிறத்தை யுடைய ரத்ன மணிகள் ஒவ்வோர் கிரகத்துக்கும் பிரத்தியேகமான சரீர அமைப்புக்குறியது என்பதாக தெரிய வருகிறது. தவிர ஸர் C. V. ராமன் ஆராய்ச்சியில், ரத்ன கற்களில் சலனம் (vibration) இருப்பதாக தெரிவிக்கிருர். அந்தந்த கிரகத்திற்கு பொருந்திய சுத்தமான ரத்ன மணியாக பரீக்ஷித்து ஆபரணமாயணிவதால், அதனதன் ஒளியின் மூலமாயும், சலனத்தின் விசேஷத்தாலும், வானத்திலுள்ள பெரிய கிரகங்களின் குரூரச்செய்கைகளை சரீரத்தில் அணுகாமல் தடுக்கவும், குணமளிக்கவும் சாத்தியப்படுமென்று நம்பலாகும்.

மணி என்பது நவரத்னங்கள்தாஞ என்பதை நிச்சயிக்க, இரண்டு காரணங்கள் இருக்கிறது. அவை என்ன வெனில், ஜோதிட சாஸ்திரங்களில், மனிதர்களுக்கு நோய்களையும், பலவித கஷ்டங்களையும் உண்டாக்குவது நவக்கிரகங்களுடைய செய்கைகளென்றும், அந்தந்த கிரகத்தின் நிறத்தை யொத்த ரத்னங்களைத் தெரிந்து, ஆபரணமாயணிவது நன்மை யளிக்குமென்றும், ஒவ்வோர் கிரகத்தின் குரூரத்தாலும், இன்னின்ன நோய்களும், துன்பங்களும் சம்பவிக்குமென்றும் தெரிவிக்கப்படுவது ஒன்று.

மற்ருென்று, ராவணன் என்னும் லங்காபுரி மன்னன், 10 தலையுடையவனென்றும், அவனது பத்து கிரீடத்திலும் மஹாமணிகள் பதிக்கப் பட்டிருந்ததாகவும், அவைகளில் உன்னதமான நீலமணி பதிக்கப் பட்டிருந்ததாகவும் ராமாயணம் கூறுகிறது.

இவ்விரு உதாரணத்தாலும், மணி என்ருல் ரத்னங்கள் என்பதாக நிச்சயிக்கலாகும்.

இனி இந்த நவக்கிரகங்கள் நிலையை சிறிது ஆராய்வோம்.

அத்வைத சித்தாந்த ஆகம விதியின் பிரகாரம், நம் நாட்டிலுள்ள சிவாலயங்களில், லிங்கவடிவாயமர்ந்திருக்கும் ஈஸ்வர சன்னிதானத்தில், பிரணவஸ்வரூபியான மஹா கணபதியும், அசுராதி சூரர்களை சம்ஹரிக்கவல்ல வேல் வீர

சுப்ரமண்யமும், பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகளுக்கு அனுபவம் தரும் சுப அசுப போக பாக்யங்களை அருளும் சூரியன், சந்திரன், குரு, செவ்வாய், சுக்கிரன், புதன், சனி, ராகு, கேது என்னும் நவக்கிரகதேவதைகளும், இன்னும் மற்ற தேவதைகளையும், ஜகத்தை உய்ப்பிக்க வேண்டி, சிவனும் சக்தியுமாக, ஆனந்த நடனமாடும் சுவரூபமான நடராஜர் பார்வதி விக்ரகமும், உலகத்து மக்கள் உணரும் பொருட்டு, நிர்மாணித்திருப்பதினின்றும், சிவதத்துவம், ஈசுவரம், என்றும் தத்துவத்தின் பொருள் விளங்கும்.

மனிதன் க்ஷுத்ர அண்டம் (Microcosm) என்ற கொள்கையின் பிரகாரம், இந்த 9 கிரகங்களும், 27 நக்ஷத்ரக் கூட்டங்களும் வானத்தில் எப்படி படர்ந்திருக்கிறதோ, அவ்விதமாகவே பிரதி மனித சரீரத்திலும் வியாபித்துக் கொண்டும், சலனத்துடனிருப்பது இயல்பு.

வானத்தை (Macrocosm) பன்னிரண்டு பாகங்களாகவும். அவைகளை தாங்கள் சஞ்சரிக்கும் ஸ்தானங்களாகவும் கொண்டிருக்கிறது. இந்த 9 கிரகங்களும் இயற்கை அமைப்பில், இப்படியாக இருந்துகொண்டு 12 வீடுகளிலும் சஞ்சாரம் செய்துகொண்டே வருகின்றன. இப்படி சஞ்சரித்துக் கொண்டே பூமியிலுள்ள ஜீவராசிகளின் வாழ்க்கையை நடத்துகின்றன தங்கள் தங்கள் பிரகாச சக்தியின் கிரணங்கள் மூலமாய். எப்படியெனில்,

சூர்யன் நடுமையமாகவும், சந்திரன் தென்கிழக்காகவும், செவ்வாய் தெற்கிலும், புதன் கிழக்கிலும், குரு வடக்கிலும், சுக்கிரன் கிழக்கிலும், சனி மேற்கிலும், ராகு தென் மேற்கிலும், கேது வடமேற்கிலும், ஆக எட்டுத் திக்கை கையும், சூழ்ந்துகொண்டு ஆக்ஷி புரிகிறது. இதில் சூர்யன் பிரதான கிரகமாக தலைமை வகித்து மற்ற க்ரகங்களை தன் படைபோல சுற்றிலும் அமைக்கப்பெற்று, சூரியனுடைய ஆக்கினைக்குக் கட்டுப்பட்டு சுழன்றுகொண்டேயிருக்கின்றன. தவிர, இந்த ஒன்பது கிரகங்களும், மும்மூன்று நக்ஷத்ரக் கூட்டங்களை தங்கள் ஆயுதங்களாக உடையன. எவ்வாறெனில், 27 நக்ஷத்ரக் கூட்டங்கள் உள்ளன. அவைகளில்:

| | |
|---|---|
| கிருத்திகை, உத்திரம், உத்திராடம்— | சூரியன் |
| ரோகிணி, அஸ்தம், திருவோணம்— | சந்திரன் |
| மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம்— | செவ்வாய் |
| திருவாதிரை, சுவாதி, சதயம்— | ராகு |
| புனர்பூசம், விசாகம், பூரட்டாதி— | குரு |
| பூசம், அனுஷம், உத்திரட்டாதி— | சனி |
| ஆயில்யம், கேட்டை, ரேவதி— | புதன் |
| அசுவதி, மகம், மூலம்— | கேது |
| பரணி, பூரம், பூராடம்— | சுக்கிரன் |

இப்படி இயற்கையில், பிரமாண்டத்தில்(macrocosm) ஸ்ருஷ்டிக்கப் பட்டிருக்கிறது. அதுபோலவே இவை பிரதி ஜீவ சரீரத்திலும் சூக்ஷ்ம ரூபமா யமைந்திருக்கிறது. இப் படியாக சரீரத்தில் நிலைகொண்டு, திரிதோஷங்களை இயக் குகின்றன இந்த நவக்கிரகங்கள்.

குருவும், புதனும், சனியும்— வாதத்தை இயக்கும்.
சூரியன், செவ்வாய், ராகு, கேது— பித்தத்தை இயக்கும்.
சுக்கிரன், சந்திரன்— கபத்தை இயக்கும்.

இப்படி இயங்கும் கால், இக்கிரகங்கள் சரிவர இயங் காமல், அத் திரிதோஷங்களை சரிவர இயங்கவிடாமல், ஜீவ சரீரம் துன்பத்திற்காளாக வேண்டி, பலவித நோய்களுக் குட்படுத்துவது இவைகளின் சுபாவம். அக்காலம் எங் தெந்த கிரகங்கள் எந்தவிதமான நோய்களை யளிக்கவல்லது என்பதை ஆராய்வோம்.

**சூரியன் :** சமரசமான சூடு, வறட்சி, பித்தம், ஆன்ம சூடு, தலை, மூளை, நரம்பு, வலதுபுரம், தலை, மார்பு, இருதயம் நுரையீரல், வாய், பற்கள், விலா உருப்புகள், வலதுகண், பித்தத்தையும் உதிரத்தையும் பற்றிய வியாதிகள்.

**சந்திரன் :** குளிர்ச்சி, ஈரம், தோல், மயிர், நகம், இடது பக்கம், பிடரி, கால், இடது கண், இரசத்தையும் குளிர்ச்சி யும் பற்றியவை.

**செவ்வாய் :** அதிக சூடு, வறட்சி, சூட்டைப்பற்றிய பித்தம், மாமிசம், பித்தப்பை, பீஜ நீர்த்தாரை, ஊத்தாம் பிள்ளை, வலது நாசி, கெந்த புலன் (Sense of swell), சுரம்,

Venkatarajan,

காமாலை, கர்ப்பசின்னம் (abortion) பீனிசம், பெரும்பாடு மூலம்.

**புதன்:** அதிக வறட்சியும், குளிர்ச்சி கலந்த வரட்சியும், ஈரம் கலந்த வண்டல், நரம்பு, ஸ்பரிச புலன் (Sense of touch), நாவு, கண், காது, நாசி, சொற்ப குளிர்ச்சியும் வறட்சியும் பற்றிய வியாதிகள்.

**குரு:** சமரசமான சூடும், குளிர்ச்சியும், பரிசுத்த உதிரம், விந்து, தலை, மூளை, இரத்ததாரை, எலும்பின் மூளை, ஈரல், தீனிப்பை, குடல், அண்ணாக் தொண்டை, இடது செவி, ஸ்பரிச புலன் (Sense of touch).

**சுக்கிரன்:** சமரச குளிர்ச்சியும் ஈரமும், இரச தாது, நிணம், சுக்கிலம், கருப்பாசயம், ஆண்குறி, நாசித் துளை, நீர்த்தாரை, சொற்ப கொழுமையும் குளிர்ச்சி பற்றியதுமான வியாதிகள்.

**சனி:** அதிக குளிர்ச்சி, வறட்சி, வண்டல், வலது செவி, தோல், சத்த புலன் (Sense of hearing) மயிர், நகம், மண்ணீரல், மலம், சலம், கால் விரல்களிலுண்டாகும் இசிவு, உள்ளூறுப்புகளிலுண்டாகும் வியாதிகள்.

**ருகு, கேது:** பல கலப்படமான ரொம்ப துன்பத்தையுண்டாக்க கூடிய வியாதிகள்.

இப்படிப்பட்ட வியாதிகள் உண்டாவதை தடுக்கவும், குணமாக்கவும், செய்யும் சிகிச்சை— மணி என்னும் ரத்னங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன்— | மாணிக்கம். | குரு— | புஷ்பராகம். |
| சந்திரன்— | முத்து. | சுக்கிரன்— | வைரம். |
| செவ்வாய்— | பவழம். | சனி— | நீலம். |
| புதன்— | பச்சை. | ருகு— | கோமேதகம் |
| | கேது— | வைடூர்யம். | |

இப்படியாக இயற்கையின் சுபாவத்தை அறிந்து சுலபமான சாதனங்களைக் கொண்டு அதிசயிக்கத் தக்க குணத்தை அளிக்கக்கூடிய சிகிச்சைமுறையில் "மணி" என்பது பிரதானமானது.

இனி அடுத்த வியாசத்தில் "மந்திரம்" என்னும் சிகிச்சை முறையை ஆராய்வோம்.

உ

ஸ்ரீ தந்வந்தரயே நம.

# நமது பத்திரிகை.

நமது பத்திரிகையின் அபிவிருத்தி எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்று தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவியுங்கள் என்று சந்திரிகையின் சென்ற ஸஞ்சிகையில் நாம் செய்துள்ள பிரார்த்தனைக்கு வாசக நேயர்களில் பலர் தங்களுடைய அபிப்பிராயங்களை எழுதி யநுப்பியுள்ளார்கள். இவ்வுபகாரத்திற்கு நன்றி செலுத்துகிறோம். வைத்திய ஸகோதரர்களிடமிருந்து வந்துள்ள அபிப்பிராயங்களை அநுஸரித்து சந்திரிகையின் அபிவிருத்தித் துறைகளில் அதன் நிர்வாகிகள் இயன்றவளவு அனவரதமும் முயன்று வருகின்றனர். ஆயினும் சந்திரிகையின் அபிவிருத்திக்காக அதன் நிர்வாஹிகளால் செய்யப்படும் முயற்சிகள் யாவும், மண்டல அங்கத்தினர்களாகிய தங்களுடைய பரிபூர்ண ஒத்துழைப்பினுல் மட்டுமே பலிதமாக முடியும்.

முதல் முதலாக மண்டலத்தின் பொருள் நிலை உயரவேண்டும். வர்த்தமான அங்கத்தினர்கள் வருஷச் சந்தாவைத் தவிர தங்களால் இயன்ற அளவு ஒரு அதிக அம்சம் பொருளுதவி செய்யவேண்டும். அதிக அதிக அங்கத்தினர்களைச் சேர்ப்பதிலும் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும்.

சந்திரிகைக்கு விஷயதானம் செய்வதிலும் ஸகல வைத்தியர்களும் பலவிதங்களிலும் ஸஹாயமளித்துக் கொண்டே யிருக்க வேண்டும். சாஸ்திர விஷயங்களில் ஆராய்ச்சிகள், சிகித்ஸா யுக்திகள், அநுபூதமான ஔஷதப் பிரபாவங்கள், புதிய புதிய ஆலோசனைகள், பிறர் எழுத்துக்களில் ஒற்றுமை மனோபாவத்துடன் (संभूय संभाषापद्धतिः) விமர்சங்கள், சர்ச்சைகள், ஸந்தேஹங்கள், வைத்திய ஸம்பந்தமான அரசியல் முதலிய விஷயங்களில் கட்டுரைகள் எழுதியநுப்பிக் கொண்டே யிருக்கவேண்டும். இவ்விதம் எல்லா வைத்தியர்களும் விஷயதானம் செய்துகொண்டிருந்தால் தான் வைத்திய சந்திரிகை வைத்திய உலகிற்கு உண்மையில் உபகாரமளிக்க வல்லதாகும். ஆதலால் பொருள் தானம், விஷயதானம் இருவகையிலும் உபகரியுங்கள் என்று வைத்திய ஸகோதரர்களனைவரும் பிரார்த்தனை செய்யப்படுகிறுர்கள்.

பிராசீனக் கிரந்தங்களின் மொழிபெயர்ப்பு பிரதிமாதமும் தொடர்ந்து வெளியிடுவது அவசியம் என்றுள்ள பல அன்பர்களுடைய கோரிக்கையைப் பூர்த்திசெய்ய முடியாமைக்குக் காரணம் சந்திரிகையினுடைய அல்லது மண்டலத்தினுடைய பொருளாதாரத்தின் ஹீனஸ்திதியே யாகும். ஆயினும் அங்கத்தினர்களுடைய பேரன்பையே அவலம்பமாகக் கொண்டு நாளது பிப்ரவரி மாதத்திய ஸஞ்சிகையிலிருந்து தொடர்ந்து தீரளியகுண ஷிஜ்ஞாரும் என்ற ஆயுர்வேதாங்கம் தமிழில் மொழிபெயர்த்து பிரகாசம் செய்துகொண்டிருக்க ஏற்பாடுகள் நடக்கின்றன என்பது ஸந்தோஷத்துடன் தெரிவிக்கப்படுகிறது.

## மதுவிலக்குச் சட்டமும் ஆஸவாரிஷ்டங்களும் :

சென்னை ஸர்க்கார் கள்குடிப் பழக்கத்தை முற்றிலும் அகற்றிவிடும் நோக்கத்துடன் 1937-ல் காங்கிரஸ் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட மதுவிலக்குச் சட்டத்தை திரும்பவும் அமுலுக்குக் கொண்டு வந்துள்ளார்கள். கள்குடிப் பழக்கம் உலகில் ஒழிய வேண்டியதே. இதில் மதபேத மிருக்கமுடியாது. இக்கெட்ட பழக்கத்தை யொழிக்க சட்டமும் தண்டனையும் அவசியமே. ஆனால் ஒரு சட்டமியற்றுவதில் சட்டத்தின் நோக்கங்களை பிரதானமாய் கவனித்து அந்த சட்டத்தால் இதர நியாயமான வஸ்துக்கள் பாதிக்கப்படாமல் செய்யப்பட வேண்டும் என்பதை இந்த மதுவிலக்குச் சட்டமியற்றிய சட்ட மேதாவிகள் அறவே மறந்துள்ளனர். மதுவிலக்குச் சட்டத்தின் நோக்கமென்ன? மூளையைக் கெடுத்து போதையை உண்டுபண்ணும் கள்ளு, சாராயம், பீர், பிராண்டி, விஸ்கி, ஜின், கஞ்சா, அபின், பங்கா முதலிய வஸ்துக்களுடைய உபயோகத்தினல் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய கொடிய தீங்குகளை விலக்குவதே அல்லாமல் வேறல்ல. இவ்வித போதை தரும் வஸ்துக்களுடைய உற்பத்தி விற்பனை உபயோகங்களை சட்ட மூலம் தடுப்பதற்காக விதி நியமங்களை ஏற்படுத்தும் சட்டத்தில் மூளைக்கு ஒருவித தோஷத்தையும் உண்டுபண்ணாத ஆயுர்வேத முறைப்படி செய்யப்படும் ஆஸவாரிஷ்டம் எனப்படும் ஔஷதங்களையும் சேர்த்துப் பிணைத்தல் எவ்வித நியாயத்தில், அல்லது யுக்தியில் சேரும் என்று நமக்கு சிறிதும் விளங்கவில்லை. இந்த ஆஸவாரிஷ்டங்கள் எந்த அதிக அளவில் அருந்தினாலும் மதிமயக்கம் தருவதே யில்லை என்பதும் பிரத்யக்ஷமானது. எவ்வளவு நீண்டகாலம் உபயோகிக்கினும் காபீ, டீ முதலிய பானங்கள் போல் விடமுடியாத ஒரு கெட்ட பழக்கத்தைக் கூட உண்டு பண்ணுவதில்லை என்பதும் பிரத்யக்ஷமானது. மிருதஸஞ்ஜீவினி ஸுரா போன்ற தீக்ஷ்ண மத்யங்களே மதுவர்க்கத்தில் சேர்க்கப் படக்கூடியவை. மிருதஸஞ்ஜீவனீ ஸுரா செய்ய ஸாதாரணமாய்

வைத்தியர்களால் முடியாது. அதற்கு லைஸென்ஸு எப்போதுமே சட்டப்படி யிருக்கிறது. இன்று வைத்தியர்களால் செய்யப்படும் ஆஸவாரிஷ்டங்களில் மயக்கம் தரக்கூடிய அளவில் Alcohol இருக்கிறதாவென்று சோதனை செய்து பார்க்காமலே க்ண்மூடித் தனமாக ஆஸவாரிஷ்டங்களையும் மதுவர்க்கத்தில் சேர்த்துள்ள தானது நமது மதி மந்திரிகளுக்கு ஆஸவாரிஷ்டங்களைப் பற்றிய அறிவு அணுவளவுமில்லை என்பதைக் காட்டுகிறது.

1937-ல் மதுவிலக்குச் சட்டம் ஏற்பட்ட சமயத்தில் ஆஸவாரிஷ்டங்களைச் சேர்த்தல் அநீதி என்று Dr. லக்ஷ்மீபதி அவர்களாலும், அகிலபாரத ஆயுர்வேத காங்கிரஸ் அப்போதைய தலைவர் லாஹுர் ப. ஸ்ரீ. சிவசர்மா அவர்களாலும் சர்க்காருக்கு எடுத்துச் சொல்லியதின் மேல் ஆஸவாரிஷ்டங்கள் மதுவர்க்கத்திலிருந்து விலக்கப்பட்டன. ஆனால் உடனேயே மதுவிலக்கும் விலக்கப் பட்டபடியால் வெளியிலிந்த விஷயம் பிரஸித்தமாகவில்லை.

ஆதலால் இப்போது வைத்தியர்கள் திரும்பவும் ஆஸவாரிஷ்டங்களை ரத்து செய்யும்படிக்கு சர்க்காருக்கு எடுத்துக்காட்ட வேண்டியது முதல் கார்யம். மதுவிலக்கு ஏற்பாட்டினால் குறையும் பண வருமானத்தை ஈடுகட்ட வேண்டுமென்றால் அதற்காக மது வர்க்கத்தில் சேர்க்கக்கூடாதவைகளையும் சேர்ப்பதைப் பார்க்கிலும் பெரிய அநீதி என்னவாகும்?

## தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்

# 3-வது ஸ்தாயி ஸமிதிக் கூட்டம்

29-11-47 பிற்பகல் 3 மணிக்கு நெ, 8 யோகாம்பாள் தெரு, தியாகராய நகரில் கூடியது. பண்டிட் துரைஸ்வாமி அய்யங்கார் தலைமை வகித்தார். 11 கமிட்டி மெம்பர்கள் பிரஸன்னமாகி யிருந்தார்கள். கூட்டத்திற்கு வர இயலாததைக் குறித்து தங்கள் வருத்தத்தையும், கூட்டம் இனிது நடைபெற வேண்டும் என்ற தங்கள் ஆசையையும் பண்டிட் P. S. இராம சர்மா, ஸ்ரீ P. S. A. சர்மா, ஸ்ரீ M, D. நாகரத்னம், ஸ்ரீ A. ராகவ ராவ் ஆகியவர்கள் கடிதம் எழுதி இருந்தார்கள்.

முக்கியமாக ஸ்ரீ P. S. A. சர்மா அவர்கள் கடிதத்தில் A, B. பிரிவுகளைப் பற்றியும், இந்தியன் மெடிகல் காலேஜ் பெயரளவிலேயே காலேஜ் என்று இருக்கும்படியாக துரைத்தனத்தார் சிரத்தைக்குறைவுடன் அதை நடத்துகிறதைக் கண்டித்தும், கான்ஸ்டிட்யுவன்ட்

அஸெம்பிளி அங்கத்தினரும் நமது மண்டலத்தின் வைஸ் பிரஸிடெண்டுமாக வீருக்கும் டாக்டர் வி. சுப்பிரமணிய அய்யர் இதில் சிரத்தை அதிகம் எடுத்து கிளர்ச்சி செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

பிறகு பழைய கூட்டக் குறிப்புகள் காரியதரிசியால் படிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பட்டது.

பின்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன.

(1) அடுத்த தமிழ் நாடு ஆயுர்வேத மகா மண்டல சம்மேளனத்தை தஞ்சை ஜில்லாவில் நடத்துவதாகப் பொறுப்பேற்கும் ஸ்ரீ V. R. L. சர்மா அவர்களின் அழைப்பை ஏற்றுக் கொண்டு அவரைக் காரியதரிசியாகக் கொண்ட ஓர் வரவேற்புக் கமிட்டியை நிறுவ அவருக்கு இக் கூட்டம் அதிகாரம் அளிக்கிறது. அவர் சகாக்களைக் கலந்துகொண்டு ஜில்லாவில் எந்த இடத்தில் கூடுவது என்பதை அவரே தீர்மானிக்க அனுமதி யளிக்கிறது. 1948 ஏப்ரல் மாதத்தில் சம்மேளனத்தை நடத்திவிட வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(2) a. ஸ்கூல்ஸ் ஆப் இண்டியன் மெடிஸின் என்கிற ஸ்தாபனத்தையே பெயரளவில் காலேஜ் ஆப் இண்டியன் மெடிஸின் என்று மாற்றப் பட்டிருக்கிறது, அங்கு சேர்க்கப் படும் மாணுக்கர்களுடைய யோக்கியதாம்சங்கள் இந்திய வைத்தியம் பயிலுவதற்குப் போதியதாக இருப்பதாகத் தெரிய வில்லை. இம் மாணுக்கர்களின் யோக்யதையை பரிசீலனை செய்து சேர்ப்பதற்கும், மற்றும் இக் காலேஜில் இருக்க வேண்டிய புரொபஸர்கள், பிரின்ஸிபால் முதலியவர்களின் யோக்கியதாம்சங்களை நிர்ணயிப்பதற்கும் ஒரு அட்வைஸரி கமிட்டியை முன்பிருந்த காங்கிரஸ் மந்திரி சபை நியமித்தது. அது திருப்திகரமான அங்கத்தினர்களைக் கொண்டதாக இருந்தது. இந்த கமிட்டியின் ஆலோசனையைப் பெறுவதற்கு பதிலாக புதியதொரு தாத்காலிக அவஸர ஸமிதியை (Temporary Emergency Committee) அமைத்ததும் அதன் மூலமாக யோக்கியதாம்சங்களை நிர்ணயித்ததும் ஏன் என்று தெரிய வில்லை,

இந்த மஹா மண்டலத்தின் தலைவர் ஸ்ரீ துரைஸ்வாமி அய்யங்கார் அவர்களுக்கு கவர்ன்மெண்டிலிருந்து வந்த L. Dis. No. 60101 B/47 dated 18-7-47 கடிதத்தில் குறித்துள்ளபடி அவஸரநிமித்தமாக செய்த காரியம் என்ருலும் அதையும் முன்பிருந்த கமிட்டியே யோஜனை கூற யோக்கியதை உள்ளதே. அப்படிக்கிருக்கையில் இப் புதிய கமிட்டியினர் தேர்ந்தெடுத்த மாணுக்கர்கள் ஆயுர்வேதத்தின் உபயோகத்தைத் தெரிந்து கொள்ள சக்தி இல்லாமையினுலேயோ அல்

லது போதனு முறையில் உள்ள குறைபாடுகளினுலேயோ தத்காலம் உள்ள காலேஜ் ஆப் இந்தியன் மெடிஸினில் மேனுட்டு வைத்திய முறையையே அதிகம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி கலவரம் செய்ததாகக் கேள்விப்படுகிருேம். இவ்வித சங்கடங்களைத் தவிர்க்க முன்பிருந்த கமிட்டியைக் கொண்டே காலேஜின் வியவகாரங்களுக்கு யோஜனைகள் பெற்று காரியம் செய்வது தான் உசிதம் என்று இம் மண்டலம் தீர்மானிக்கிறது.

b. ஸ்கூல் நிலையில் 100 மாணுக்கர்களுக்கு மேல் படிக்க வந்தார்கள். காலேஜ் நிலையிலும் அவ்வளவு பெயர்களும் வரக் கூடும் என்பதைக் கவனிக்காமலேயே 50 மாணுக்கர்களுக்குத் தான் இடம் என்று தீர்மானித்த காரணம் என்ன ? அதிகச் செலவுக்குப் பணம் இல்லை என்று எண்ணிக்கையைக் குறைத்தார்களா ? அவ்விதம் தலைவாரியாக காலேஜ் மாணுக்கர்களுக்கென்று அதிகம் செலவு ஆனதாகத் தெரியவில்லை. மேலும் ஸ்கூல் நிலையில் செலவு செய்த துகையையும் இப்பொழுது துரைத்தனத்தார் ஏன் குறைத்து விட்டார்கள் என்றும் விளங்க வில்லை. இவ்வித சந்தேஹங்களைப்போக்கும் வகையில் தீவிரமாக சிரத்தையுடன் மாற்றி யமைத்துக் கொண்டாலொழிய துரைத்தனத்தார் இந்தியவைத்திய முறையின் அபிவிருத்திக்கு மறைமுகமாகக் கெடுதலையே தேடுகிருர்கள் என்று கருத வேண்டியிருக்கிறது.

(3) இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்களின் அஸோஸியேஷன் தயாரித்த கொஸ்சனேர் ஆயுர்வேதத்தின் அபிவிருத்திக்கு இடைஞ்சல் விளைவிக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் காலதேச நிலையில் பலமான அரண் பெற்றிருக்கிருர்கள். அவர்கள் கிளர்ச்சி செய்து சோப்ரா கமிட்டியை ஆயுர்வேதாபிவிருத்திக்கு விரோதமான மனப் பான்மையைக் கொள்ளும்படி தூண்டக் கூடிய ஸந்தர்ப்ப ஸௌகர்யங்கள் பெற்றுள்ளவர்கள் என்ற காரணத்தினுல் இந்த கொஸ்சனேரை நன்கு ஆராய்ந்து தவருன விஷயங்களை எடுத்துக் காட்டி தக்க பதில்களையும் பதில் நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்யும்படி தலைவருக்கு இக்கமிட்டி பூரண அதிகாரத்தை தருகிறது.

இத் தீர்மானங்களுக்குப் பிறகு வைத்திய சந்த்ரிகையை பலப்படுத்த அபிமானிகள் எல்லோரும் பல விதத்திலும் திரவிய ஸஹாயம் செய்ய வேண்டுமென்றும் விளம்பரங்களை வைத்தியர்கள் ஆர்வமுடன் அளிக்க முன் வர வேண்டுமென்றும் கமிட்டியினர் கோரிக் கொண்டார்கள்.

த. வீ. இராதாகிருஷ்ண சாஸ்த்ரீ, கார்யதர்சீ.



## Dr. ஸ்ரீ. T. G. ராமமூர்த்தி அய்யரின் பிரிவு.

மேற்படியார் சென்ற 30–10–47-ல் திடீரென்று தேக வியோக மடைந்துள்ளதைத் தெரிவிக்க மிக வருந்துகிறோம். ஸ்ரீ. Dr. T. G. ராமமூர்த்தி அய்யரவர்களைத் தமிழ் நாட்டில் உள்ள தேசீய வைத்தியர்கள் அனைவரும் நன்கறிவர். இவர் 1890-ளு செப்டம்பர்-மீ 11ௌ தஞ்சை ஜில்லா கணபதி அக்கிரகாரத்தில் ஜனித்தார். கோயமுத்தூர் மிருக வைத்தியசாலையில் 1908-லிருந்து 1912 வரையில் முதலில் கம்பவுண்டர் உத்தியோகத்திலிருந்தார். பிறகு 1912—1928 வரை தாராபுரம், பொள்ளாச்சி, ஈரோடு முதலிய இடங்களில் ஆலோபதிக் ஹாஸ்பிடல்களில் கம்பவுண்டராகத்தானிருந்தார். ஆயினும் தமிழ் வைத்திய சாஸ்திரங்களில் மிகுந்த ஊக்கத்துடன் நிரந்தரமான உழைப்பினால் உயர்தர பாண்டித்யம் பெற்றுவிட்டார். ஆகவே ஈரோடு முனிஸிபாலிடியில் ஒரு தமிழ்முறை தர்ம

வைத்தியசாலை இவருக்காகவே ஏற்பாடு செய்து அதில் பிரதான வைத்தியராக ஸ்ரீ. ராமமூர்த்தி அய்யர் 1928 முதல் 1946 வரையில் மிகுந்த கீர்த்தியுடன் தமிழ் வைத்தியத் தொண்டு புரிந்து வந்தார். இவருடைய வித்வத் தன்மையைப் பாராட்டி 'ஆயுர்வேத பண்டித' 'வைத்திய பதி' 'ஆயுர்வேதோபாத்யாய' என்று பட்டங்கள் இவருக்கு வழங்கப்பட்டன. 'The Hand-book of Indian Medicine or the Gems of Siddha system' என்று ஒரு நல்ல புத்தகம் ஆங்கிலத்தில் ஆராய்ச்சியுடன் எழுதி வெளிப்படுத்தியுள்ளார்.

1946-ல் உத்தியோகத்திலிருந்து விலகின பிறகும் சாஸ்திரங்களில் விசேஷ ஆராய்ச்சி செய்துள்ளவைகளை கிரமமாய் வைத்திய சந்திரிகை வாயிலாக பிரசுரம் செய்யத் தீர்மானித்து அவ்விதம் செய்ய ஆரம்பித்துள்ளார். சந்திரிகையில் பிரசுரமாயுள்ள கட்டுரைகள் ஸ்ரீ. ராமமூர்த்தி அய்யருடைய நுட்பமான அறிவை விளக்கிக் காட்டும். குருவின்றியே ஊக்கத்தினாலும் உழைப்பினாலும் ஒருவன் வித்யையிலும் ஓரளவு உயரலாம் என்பதற்கு ஓர் உதாரண புருஷரிவர். இவருடைய அகால மரணத்தால் இவரை யறியும் யாவரும் சோகமுறுவர். அன்னாரின் ஆத்மசாந்திக்கு ஸ்ரீ தந்வந்தரி பகவானைப் பிரார்த்திக்கிறோம்.

---

# திருச்சி ஆயுர்வேதஸபா

**14-வது வார்ஷிகோத்ஸவம் 1947-ளு டிஸம்பர்-மீ 6வ சனிக்கிழமை பகல் 2 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் வைத்ய விசாரத, வைத்ய வாசஸ்பதி, ஆயுர்வேதாசார்ய. பிரம்மஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகளவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ தந்வந்தரி பகவான் ப்ரார்த்தனைக்குப் பிறகு கார்யதர்சி ஸ்ரீ. V. R. ஸுப்ரமண்ய அய்யரவர்களால் ஆண்டறிக்கையும் வரவு செலவு இருப்பு திட்டக் கணக்கும் வாசிக்கப்பட்டு**

எல்லோராலும் அங்கீகரிக்கப் பட்டது. 15-வது வருஷத்திற்கு ஸ்ரீரங்கம் ஆயுர்வேத ஸேவாப்ரவீண. ஸ்ரீமான் V. ஸுப்ரமண்ய அய்யர் ஸபாத்யக்ஷராகவும் ஸ்ரீரங்கம், ஆயுர்வேதபூஷணம் ஸ்ரீ. P. G. கணபதி சாஸ்திரிகளவர்கள் உபாத்யக்ஷராகவும், திருச்சி ஸ்ரீ. V. R. ஸுப்ரமண்ய அய்யர் கார்யதர்சியாகவும், ஸ்ரீ. A. ராகவ ராவ். ஸ்ரீ. N. வெங்கடேச சர்மா, ஸ்ரீ. R. V. ராம சாஸ்திரிகள், ஸ்ரீ. K. சூலபாணி வாரியர் இவர்கள் நிர்வாஹ ஸமிதி மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஸ்ரீமான் S. V. ராதா கிருஷ்ண சாஸ்த்ரிகள் ஆயுர்வேத சிரோமணிஅவர்களால் ''ஸ்த்ரீகளின் ஆர்த்தவ தோஷம்'' என்பது பற்றி ஓர் வியாஸம் ஸம்ஸ்க்ருத பாஷையிலும், திருச்சி ஸ்ரீமான் N. வெங்கடேச சர்மா ஆயுர்வேத சிரோமணி அவர்களால் ''விஷூசிகா'' என்பது பற்றி தமிழ் பாஷையில் ஓர் வியாஸமும் எழுதி வாசிக்கப்பட்டன. பிறகு விசேஷ சர்ச்சைகள் நடந்தன.

கடைசியில் தலைவர் ப்ரஸங்கத்திற்குப் பிறகு வந்தனோபசாரத்துடன் மாலை 7 மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது.

# ஜீவரக்ஷணீ

கதிரவல்லூர் வாஸீ, ஆயுர்வேத வைத்தியர்
ஸ்ரீ K. P. வரதராஜய்யர் அவர்களுடைய
அநுபவ முறை

(1) நன்னாரிவேர் கஷாயம், (2) சித்தாமுட்டி வேர் கஷாயம், (3) அமுக்கிராக்கிழங்கு கஷாயம், (4) சீந்தில் கஷாயம், (5) வல்லாரை சார், (6) தண்ணீர்விட்டான் கிழங்கு சார், (7) ஜீவந்தீ (ஊசிபாலை) சார், (8) விளாமிச்சம் வேர் கஷாயம், (9) அதிமதுர கஷாயம். இவைகள் வகைக்குப்படி ஒன்று. கஷாயங்களிவைகள் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து அதில் நான்கு வீசை சீனை கற்கண்டு சேர்த்து ஷர்பத்து பதமாய்க் காய்ச்சி சீசாவில் பத்திரப்படுத்தி பின்பு 15 தினம் கிரமித்து ஒரு டீஸ்பூன் அளவு மருந்து, சுத்த ஜலத்திலாவது பாலிலாவது கலந்து சாப்பிடவும்.

**பத்தியம்:-** இது சாப்பிடும்போது ஜீரணிக்கத் தக்கப் போஷணையான ஆகாரம் உட்கொண்டு சுகாதாரமுறைப்படி நடந்தொழுகவும்.

**குணங்கள்:-** நல்ல ரஸாயனம். பொதுவாக துர்ப்பலத்தைப் போக்கும். நாடி தசைகளுக்கு ஊட்டமளித்து ரத்தத்தையும் பரிசுத்தியாக்கும்.

# :: சிசு பரிபாலனம் ::

[வைத்திய வாசஸ்பதி, ஸ்ரீ P. S. ராமசர்மா. கரூர்.]

(முன் மாதத் தொடர்ச்சி)

---

ये क्रियां विक्रियां कुर्वन्त्युपेक्षन्ते स्खलंति वा ।
खादंति ते परप्राणान् निजानि सुकृतानि च ॥

என்று வாக்படர் கூறி யிருப்பதற்கு எதிரிடையாக, வியாபார முறையில், பொறுப்பில்லாமலும் புண்ணிய பாபங்களை லக்ஷ்யம் செய்யாமலும் நடத்தப்படும் விதேச வைத்திய பிரசாரம் எவ்விதம் சிரஞ்சீவியாக இருக்கமுடியும்? அதன் நிழலில் வளரும் நாம் எவ்விதம் பின்னுல் சுகவாசிகளாக இருக்கமுடியும் என்றெல்லாம் நினைத்து அஞ்சியே இவ்விதம் கூறுகிறுர்கள் என்று ஊகிக்க நேருகிறது. ஆகையால், இவர்கள் இந்த மாத்ஸர்யத்தை விட்டு நமது முன்னோர்களின் ஆழ்ந்த ஞானத்தையும், சுயநலமில்லாத ஜீவ காருண்யக் கொள்கைகளையும் அஸ்திவாரமாகக் கொண்ட நமது சாஸ்திரத்தில் சிறிதும் பாரபக்ஷமில்லாமல் கவனம் செலுத்தினுல் சிசு மரண விகிதம் முக்காலும் குறைந்து விடும் என்பது வெளிப்படையான விஷயம்.

அனுரோக்யத்திற்கு முக்கிய காரணமான அடிமைத்தனம் நீங்கி, சுயராஜ்யம் கிடைத்தும் நமது அரசாங்கம் தேசிய வைத்யத்தைச் சரியான நிலைமைக்குக் கொண்டுவர அவசர முயற்சி எடுத்துக்கொள்ளாமல் இருப்பதைக் கவனிக்கும் பொழுது, இந்தியாவின் துரதிருஷ்ட காலமும் மேனுட்டாரின் சுக்கிர தசையும் இன்னம் எவ்வளவு மிச்சம் இருக்கிறது என்று கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது. தேசிய வைத்யக் கல்லூரிகளில் படிக்கும் தேசிய வைத்யர்களை தேசிய முறைப்படி மருத்துவப் பயிற்சி யுடையவர்களாகச் செய்வதுடன், தேசிய முறைப்படி பயின்ற தாதிகளையும் உதவிக்குத் தயார் செய்து, பொது ஜனங்களின்

விதேச நாகரீக மோகம் வெளியேறி விட்டால், சிசுமரண விகிதம் மிகவும் குறையும்.

நமது மாகாணத்திற்கே முக்கிய தலை நகரமானதால் மேனாட்டு முறைப்படி நிறைய சிசுஸம்ரக்ஷண விடுதிகளும் பால், ஆகாரம் முதலிய வசதிகளும் புதிதாக அமைக்கப் பட்டும், 1946-வது வருஷம் சென்னை நகரபரிபாலனசபை சுகாதார அதிகாரி அறிக்கையிலிருந்து சென்னை நகரத்தின் சிசு மரண விகிதம் மிகவும் குறைந்த அளவில்தான் குறைக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. 1000க்கு 213 விகிதம் மரணத்திலிருந்து 1000க்கு 185க்குத்தான் சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டிலும் சிசுமரண விகிதம் குறைக்கப் பட்டிருக்கிறதாக அறிவிக்கப் படுகிறது. இதைத் தவிர, 1000க்கு 35 விகிதம் வயிற்றிலேயே உயிரிழந்த குழந்தைகளாகவும் பிறக்கிறதாக அறிவிக்கப் படுகிறது. சுமார் ஐந்து வயதுக்கு முன்னமேயே ஏராளமான குழந்தைகள் உயிரிழக்க நேரிடுவதாகவும் தெரிகிறது-

இவ்விதம் சிசு மரண விகிதம் குறைக்கப் படாமல் இருப்பதைக் குறித்து நாம் மிகவும் வருத்தப் பட வேண்டியிருக்கிறது. ஏனென்றால் நமது தேசத்தில் பல காலம் சிசு மரணமே இல்லாமல் இருந்ததாக சரித்திரங்கள் கூறுகின்றன. சிசு மரணம் நேர்ந்தால் அது அரசனின் தப்பிதமாகக் கூட கருதப் பட்டு வந்தது. ஸ்ரீ ராம ராஜ்யத்தில் பூராவாகவும் அவர் சக்ரவர்த்தியாக இருந்த காலத்தில் ஒரே ஒரு சிசு மரணம் நேர்ந்ததாகக் கூறப் படுகிறது. சிசு மரணம் அரசனின் குற்றமாகக் கருதப் படும் அரசாங்கத்தில் சிசுமரணம் அதிகம் ஏற்பட நியாயமில்லை. அப்படி ஏற்பட்டாலும் கணக்கெடுக்கும் சிரமம் இல்லாமலேயே அது அம்பலத்திற்கு வந்து விடும். சிசு மரணத்தை விட துக்ககரமான விஷயம் ஜனங்களுக்கு வேறொன்று இருக்க முடியாது. வைத்ய சாஸ்திரத்தில் கூறப் படும் பத்திய விதிகளையே தர்ம சாஸ்திரத்தின் சாரமாக எடுத்துக் கொண்டு அதற்கு ஒத்தபடியாக அரசாக்ஷி செலுத்தும் தேசத்தில் எவ்விதம் சிசுமரணம் மட்டுமல்ல; பெரியோர் மரணம்

கூட ஏற்பட முடியும்? ஸ்ரீராமராஜ்யத்தைக்கூறும் வால்மீகி சொல்வதாவது:

न च स्म वृद्धा बालानां प्रेतकार्याणि कुर्वते ।
सर्वं मुदितमेवासीत् सर्वो धर्मपरोऽभवत् ॥
राममेवानुपश्यन्तो नाभ्यहिंसन् परस्परम् ॥

ஸ்ரீராமரின் கொள்கையைக் கடைப்பிடித்து ஜனங்கள் நடந்த படியால், எல்லோரும் நெறி தவருமலும் ஒருவரையொருவர் ஹிம்ஸிக்காமலும் இருந்தார்கள். அஹிம்ஸையைக் கடைப் பிடித்து நெறி தவருமல் சந்தோஷமாக ஜனங்கள் இருந்த படியால், வியாதியினுல் மட்டுமல்ல; அடி தடி அபாயங்கள் ஒன்றிலிருந்தும் சிசு மரணம் சம்பவித்து, பெரியோர்கள் குழந்தைகளுக்கு ஈமச் சடங்குகள் செய்யவே இல்லை என்று கருத்து. கொடிய பாபத்தின் பலனுகக் கருதப்படும் சிசுமரணம் அநீதியான அரசாங்கத்தில் பாபிகளான குடிகளுக்குத் தான் சம்பவிக்க முடியும் என்பது நமது சாஸ்த்ரங்களின் கருத்து.

स्नेहं दयां च सौख्यं च यदि वा जानकीमपि ।
आराधनाय लोकस्य मुञ्चतो नास्ति मे व्यथा ॥

என்று பவபூதி உத்தரராம சரிதத்தில் கூறிய படி, அரசன் இருந்தால் தேசத்தில் எவ்விதம் அனர்த்தங்கள் சம்பவிக்க முடியும். ஸ்ரீ தர்மபுத்ரர் காலத்திலும் சிசு மரணம் ஏற்படவில்லை என்பதற்கு ஆதாரமாக சரித்திரம் தென்படுகிறது. அப்பேர்ப்பட்ட நமது தேசத்தில் பஞ்ச பூதங்களின் (திரிதோஷங்கள்) தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்ட நமது வைத்ய சாஸ்த்ரத்தை அறிந்து நடக்கும் வைத்யர்களுடன் அரசாங்கமும் ஜனங்களும் ஒத்துழைத்தால் சிசு மரணத்தை முற்றிலும் தடுக்க முடியும் என்று சில வருஷங்களில் நிரூபிக்கலாம். பெருவாரியான சிசு மரணம் சம்பவிப்பதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டிய உண்மை, தகுந்த காலத்தில் தகுந்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளாததிலிருந்தே இவ்விதம் நேருகிறது என்பது தான்.

(தொடரும்)

# ॥ आयुर्वेदावतारः ॥

[ आयुर्वेदधुरीणः श्री वी. नारायण नायर् , वडवनूर् . ]

ब्रह्मदक्षाश्विमघवदात्रेयादीन् नतोऽस्म्यहम् ।
दोषत्रयविदो वैद्यान् लोकत्रयहितैषिणः ॥

वेदः खलु दुःखनिवृत्तये सुखप्राप्तये च यत्कर्तव्यं यदुपासनीयं यच्च ज्ञातव्यं तत्र प्रचोदयति पुरुषमिति, कर्मोपासनाज्ञानकाण्डरूपेण त्रिधा विभक्तो विराजत इति च सुप्रसिद्धमेतत् । रागद्वेषाद्यवखण्डितचित्तानां विषयसङ्गिनां स्वाभाविकं कृषिवाणिज्यादिकं कर्म संसारबंधदार्ढ्यापादकमेवेति इन्द्रियजयपूर्वकमधिकारभेदेन शास्त्रीयेष्वामुष्मिकेषु कर्मसु पुरुषानुपनयन्नेष स्वयमात्मसंस्करणपूर्वकं निवृत्तिमार्गाभिमुख्यं क्रमेणापादयन्नन्ते नित्यं निरतिशयं चानन्दमनुभावयतीत्यहो तस्यापौरुषेयस्य प्रभावातिशयः। वैदिके पथि प्रवर्तमाना ऐहिकमामुष्मिकं चाभ्युदयमृच्छन्ति, क्रमान्निष्कामभावेन सत्त्वशुद्ध्या आत्मानन्दरूपं निश्रेयसं चेति शास्त्रसज्जनप्रसिद्धमिदं तत्त्वम्। तथा च वेदान्तेनोपनिषदाख्येन यदुपदिष्टं तदेव वेदानां मुख्यं फलं तदुपायभूतं तु कर्मोपासनाकाण्डनिर्दिष्टमवान्तरं फलमिति परिज्ञायते। वेदार्थानामन्यान्यविधया विस्तरणे प्रवृत्तानि वेदबोधितार्थसाधकानि च शास्त्राणि वेदाङ्गानीत्युपवेदा इति, तदुपबृंहकानि पुराणानीत्यादिः सांप्रदायिकोऽयं विभागः। तत्र धनुर्वेदो गान्धर्ववेद स्थापत्यवेद आयुर्वेद इति चत्वार उपवेदा इत्याख्यायन्ते। ऋग्वेदस्य यजुर्वेदस्याथर्ववेदस्य आयुर्वेद उपवेद इति दृश्यते मतभेदः। वातादिदोषवाचकशब्दानां "मस्तिष्कवृक्कगवीन्यादि"शब्दानां च वेदवचनेषु तत्र तत्र दृश्यमानत्वमन्यच्च तत्तन्मतानामर्थापनाय प्रतिपादितमवलोक्यते। सर्वथा वैदिककर्मोपासनादिसाधनस्य शरीरस्य परिरक्षणमायुर्वेदप्रयोजनमिति वेदसमानार्थकत्वादस्योपवेद-

त्वग्रहणमुपपन्नमेव । यद्यपि धनुर्वेदादयो वैषयिकमनर्थं परिहरन्तः सुखातिरेकं विषयवैचित्र्यनिबन्धनमुपस्थापयन्तश्च सत्यमवान्तरं वेदस्य फलं जनयन्ति तथा-ऽपि धर्मसाधनेष्वाद्यस्य शरीरस्योत्पत्तिस्थितिविकृतिविध्वंसानां हेतुस्वरूपादिकं प्रतिबोधयंस्तस्य स्वास्थ्यरक्षणेन पीडापरिहरणेन च सुखमायुश्च संपादयन्नेष सुप्रतिष्ठितो भगवानायुर्वेदसुधाकरो यद्येवं न ध्रियते तर्हि धर्मसंप्रदायविकल-मनात्मबोधवृथास्थूल "मिदमन्धं तमः कृत्स्नं जायेत भुवनत्रयम्" इति स्फुटमवगम्यते । अत एवायं पंचमो वेद इति स्तुवन्ति तत्त्वविदः । आरोग्य-हीनेषु कर्मासमर्थेषु हि विधिनिषेधरूपाश्चोदना बधिरकर्णजापवन्निष्फला एवेति हन्तायुर्वेदार्थमनुजीव्य यदि सफलानि भवन्ति वैदिकदर्शनानि । "समधातुः समाग्निश्च समदोषमलक्रियः । प्रसन्नात्मेन्द्रियमनाः स्वस्थ इत्य-भिधीयते" इत्युक्तलक्षणमारोग्यमात्मेन्द्रियमनःप्रसादात्मकं विषयजालपार-तन्त्र्यमन्तरेणानन्दं जनयतीत्येकमिदं ब्रह्मानन्दपदं जगति तामसैरप्यनुभूयते । विवेकवैराग्यादिफलकस्य श्रवणमननादेर्यमनियमाद्यनुष्ठानस्य चारोग्यदेवता प्रसादशरणस्यावलम्बभूतोऽयमायुर्वेदः कथं न भवत्यन्तरङ्गं मोक्षसाधनम्? "नायमात्मा बलहीनेन लभ्य" इति खलूपदिशत्युपनिषत् । "शान्तो दान्त उपरतस्तितिक्षु"रित्यादिसाधकलक्षणेषु बलमायुर्वेदविधिनिष्ठाजन्यमेकमवष्टम्भकं भवति । बलिष्ठयापि जिज्ञासया बलहीनश्चेत्कथमेष शीतवातादीन् सहते? कथं च भोगजालं चिराभ्यस्तमकाण्डे संन्यस्यति? कथंकारमस्य दुर्बलमन्तः-करणमेकाग्रं समाहितं च भवेत्? कामं दुर्बला विकलाङ्गा अपि धर्मार्थसाधने प्रवर्तन्ते प्रजाश्च प्रजनयन्ति । बलवन्त एव परं तत्र समर्थास्तृप्ताश्च भवन्तीति न केवलं, किन्तु तत्परित्यागरूपे वर्त्मनि सुधीरं पदं निदधाना "स्तेन त्यक्तेन भुञ्जीत" एवात्मानन्दमिति स्पष्टमिदं वैलक्षण्यमनयोः । "सुखं च न विना धर्मात्तस्माद्धर्मपरो भवे" दित्यादिभिर्वचनैर्धर्मशास्त्रं, "न कंचिदात्मनः शत्रुं नात्मानं कस्यचिद्रिपुम् । प्रकाशयेन्नापमानं न च निःस्नेहतां प्रभोः" इत्यादि-भिरर्थशास्त्रं, रसायनवाजीकरणप्रयोगैः कामशास्त्रं, "नित्यं हिताहारविहारसेवी" "आत्मवत्सततं पश्येदपि कीटपिपीलिकं" इति बहुधा आत्मकैवल्यतत्त्वं चायुर्वेदोऽयमुपदिशति । "बुद्धिप्रसादं बलमिन्द्रियाणां धातुस्थिरत्वं ज्वलनस्य

दीप्तिम्" च जनयत्तु क्रियाविशेषेषु चौत्सुक्यमुत्पादयतीति सर्वं शास्त्रार्थमनुगृह्णात्ययमित्यहो माहात्म्यविशेषः ॥

तस्यास्य स्पृहणीयस्याद्भुतरचनासमुपबृंहितस्यायुर्वेदशास्त्रस्य प्रथभावतरमणिपीठप्रतिष्ठां प्रकटमवेक्षितुकामाः पण्डिताः पाश्चात्यविज्ञानविद्युद्दिधट्टितदृष्टयोऽपि पौरस्त्यदर्शनप्रभावलेखयान्तः समाकृष्टा इव कतिपये पृच्छन्ति "किं नामायुर्वेदस्य परमं मूलतत्त्व"मिति "रोगहेतुचिकित्सादियुक्तयस्तत्संबद्धान्युच्चावचानि विकल्पनानि च कथमेवमृषयः प्रत्यपद्यन्ते"ति च। पाश्चात्यवैद्यकलाविजयवैजयन्तीनीरंध्रितेऽस्मिन्नन्तरिक्षे प्राचीनर्षिवर्याणां सा दिव्या दृष्टिरेवं मनीषिभिः कथंकारेणानुगृह्यत इति प्रमोदस्थानमेतत्। अत एव यथा नायमुदयाचल एवास्तमेष्यति, यथा नायमुज्वालित एव निर्वाप्यते, यथा चायमङ्कुरित एव नावलुप्यते, तथा कालदेशोचितदोहदोपहरणेन तात्पर्येण प्रत्युद्गन्तव्यः सत्कर्तव्यश्चायं प्रश्न इत्यत एव हेतोः, न पुनस्तावन्मात्रात् पाण्डित्यात्, यथाज्ञातमायुर्वेदाधिष्ठानतत्त्वं प्रकृत्य किमपि विचारशीलानामत्र भवतां पुरतः समुपजिहीर्षत्ययं जनः ॥

श्रौतः किल भगवान् कपिलमहामुनिरस्य जगतो विचित्रं स्वरूपमतिसूक्ष्मया दृशा निरीक्ष्य सर्वकारणं किमपि तत्त्वमव्यक्तं नामाविश्चकार, क्रमेण प्रकटीभवन्ति महत्तत्त्वादीनि कारणकार्यभावशृङ्खलासंघटितानि विभज्योदाजहार चेति तत्त्वदर्शनपद्धतिरेषा कपिलोपज्ञा सर्वैरन्तर्मुखैरभिष्टुता। एतद्धि सांख्यदर्शनरत्नमत्र सुरसरस्वत्या विशालं वक्षःस्थलमलंकरोति तत्स्वरूपमत्र संक्षेपेण प्रस्तूयते। इह खलु नानारूपेषु पदार्थेषु सामान्यविशेषभावेन गृह्यमाणेषु सूक्ष्मतरं किमप्येकत्वमनुस्यूतमुपलभ्यते। इन्द्रियैर्गृह्यमाणाः शब्दादिगता गुणविशेषा बुद्ध्यानुमीयमानास्तत्संबन्धाश्च स्थूलसूक्ष्मादिभावेन विकल्पिताः सर्वेऽपि जडचेतनोभयरूपात्तस्माद्बीजभूतादव्यक्तादाविर्भवन्तो विकारा एव। विकारात्मकेषु द्रव्यादिषु दृश्यमाना विषमा गुणास्तद्बीजे किमप्यनिर्वचनीयमेकत्वमभिप्रपद्यमाना अवतिष्ठन्ते। सुखदुःखमोहात्मकमनुभवं प्राणिनामन्तःकरणे प्रतिपादयन्तश्चामी विषमा गुणास्तत्समवेतचैतन्यजाड्यमात्रानुसारेण

विविच्य सत्वं रजः तमश्चेति संज्ञया व्यपदेष्टव्याः । सत्त्वादिगुणसाम्यं, प्रधानं, प्रकृतिरिति पर्यायैस्तदव्यक्तं जगत्कारणमेवं व्यवह्रियते । ततः स्वभावादाविर्भवन्तो बुद्धिरहंकारः पञ्चतन्मात्राणि च सूक्ष्माणि आकाशवाय्वग्निजलभूरूपाणि च स्थूलानि पुरुषाधिष्ठितायाः मूलप्रकृतेः सकाशात् गुणसाम्यरूपाद्व्यक्तादाविर्भूतानि सर्वं जगदेतदभिव्याप्यावभासन्ते । अत एव भौतिकाः पदार्थाः सात्त्विकराजसतामसभेदेन गृह्यन्ते सांख्यैरन्यैश्च दार्शनिकैः । सविकल्पकमेतदव्यक्तनिरूपणमन्ते निर्विकल्पमपरिच्छिन्नमेवानुभूयत इति परीक्षया निर्धार्याचार्याः रहस्यविदः कृतार्थाः किल बभूवुः ॥

यथा जगत्कारणपद्धतिमेतामनुजीव्याव्यक्तावधि सांख्यैर्दत्तावलम्बा वेदान्तिनः स्वकीयं समयमद्वैतमुद्धृत्य नेपथ्यान्तरमिवाश्रयन्तो मायामयं सर्वकारणमपश्यन्, तथास्माकमायुर्वेदाचार्याः पुनर्वसुरात्रेयस्तत्सहजीविनश्च परमर्षयः पुरा सांख्यदृष्टामेव कामधेनुमिष्टार्थान् दुदुहुः । ते हि सत्त्वादिगुणत्रयसाम्यमव्यक्तं तद्वैषम्यप्रयुक्तं सूक्ष्मस्थूलभूतसर्गं भौतिकद्रव्यजालानुगतान् भूतगुणमात्रविशेषांश्च सत्त्वशुद्ध्यादिजन्यं मोक्षोपायमध्यात्मसंस्कारं च निरीक्ष्य तृप्तिमलभमाना विचारतपसा पुनरस्वास्थ्यहेतोः मनुष्यशरीरगतस्य भावविशेषस्यान्वेषणे केवलं दत्तदृष्टयस्तस्मिन्नेवाव्यक्ते सत्त्वादिगुणतादात्म्यमापन्नं दोषसाम्यं नाम किमपि तत्त्वं प्रणिधानेन प्रत्यक्षीचक्रुः । जगदुपादानकारणात्मना समवेताः सौम्याग्नेयवायव्यरूपाः भौतिकस्थूलद्रव्यगोचरा दोषधर्मा मूलप्रकृतिरूपेषु सत्त्वादिगुणेषु प्रत्येकमवरुद्धास्तैर्मुनिभिरुल्लिखिताः तेषामत्र विचारप्रकारः किंचिदिव संगृह्यते । (क्रमशः)

## அறிவிப்பு

தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் 15-வது வருஷ மஹா ஸம்மேளனம் 1948-ல் ஏப்ரல் மாதம் கும்பகோணம் நகரில் நடைபெறும். ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீ லக்ஷ்மீகாந்த சர்மா, வரவேற்பு சங்கக் கார்யதர்சி, ரெட்டிராயர்குளம் கீழ்கரை, கும்பகோணம், என்ற விலாஸத்திற்கு ஸம்மேளனத்தைப் பற்றிய விவரங்களுக்கு எழுதிக்கொள்ளவும்.

ஸ்ரீ தந்வந்தரயே நம:

1948 ஜூன் மாதம் 7-ம் தேதி வைத்திய சந்திரிகை வெளியாகவில்லை. வாசக நேயர்கள் பலர் பத்திரிகை வராததிற்குக் காரணம் கேட்டு எழுதியுள்ளார்கள். சென்ற மே மாதம் 29, 30 தேதிகளில் கும்பகோணம் நகரில் தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் 15-வது வருஷ ஸம்மேளனம் நடைபெறுவதாக இருந்தது. அந்த ஸம்மேளனத்தின் விவரங்களை எல்லாவற்றையும் சேர்த்து 1948 ஜூன் மாத வைத்தியசந்திரிகையை ஸம்மேளனத்தின் மலராக வெளிவிட விரும்பி இருந்தோம். இதர விஷயங்களை அச்சுக்குத் தயார் செய்யவில்லை. ஸம்மேளனம் வேறு தேதிக்கு மாற்றப்பட்டது என்று மே 27 தேதிதான் எமக்கும் அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்பு, பிரதி மாதம் 7 தேதிக்குள் சந்திரிகை போஸ்டு செய்யப்பட வேண்டுமென்ற நிர்பந்தமிருப்பதால், ஜூன் 7௳ க்குள் சந்திரிகையை அச்சிட்டு வெளியிட போதிய அவகாசமில்லை. ஆதலால் ஜூன், ஜூலை இரண்டு மாத சஞ்சிகைகளையும் சேர்த்து இப்போது வெளியிட்டுள்ளோம்.

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

## சேலம் ஜில்லா கிளைச்சங்கம்.

## (General body Meeting.)

## பொதுக் கூட்டம். 9—5—48.

இன்று ஷை சங்கத் தலைவர் டாக்டர் S. A. சஞ்ஜீவி அவர்கள் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ஷை தலைவர் அவர்களால் ஆயுர்வேத இந்திய வைத்தியத்தின் மேன்மையைப் பற்றி நீண்ட பிரசங்கம், சர்ச்சை நடத்தப்பட்டது.

### தீர்மானம்.

ஷை கிளைச்சங்க விதிகளும், நோக்கங்களும்.

(Aims and Objects.)

1. நோக்கங்கள் :

அ) இந்திய வைத்தியர்களாகிய ஆயுர்வேத சித்த யூனனி வைத்தியர்களாகிய நாம் அனைவரும் நமக்குள் பாகுபாடில்லாமல் இந்திய வைத்தியர்கள் என்ற முறை

யில் ஒன்று சேர்ந்து நம் நாட்டு வைத்தியம் முன்னணிக்கு கொண்டுவரப் பாடுபடுதல்.

ஆ) மாதம் ஒருமுறை கூட்டம் நடத்தி வைத்திய விஷயங்களை பிரசங்கித்து ஒருவருக்கொருவர் ஆவன செய்து முடியுமானல் தகுந்த நூற்களை பிரசுரித்தல்.

இ) நம் நாட்டு வைத்தியத்திற்கு தற்போது ஏற்பட்டுள்ள சீர்கெட்ட நிலையை நீக்கப் பாடுபடுவதுடன் நாட்டு வைத்தியர்களிடையே ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டுவன செய்தல்.

ஈ) மேநாட்டு முறையாகிய அலோபாதிக் வைத்தியர்களைவிட நாம் எந்தவிதத்திலும் குறைந்தவர்களல்லவென்றும் அவர்களைவிட நமது வைத்தியமே உயர்ந்தவைகளாகுமென நிரூபணம் செய்யவேண்டுவன செய்து அவர்களைப் போல சகலவித அந்தஸ்தும் சர்க்காரிடம் பெறப் போராடுதல்.

உ) பழைய முறையிலுள்ள சில குறைபாடுகள் நீங்க விஞ்ஞானரீதியில் ஆயுர்வேத முன்னேற்றத்திற்கு உழைத்தல்.

## 2. சட்டவிதிகளும் ஒழுங்கு முறைகளும் :

1) அங்கத்தினராகச் சேருபவர்கள் பிரவேசக்கட்டணம் அணு 0–8–0-ம் வருடச் சந்தா ரூ. 4–8–0-ம் (கிளைச் சங்க சந்தா ரூ. 1–8–0-ம் தலைமைச் சங்கத்துக்கு வைத்திய சந்திரிகைக்கு ரூ. 3–0–0-ம் ஆக ரூ. 4–8–0) கட்டவேண்டும்.

2) அங்கத்தினர்களுக்கு வைத்திய சந்திரிகா பத்திரிகை பிரதி மாதம் தலைமைச் சங்கத்திலிருந்து கிடைக்கும்.

3) அங்கத்தினர் கணக்கு பிரதி ஆங்கில வருட ஜனவரி-மீ முதல் டிசம்பர் முடிய கணக்கு வைக்கப்படும்.

4) கட்டணங்கள் காரியதரிசியிடம் கட்டி ரசீது பெற வேண்டும்.

5) மூன்று வருஷத்திற்கு ஒருமுறை தேர்தல் நடத்துதல்.

6) பிரதி ஆங்கில மாதம் கடைசிவாரம் ஞாயிற்றுக் கிழமை கூட்டம் நடைபெறும். அவசரக்கூட்டம் எந்தச்

சந்தர்ப்பத்திலும் நிர்வாகக் கமிட்டியாரால் கூட்டப் படலாம்.

7) மூன்று மாதங்கள் தொடர்ந்தாற் போல் நிர்வாக அங்கத்தினர் கூட்டத்திற்கு வரத் தவறினால் அவர் அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர் என்று பொருள் படும். மறுபடியும் தகுந்த காரணங்காட்டி பிரவேசக் கட்டணம் கட்டி சேர்ந்து கொள்ளலாம்.

8) காரணம் கூறாமல் ஒருவரை அங்கத்தினராகச் சேர்க்கவோ, மறுக்கவோ நிர்வாகக் கமிட்டியாருக்கு அதிகாரம் உண்டு.

9) இச்சங்க அங்கத்தினர் இதர வைத்திய சங்கங்களிலும் சேர உரிமையுண்டு.

10) சங்கத்துக்கு எதிர்ப்பாளராக யாராகிலும் இருப்பதாகப் பட்டால் அவர்களை அங்கத்தினர் பதவியினின்று நீக்க நிர்வாகக் கமிட்டியாருக்கு அதிகாரம் உண்டு.

11) வரவு சிலவு கணக்குகளை பதிந்து முழுவிவரத்துடன் வருடத்துக் கொருமுறை பொதுக் கூட்டத்தில் காரியதரிசியால் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

12) உடனடியாக ஏற்படும் சிலவு வகைகளுக்காக ரூ. 25-0-0 காரியதரிசியிடம் கையிருப்பாக வைத்திருக்கலாம். அதிகப்படியான தொகையை பொக்கிஷதார் வசம் ஒப்படைத்து தகுந்த பாங்கியில் போட்டு கணக்குக் காட்டக் கடமைப் பட்டுள்ளார்.

13) ஒவ்வொரு கூட்டமும் தலைவர் முன்னிலையில் கூட்டி அங்கத்தினர் வசம் கையொப்பம் பெறவேண்டும். தலைவர் ஊரிலில்லாத சமயம் அல்லது அசந்தர்ப்பங்கள் காரணமான சமயத்தில் உபதலைவர் தலைமையில் கூட்டம் நடத்தலாம். அவரும் இல்லாத பக்ஷத்தில் அங்கத்தினர் ஒருவர் தலைமையில் கூட்டம் நடத்தப்படலாம்.

14) அவ்வப்போது தீர்மானிக்கப்படும் முக்கிய தீர்மானங்கள் தலைமைச் சங்கத்துக்கு அனுப்பப்படலாம்.

பிறகு நிர்வாகக் கமிட்டிக்கு சித்தவைத்திய பண்டிட் S. V. ராஜரத்தினக் கவுண்டர் அவர்களை நிர்வாகக் கமிட்

டிக்கு அங்கத்தினராக சேர்க்கப்பட்டு காரியதரிசி வந்தனோ பசாரத்துடன் கூட்டம் முடிவுபெற்றது

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

## சேலம் கிளை

*மாதாந்தரக் கூட்டம் 30—5—48.*

ஷெ சங்கத்தலைவர் டாக்டர் S. A. சஞ்சீவி அவர்களின் தலைமையின் கீழ் கூடிக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மே-மீ 17-ந் தேதி சம்பூரில் மகாராஷ்டர பிராந்திய வைத்திய சம்மேளனத்தின் ஆண்டுவிழாவை ஆரம்பித்து வைத்து பம்பாய் பிரதமர் கேர் அவர்கள் பேசுகையில் அவர் ஆயுர்வேத காலேஜ், வைத்தியசாலை அதிகப்படுத்துவதை ஆதரித்தும் பம்பாய் சர்க்கார் ரூ. 4 லட்சம் ஒதுக்கி வைத்திருப்பதையும், இதர முறைகளில் சர்க்கார் ஆயுர்வேதத்திற்கு உதவ சட்டமாக்க ஏற்பாடு செய்வதை பத்திரிகை வாயிலாக அறிந்து பம்பாய் பிரதமர் பி. ஜி. கேர் அவர்களை ஆதரித்து அவர்களுக்கு இக்கூட்டம் நன்றி கூறியது.

2. மே-மீ 23வ உதகையில் நீலகிரி ஜில்லா வைத்திய சங்கக் கூட்டம் கர்னல் டிசௌஸா ஐ. எம். எஸ். தலைமையில் கூடி பேசுகையில் டாக்டர் யூ. கிருஷ்ணராவ் அவர்கள் சென்னை எல், ஐ. எம், காலேஜை இழித்துப் பேசியதுடன் அதற்காக சர்க்கார் செலவிடுவது வருந்தத்தக்கது என்று கூறியதையும், பம்பாய் டாக்டர் கோஹியார் பேசுகையில் பம்பாயில் எல். சி. பி. எஸ். வைத்தியர்களுக்கும் எம். பி. பி. எஸ் டாக்டர்களுக்கும் பம்பாயில் போட்டியிருப்பது போல் சென்னை மாகாணத்திலும் எம். பி. பி. எஸ். க்கும் எல். ஐ. எம். டாக்டர்களுக்கும் போட்டி ஏற்படலாமென்று கூறியதையும், கர்னல் பரூச்சா ஆயுர்வேத யூனனி வைத்தியங்களுக்கு பலத்த எதிர்ப்பு இருப்பதாக கூறி இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் உள்ள வைத்தியமாகிய ஆயுர்வேதம் சரிப்பட்டு வராதென்றும்,

நாட்டு முறையில் கண்டுபிடிக்கும் வைத்தியர்கள், மருந்து களை ஆங்கில வைத்தியர்களிடம் சமர்ப்பித்து அவர்கள் மூலமாக விஞ்ஞான ரீதிக்கு அனுப்பவேண்டும் என்று கூறியதையும், ரிஜிஸ்தர் செய்துகொள்ள வைத்தியர் களுக்கு கவர்ன்மெண்ட் வீணாகச் செலவிடுகிறதென்று கூறி யதையும் இக் கூட்டம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

3. பம்பாய் மாகாண பிரதமர் கேர் ஆதரவு காட்டு வதுடன் உலக விஞ்ஞான வைத்திய கலைக்கே தாயா கியது ஆயுர்வேதம் என்பதை சாஸ்திர அத்தாட்சியுடன் பல அறிஞர்கள் வெளியிட்டுள்ள நூல் ஆதாரத்துடன் டாக்டர் S. A. சஞ்சீவியால் விரிவாகப் பேசப்பட்டது.

4. L. I. M. டாக்டர்களுக்கு ஸ்தலஸ்தாபன வைத் தியசாலைகளில் சலுகையுடன் ஸ்தானம் கொடுப்பதுபோல அவர்களைப் போலவே பயின்று பயிற்சி பெற்ற A. M. A. C. வைத்தியர்களுக்கும், இதர ஆயுர்வேத காலேஜிகளில் பயின்றவருக்கும், மற்றும் திறமையுள்ள B class ரிஜிஸ்டர் மெடிகல் பிராக்டிஷனர்களுக்கும் சலுகை காட்டி ஸ்தா னம் கொடுக்கப்பட வேண்டுமென்று டாக்டர் M. S. அறிவானந்தம் A. M. A. C. அவர்களால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. வங்காள ஆயுர்வேத கௌன்சிலில் அதாவது General council and state Faculty of Ayurved Medicine, Calcutta.—வில் ரிஜிஸ்டர் செய்துகொண்ட வைத்தி யர்களை சென்னை சென்டிரல் போர்டு ஆப் இந்தியன் மெடி சின் கழகத்தில் யாதொரு விசாரணையின்றி பதிவு செய்து கொள்ள வேண்டுமென்பதாக டாக்டர் R. K. பழனியப்பா H. L. M. S. அவர்களால் ஓர் தீர்மானம் கொண்டுவரப் பட்டு இது எல்லோராலும் ஆமோதிக்கப்பட்டது.

6. இனிமேல் இச்சங்கக் கூட்டங்கள் சேலம் அரிசி பாளையம் சஞ்சீவி ஆஸ்பத்திரி கட்டடத்தில் கூட்டவேண்டு மென தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப் பட்டது.

# "சரபேந்திரர் வைத்ய முறைகள்"

Dr. S. VENKATARAJAN, L. I. M. (Regd)
*Saraswathi Mahal, Tanjore.*

சரபோஜி ராஜா II. (1802—1832)ன் காலத்தில் கலைகள் முன்னேற்றமடைந்துள்ளதற்கு "ஸரஸ்வதி மஹால்" ஒரு முதன்மையான அத்தாக்ஷியாகும். இந்திய வைத்யம் ஒரு நூற்றுண்டிற்கு முன் எவ்விதம் முன்னேற்றம் அடைந்திருந்தது என்பதை இங்குள்ள வைத்யச் சுவடிகளை ஆராய்ந்தால் புலப்படும். மேலும், இவர்கள் காலத்தில் "தன்வந்தரி மஹால்" என்ற வைத்ய சபையையும், மருந்துத்தொழிற்சாலையையும் ஏற்படுத்தி தக்கவைத்யசாஸ்திர பாண்டித்ய முள்ள பல அறிஞர்களைக் கொண்டு, சம்ஸ்க்ருதம், தெலுங்கு, மஹாராஷ்டிரம், ஹிந்துஸ்தானி முதலிய பல பாஷைகளிலுள்ள பற்பல வைத்ய முறைகளைச் சேகரித்து, அந்த முறைப்படி மிக்க திரவியம் செலவிட்டு ஒளஷதங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அந்த அபூர்வ ஒளஷதங்களை எல்லாம், இலக்கண இலக்கிய தேர்ச்சியுள்ள தமிழ்ப் புலவர்களைக்கொண்டு செய்யுள்களாக இயற்றச் செய்திருக்கிறர். அவ்வாறு சேர்த்துள்ள வைத்யச்சுவடிகள் "சரபேந்திரர் வைத்ய முறைகள்" என்ற பெயருடன் 17 சுவடிகள் இருக்கின்றன. அவைகளிலிருக்கும் அபூர்வ முறைகளை புஸ்தக ரூபமாகச் செய்ய தற்போதைய கவர்ன்மெண்டாரும், சரஸ்வதி மஹால் நிர்வாகிகளும், வேண்டிய ஊக்கமெடுத்துக் கொண்டிருக்கிறர்கள். முதலாவது புஸ்தகமாகிய "சரபேந்திரர் வைத்ய முறைகள்', என்ற தொடரில் குன்மரோக சிகித்ஸா முறை கூடிய சீக்கிரம் வெளிவரும்.

இம்மாதிரியுள்ள பற்பல சுவடிகளிலிருக்கும் அபூர்வமான மருந்து முறைகளை ஆராய்ந்து உலகோர்க்கு ஈன்று

அதன் பிரயோஜனங்களை அடையச் செய்யவேண்டிய அவச்யத்தைக் கருதி "கர்பிணி பாலரோகச் சுவடி"யி லின்று, ஆங்காங்கு சொல்லப்பட்டதும், எளிதில் கிடைக் கக்கூடியசரக்குகளை உடையதுமான மருந்துகளைமாத்திரம் மொழிபெயர்ப்புடன் "வைத்ய சந்திரிகை" வாயிலாக வெளியிடலாம் என்ற உத்தேசம். இச்சுவடியில் சுமார் 220 மருந்து முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதி லுள்ள செய்யுள்களை இயற்றியவர் திருவேங்கடத்தான் பிள்ளை என்பவர். இம்மருந்துகளிலுள்ள சரக்குகள் யாவும் குணம் பொருந்தியதாகையால், அந்தந்த வியாதி களுக்கு பயமில்லாமல் உபயோகப்படுத்தி பலனை அடைந்து கொள்ளலாம். இந்த மருந்துகள் பலவற்றையும் நமது அனுபவத்திற்கு கொண்டு வந்துவிட்டால், மேனாட்டு வைத்ய முறையே தேவையில்லாமல் செய்துவிடலாம்.

### 1. மலட்டுப் புழு விழ மருந்து

**ஆடாதோடையினிலையுஞ் சிறு குறிஞ்சியிலை**
**முருக்கினலர்ந்த பூவுங்**
**கூடவரைத்துச் சிவந்த வான் பாலின்**
**மூன்று நாள் குழப்பியுண்ண**
**வாடி மலட்டுப் புழுவும் வழுவி விழும்**
**மாதினுக்கு மகவுண்டாகும்**
**ஆடவர் திலகனுஞ் சரபேந்திர**
**வண்ணலாரருளிய தாமே.**

(இ-ள்.) ஆடாதோடை இலை, சிறுகுறிஞ்சி யிலை, மலர்ந்த கல்யாண முருக்கின் (முள் முருக்கு) புஷ்பம் இம் மூன்றையும் சம எடை எடுத்துச் சிவப்புப் பசுமாட்டின் பாலிலரைத்து 3 நாள் குழப்பிச் சாப்பிட மலட்டுப் புழு விழுந்துவிடும். மலட்டு ஸ்திரீக்கு கர்ப்பமுண்டாகும்.

### 2. கர்ப்பம் தரிக்க மலட்டுப் புழு விழ மருந்து.

**வெல்ல மோருண்டை குப்பைமேனிச்**
**சாறு முக்குடனே மிகுந்த காயஞ்**
**சொல்லும் வராகனெடை யொன்றுங்**
**கலந்து கலசத்திலிட்டுத் துணியால் மூடி**
**மெல்ல வெயிலிடை வைத்து விலகு**
**நாள் மூன்று முணவே மலட்டுப்**

பொல்லாத புழுவீழு மூன்றுமுறை செயிற்
பூவை பொருந்துஞ் சூலே.

(இ-ள்.) வெல்லம் ஒரு கட்டி, குப்பைமேனிச்சாறு 1 உழக்கு, (சுத்தமான பொரித்த) பெருங்காயம் 1 வராகனெடை இவற்றை ஒன்று கலந்து ஒரு புதுச் சட்டியில் வைத்து வெள்ளைத் துணியினால் வாயைக் கட்டி வெயிலில் வைத்து மாதவிடாய் காலத்தில் 3 நாளும் சாப்பிட, கருப்பையிலுள்ள மலட்டுப் புழு விழுந்து விடும். இம்மாதிரி 3 முறை செய்தால் அந்த ஸ்திரீ கர்ப்பமாவாள்.

## 3. கர்பமுண்டாக மருந்து.

தருணிக்குச் சவுக்கியமுண்டாம்
பிள்ளையுண்டாகுஞ் சந்திர சூரியர்
கிரணத்திலே பிரமி இலைச்சாறதுரி
கொள்ளக் கெற்பமுண்டாம்
வருணத்திலுயர்ந்தோர்க்கு மாதானஞ்
செய்தவரான் மகங்கள் செய்வித்
திரணத்திரயந் தவிர்ந்த வெங்கள்
சரபேந்திரனரிசைத்தவாறே. (50)

(இ-ள்.) பிரமி இலைச்சாறு அரைப்படி எடுத்து சூரியக்கிரணமும் சந்திரக்கிரணமும் படும்படியாக வைத்து அதைப் பருகி வர அந்த ஸ்திரீக்கு கெற்பமுண்டாகும். சௌக்யமும் உண்டாகும்.

குறிப்பு:— இச்செய்யுளின் பின்பாதியில் அடங்கியிருக்கும் பொருள் சரபேந்திர பூபதியின் குண விசேஷத்தை குறிக்கிறது.

## 4. கர்ப விப்ருதிக்கு மருந்து.

பசுவின் பாலிரண்டு பொங்கலானவுடன்
வெள்ளுள்ளிப் பருந்தோனீக்கி
யிசைய ஒரு சிரங்கையிட்டுத் துழாவியே
காய்ச்சிய பின்னிறக்கி வைத்து
நசையான பனை வெல்லந் தொட்டந்தப்
பாலுண்ண நற்பால் கஞ்சி
பொசித்திடவே கர்ப்பத்தின் விப்ருதி
போங் கைப்புப் புளிப்பு நீக்கே (26)

(இ-ள்.) நல்ல பசும்பாலைத் தண்ணீர் விடாமல் அடுப்பின்மேலேற்றி இரண்டு தடவை பொங்கி அடங்கின

வுடன், தோல் நீக்கிய வெள்ளைப்பூண்டின் பருப்பு ஒரு சிரங்கை, அந்தக் கொதிக்கும் பாலில் போட்டுத் துழாவிக் காய்ச்சி இறக்கி விடவும். அந்த உள்ளிப்பருப்பை பனை வெல்லத்தோடு கூட்டிச் சாப்பிட்டு பாலையும் பருகி, பின்பு பால் கஞ்சி சாப்பிடவும். கர்ப விப்புருதி தீரும்.

இதற்குப் பத்தியம்: கசப்பு, புளிப்புப் பதார்த்தங்களைத் தள்ளவும்.

## 5. இடுப்பு நோய்க்கு மருந்து.

அரைப்படி கருங்குருவையரிசி மாவதிலே
முத்தருக்கம் வேரை
நறுக்கியரைத்துக் கலந்து களிக்கிளரிப்
பனை வெல்ல நறு நெய்யிட்டுத்
தருக்கியுண்ண இடுப்புவலி தவிரும்
எனச் சரபேந்திர சதுரர் சொன்ன
வருக்க முறையுணர்ந்தவரே வைத்தியரின்
முக்கிய ரென மதிப்பர்தாமே. (40)

(இ-ள்.) கருங்குறுவை அரிசி மாவு— அரைப்படியோடு முத்தருக்கஞ் செவிப்பூண்டு (நிலக்கடம்பு) வேரை நறுக்கி அரைத்து மாவுடன் சேர்த்து ஜலம் விட்டு களியாகக் கிண்டிடவும். இத்தோடு பனை வெல்லமும், நெய்யும் சேர்த்துச் சாப்பிட கர்பிணிகளின் அகால இடுப்புவலி தீரும்.

## 6. மதித்த பிள்ளை விழ மருந்து

வேலிப்பருத்தி யிலை வசம் போடுள்ளி
விரும்பு முலைப்பால் விட்டரைத்துக்
கோலி மாது கீழ் வயிறு கொப்பூழ்
மட்டுங் கொண்டிடவே
சாலமதித்த பாலகனுஞ் சதிராயு
தையமா மென்னும்
ஞாலந்தனிலேயுயர் சோழ நாடன்
சரபேந்திரன் முறையே. (35)

(இ-ள்.) வேலிப்பருத்தி இலை, வசம்பு, வெள்ளைப்பூண்டு இம்மூன்றையும் முலைப்பால் விட்டு நன்றாக அரைத்து அந்த கர்ப ஸ்திரீயினுடைய கீழ் வயிறு, தொப்

புள், அடிவயிறு வரை நன்ருக பற்றுப்போட இறந்த பிள்ளை விழும்.

### 7. நஞ்சு பிறிய மருந்து.

காடியினிற் பருத்தி யிலையரைத்துமந்தக்
  காடியினிற் கரைத்துண்டக்காற்
னீடிய நஞ்சவிழ்ந்து விழும் நேரிழைக்
  காரோக்யமும் நிகழ்த்தலாகும்
தேடறிய விம்முறையதனைத் தேடி
  உலகிருகந்து தோமின்னென்றே
யாடவர் கமலகனெனும் சரபமகிபன்
  பாலருள் செய்தானே. (37)

(இ-ள்.) பருத்தி இலையைக் காடிவிட்டு நன்ருக அரைத்து அந்தக் காடியிலேயே கரைத்துச் சாப்பிட, இறுகி யிருக்கின்ற நஞ்சு அவிழ்ந்து விழும். கர்ப்பஸ்திரீக்கும் சுகமுண்டாகும்.

### 8. பால் சுரக்க மருந்து.

பாதிரி வேரைப் பசுவின் பாலிலரைத்தே
  யந்தப் பசுவின் பாலினத்துறவே
சேர்த்தினிது விருப்பமுள
  சர்க்கரையும் விரைவாய்க்கூட்டி
காதலுடனே பருகி வரக் கனத்த
  முலைப்பான் மிகவுண்டாம்
நீதியுயர்ந்த சரபேந்திர நிருப
  னுரைத்த முறையிதுவே.

(இ-ள்.) பாதிரி வேரைப் பசுவின் பாலிலரைத்து நன்ருக அந்தப் பாலிலே குழப்பி சர்க்கரை சிறிதுசேர்த்து தினந்தோரும் பருகிவர முலைப்பால் அதிகம் உண்டாகும்.

(தொடரும்)

" प्रपञ्चामृत संजीविनी "

# மருந்திலுள்ள ஸந்தேகங்களுக்கு பதில்.

[Dr. S. VENKATARAJAN, L. I. M. (Regd.) TANJORE.]

---

1. அம்ருத ஸஞ்சீவினி என்ற பெயர் இருந்தாலும் "प्रपञ्चसार संग्रहத்திலிருந்து, இம்மருந்து எழுதப்பட்டிருப்பதால் புஸ்தகத்தின் கௌரவத்தை அதிகமாக்க, புஸ்தகத்தின் பெயரையும் சேர்த்து சொல்லப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க வழி இருக்கிறது.

2. கடையில் கிடைக்கும் சுருள் தங்கம் எவ்வளவு வரை சுத்தம் என்று தெரியாததால் அதையும் சுத்தம் செய்துகொள்ளல் நல்லது. இம்மாதிரி மறுபடி சுத்தி செய்துகொள்ளுவதனல் தோஷங்கள் நீங்கும்.

3. கலிங்க பரிபாஷையில் " माषो गुञ्जाभिरष्टाभिः सप्तभिर्वा भवेत्कचित् । स्याच्चतुर्माषकैः शाणः स निष्कष्टङ्क उच्यते । $(8\times4)=32$ குந்துமணி, इति योगरत्नाकरे & शार्ङ्गधरे ।

a) இத்தோடு चतुष्कर्षैः पलं प्रोक्तं दशशाणमितं बुधैः । —10 சாணம் or நிஷ்கம் = 1 பலம் (3 தோலா என வைத்துக் கொண்டால்),

b) Pandit *Doraiswamy Iyengar* —रसरत्नसमुच्चयं (Tamil) 27-ம் பக்கத்தில் 32 குந்துமணியையே எடுத்துக் கொண்டிருக்கிறார்.

c) தமிழ் பேரகராதியிலும் நிஷ்கம் என்றது வராகனிடை எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

d) மலையாள ஸம்பிரதாயத்தில் முக்கால் கழஞ்சு— 1நிஷ்கமாக எடுத்துக் கொள்ளும்போது 30 குந்துமணியாகிறது. ஆகையால் 32 குந்துமணி உபயோகப்படுத்துவதில் குற்றமில்லை எனத் தோன்றுகிறது.

# அபினியும் அதன் உபயோகமும்

[ கிருஷ்ணபிள்ளை குமாரசாமி. ]

(மே-மாதம் 150-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கமர்தப்பிரசமனம் (உடல் நோவைத் தணிப்பது) ஆக்ஷேபஹரம் (இசிவைப் போக்குதல்) என்னும் ஔஷத குணங்களை பெற்ற சரக்குகளுள் இது சிறந்தது. ஆகையால்,

I. வயிற்றில் இசிவு காணும்போதும், கடுமையான பேதியுடன் கூடிய வயிற்று வலியிலும், மூத்திர மார்க்கத்தில் கல்லடைப்பு ஏற்பட்டு வலி தாங்கமுடியாமல் இருக்கும் சமயத்திலும், சிறிது ஓமத்திராவகத்துடன் அபினி மாத்திரைகளைக் (பின்வரும்) கலந்து மூன்று நாலுமணிக்கொரு முறை உட்கொள்வதால் வலி முதலியவை வெகு துரிதமாகத் தணிவடையும்.

II. மூத்திராகாதம், மூத்திரக்ருச்சிரம் என்னும் வேறுவித, மூத்திர நாளத்தில் சிறுநீர் அடைபடுங் கோளாறுகளிலும் சிறிது ஆமணக்கெண்ணெய்யில் அபினித் திராவகத்தை (அஹிபேநரஸக்ரியை)ச் சேர்த்துக் கொடுப்பதைப் போல் அதிசீக்ரத்தில் வலியைத் தீர்க்கும் வேறு ஔஷதம் அரிது.

III. மதுமேஹம் என்னும் நீர் ரோகத்தில் இச்சரக்கு சேர்ந்த மதுதமநம் என்னும் மாத்திரையை உட்கொண்டு வருவதால் நீரிலுள்ள சர்க்கரை குறைந்து அடிக்கடி நீர் இறங்குவதும் தணிவடையும்.

IV. ருதுசூலை யென்னும் மாதவிடாய் காலங்களில் உண்டாகும் வயிற்று நோவுக்கு "அசோகாரிஷ்டத்துடன்" அபினித் திரவம் சிறிது கலந்து உட்கொள்ளலாம்.

V. கர்ப்பஸ்ராவம் என்னும் கருவழிவு ஏற்படுப வருக்குக் கற்பூரங் கலந்த அபினி மாத்திரையை கருவழிவு ஏற்பட்ட வுடனேயே தடவைக்கு இரண்டு அல்லது மூன்று மாத்திரைகளாக நேரத்திற்கு ஒருமுறை உட் கொள்ளக் கொடுக்கலாம்.

VI. அதிஸாரம் முக்கியமாய் சீதபேதி இவற்றில் அபினி கலந்த "கனஸாரவடி" என்னும் மாத்திரையும் "மஹா ஜாதிபலாதி சூர்ணமும்" வெகு சிறந்த ஔஷ தங்கள்.

VII. ஆமவாதம் என்னும் கீல்வாயு, வீக்கம், வேறு வாத ரோகங்களாற் காணும் நோவுகள், இடுப்புவலி கழுத் துப் பிடிப்பு, சுளுக்குகள் முதலியவற்றில் வலியையும், வீக் கத்தையும் தணிப்பதற்கு இச்சரக்கைப் பலவேறு வகை யில் மேலுக்கும் உபயோகிக்கலாம். அபினி கலந்த "பிர ஸாரிணீ" தைலத்தையாவது, "விச்வவாதாரி" தைலத்தை யாவது மேலே பூசி அழுத்தித் தேய்க்கவேண்டும். அல்லது "ஸுரதாருலேபம்" என்னும் சூரணத்தில் 1/10 பங்கு அபினியைக் கூட்டி ஜலம் விட்டுக் குழைத்துக் கொதிக்க வைத்து, வலியும் வீக்கமும் உள்ள அவயவங்களின் மீது சூடாகவே லேபனம் (பற்று) போடுவது நலம்.

VIII. அர்சஸ் என்னும் மூலரோகத்தில் ஆஸநபாகம் வீக்கமும், வலியும் எடுத்து வருத்தக் தருகையில் அரிசிமாக் களியில் சிறிது அபினித்தூளையாவது, அஹிபேதனத் திர வத்தையாவது கலந்து பொட்டலிகையாக (போல்டீஸாக) க்கூட்டிக் கட்டுவதால் பெரிதுங் குணமேற்படும்.

IX. மூலத்திற்கு துத்தியிலை, அரிசிமா, அபினி தக்க அளவில் சேர்த்து நீர்விட்டரைத்துக் களிகிண்டிக் கட்ட மூல வலி, வீக்கம் குணமாகும்.

X. ஜலோதரம் என்னும் ரோகத்தில் ஏற்படுங் கடு மையான வயிற்று வேதனையையும் அப்பொழுது காணும் அதிஸாரத்தையும், சமனம் செய்யக்கூடிய "துக்தவடி" என்னும் மாத்திரையிலும் அபினி முக்கியமான சரக்கு.

XI. ஜ்வராதிஸாரத்தில் பேதியையும், ஜ்வரத்தை யும், ஒருமிக்க நிவாரணம் செய்யக்கூடியதான "சம்புநாத

ரஸம்" என்னும் மற்றொருவனக மாத்திரையிலும் அபினி முக்கியமாகச் சேர்ந்திருக்கின்றது.

XII. வயிற்றுவலி, அதிஸாரம், வயிற்றுப் பொருமல் முதலிய பலவகைக் குடற் கோளாறுகளில் அபின் சேர்ந்த "கிரஹணீ கபாடரஸம்" என்கிற ஔஷதம் விசேஷமாக உபயோகப்படுகிறது.

XIII. புருஷ தாதுவை விர்த்தி செய்யும் விருஷ்ய குணம் பொருந்திய "ஆகார கரபாதி சூர்ணத்திலும்" முக்கியமாயுள்ள சரக்கு அபினியே.

XIV. பேதி, இருமல், மூர்ச்சை தலைவலி, பீனிசம், இசிவு முதலிய ரோகங்களுக்கு இதனில் வேளைக்கு கால் முதல் இரண்டு உளுந்து எடை தேக திடத்திற் கேற்ற வாறு நெய்யில் மத்தித்துக் கொடுக்க நற்சுகம் உண்டாகும். இது முதலில் சிறிது உற்சாகத்தையும், அடுத்தபடியாக உறக்கத்தையும் (மயக்கத்தையும்) உண்டுபண்ணும்.

XV. கண் சிவப்புக்கு அபினியுடன் சமனெடை குங்குமப்பூ சேர்த்து கோழிமுட்டையின் மஞ்சட்கரு விட்டரைத்துக் கண்களுக்குத் தீட்ட மாறும்.

XVI. உதிரபேதி, உதிரக்கடுப்பு இவற்றிற்கு அபினியை முலைப்பாலிலிழைத்து சீலையிலுருட்டி ஆசனத் துவாரத்தில் வைக்க நீங்கும்.

XVII. கர்ணசூலையில் அபினியை நல்லெண்ணெய் யிலாவது அல்லது வாதுமை நெய்யிலாவது இழைத்துக் காய்ச்சி இரண்டு துளி காதில் விட சுகங் கொடுக்கும்.

XVIII. சொறி, சிரங்கு, தினவு இவற்றிற்கு அபினியை மெழுகு தைலத்தி லிழைத்து கலந்து தேகத்தில் பூச நீங்கும்.

XIX. மதுமேஹத்திற்கு இதை அயசெந்தூரத்துடன் கூட்டிக் கொடுக்க விரைவில் குணப்படும்.

XX. சுவாச காசத்திற்கு அபினியுடன் வெள்ளெருக்கஞ் செடியின் இலையின் பின்புறத்தில் வெண்மையாகப் பற்றியிருக்கும் சுணையைச் சமபாகமாகச் சேர்த்தரைத்துப் பயறளவு மாத்திரை செய்து தேனில் மத்தித்துக் கொடுக்க

குணமாகும். இது எளிதில் கோழையைக் கரைத்து சுவாசத்தைச் சரிவரச் செய்யும்.

XXI. தாது வன்மைபெற அபினியுடன் ஜாதிக்காய் சேர்த்துக் கொடுக்கலாம்.

XXII. இந்தச் சரக்கு முதலில் மூளையிலும், முள்ளந்தண்டுக் கொடிகளிலும், வியாபித்து வீரியத்தைக் காட்டும். பின்னுல் சகல உறுப்புகளிலும் சேர்ந்து உபாதையைச் சாந்தப் படுத்தும்.

XXIII. இது தேகத்திலுண்டான சுரப்பு நீர்களை வரட்டும். வியர்வையை யுண்டாக்கும். அளவு அதிகமானுல் ஆபத்தை விளைவிக்கும். வெகு ஜாக்கிரதையாக உபயோகப்படுத்த வேண்டும்.

XXIV. குழந்தைகளுக்குக் கொடுக்கலாகாது. முன் கூறப்பட்ட அளவுகளானது சில தேகிகளின் சுபாவத்திற்குப் பொருந்தியும், பொருந்தாமலு மிருக்கும். ஆகையால் பண்டிதர்கள் இத்தகைய ஔஷதங்களைக் கொடுக்கும் போது கூடியவரையிலும் அளவைக் குறைத்தே கொடுத்தல் வேண்டும். ஒருக்கால் குணமேற்பட்டால், வேறுவிதமான தோஷங்களு மில்லையென உணரின் சிறிது அளவை அதிகப் படுத்திக் கொள்ளலாம். இதனுல் குற்றமில்லை.

XXV. அஜீர்ண பேதி கண்டவர்களுக்கு உடனே அபினியைக் கொடுக்கக் கூடாது. அவர்களுக்கு விரைவில் ஜீரண சக்தியை யுண்டாக்கக் கூடிய ஏதேனுமொரு மருந்தை முதலில் கொடுத்து, பின்னுல் ;மலம் மஞ்சள் நிறமாகவும், அஜீர்ணப்பட்டுள்ள வஸ்துக்கள் மலத்தில் இல்லையென்றும் உணர்ந்த பின்னர் அபினி சம்பந்தமான மருந்தைக் கொடுத்தல் நன்று. இதற்குக் காரணமென்னவென்ருல் அஜீர்ணப்பட்டிருக்கும் போது மலத்தைக் கட்டக் கொடுப்பது பின்னுல் பல தீங்குகளை யுண்டாக்கும். அல்லது ஜீரண சக்தியை யுண்டாக்கக் கூடிய இதர சரக்குகளுடன் அபினி சம்பந்தப்பட்டிருப்பின் குற்றமில்லை.

## ரோகங்களுக்கேற்ப அபினியுடன் வேறு சரக்குகள் சேர்த்து தயாரிக்கும் ஔஷதங்கள்.

### A. அபினி குளிகை :

"பேசும் பெருங்காயம் பின்னபினி நன் மூருங்கை
வீசுமேற்பட்டையுடன் வீருகத்— தேசுலிங்கம்
மேற்பதங்கம் கொண்டு பலம் மேவ விருகூடமிட்டுச்
சேர்த்து விரைந் தரைக்கச் செப்பு.
செப்பெருக்கன் பாலதனால் சேர்த்தரைத்துக் குன்றியத
னைப் பெடையை நீட்டிடவே ஓட்டபிடும்— அப்பப்பா
வாந்தியுடன் பேதி வந்த வதிசார வகை
சாந்தியிதிலாகுஞ் சாற்று."

கருத்து— பெருங்காயம், அபினி, பச்சை முருங்கைப்பட்டை, மகாரசப்பதங்கம்* வகைக்குப் பலம் ஒன்று. கற்பூரம் பலம் இரண்டு, இவைகளைக் கல்வத்திலிட்டு சிறிது எருக்கம்பால் கூட்டி மெழுகு பதத்தில் அரைத்து குன்றியளவு மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி சீசாவிலிடவும்.

தீரும் நோய்கள்— வாந்திபேதி, அஜீர்ணபேதி, இவைகட்கு அரைமுதல் முக்கால் மணி நேரத்திற்கு ஒன்றாகக் கொடுத்துவர நிவர்த்தியாகும்.

பத்தியம்— பார்லி கஞ்சியைத் தெளிவாகக் கொடுத்துவரவேண்டும். பேதி நின்றபின் வேண்டுமாயின் கஞ்சியைச் சிறிது குழம்புப் பதமாகவும் கொடுக்கலாம்.

குறிப்பு :— *மகாரசப்பதங்கம் செய்முறை : ஒரு பானையில் நாலுபடி உப்பைப் போட்டு நடுவில் பள்ளம் செய்து பத்துபலம் லிங்கத்தைப் பொடி செய்து போட்டு மேல் சட்டி மூடிச் சீலை செய்து காய்ந்த பின்னர் அடுப்பிலேற்றி பன்னிரண்டு சாமம் காடாக்னியாக எரிக்க இரசமானது மேல் ஏறிப் பதங்கமாக இருக்கும். இதனையே இங்கு சேர்த்தல் நன்று.

**B. அபின் மாத்திரை :** அபின், சாதிக்காய், அதிவிடயம், குருசாணி ஓமம், வெண்குங்கிலியம் வகை சமன். இவற்றை மாதுளம் பழத்தைக் குடைந்து அதற்குள் வைத்து எருமைச் சாணியால் கவசித்து நெருப்பில் சுட்டு எடுத்து சரக்குக் கொண்ட நிறை அந்த மாதுளம் பழச்

சதையையும், தோலையும் சேர்த்து மாதுளம்பழச்சாற்றால் அரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்யவும்.

அளவு— ஒன்று தொடக்கம் இரண்டு குளிகைகள்.

அனுபானம்— மாம்பட்டைச் சாறு, தேன்.

தீரும் நோய்கள்— கழிச்சல், சீதபேதி, இரத்தபேதி முதலியனவாம்.

C. **கட்டுவாதிக் குளிகை:** (சிறுவர்கட்கு) சுத்தி செய்த சாதிக்காயைத் துளைத்து அதில் அபினி மூன்று குன்றியெடை செலுத்தி சாதிக்காய்த் தூளால் துளைத்த வாயை அடைத்து மஞ்சளை அரைத்துக் காய்க்குக் கவசமிட்டு, உலர்த்தி, அதற்கு மேல் சீலைமண் செய்துலர்த்தி ஒன்று அல்லது ஒன்றரை வராட்டியில் புடமிட்டெடுத்துக் கவசத்தை நீக்கிக் காய்க்குச் சமனெடை சுத்தி செய்த பேரிச்சம்பழத்தைச் சேர்த்து முலைப்பால் விட்டரைத்து பச்சைப்பயறுப் பிரமாணம் மாத்திரை யுருட்டி புலர்த்தி ஒருமாத்திரை தேனில் உரைத்துக் கொடுக்க பேதி கட்டும்.

D. **கட்டுவாதி மாத்திரை:** லிங்கம், அபினி, கோரைக் கிழங்கு, ஜாதிக்காய், வெட்பாலையரிசி, ஆலத்திக்கர்ப்பூரம் வகைக்கு ஒவ்வொரு பலம். இவைகளை முதலில் அபினியுடன் சிறிது நெய்விட்டுக் கலந்து ஒரு வெற்றிலையின்மேல் தடவி விளக்கெண்ணெய் தீபத்தில் சிறிது வெதுப்பி மற்றச் சரக்குகளுடன் கூட்டிக் கல்வத்திலிட்டு நாலுசாமம் கஞ்சாவின் இயாழுத்தாலரைத்து மெழுகு பதத்தில் துவரைப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் குப்பியில் பத்திரப்படுத்துக. இதனை இரண்டு மணி நேரத்திற்கு ஒரு மாத்திரை வீதம் தேனில் கொடுத்துவர வாந்திபேதி, அஜீரணபேதி, இவைகள் குணமாகும். பேதி நின்றபின் மாத்திரையைக் கொடுக்கவேண்டிய தவசியமில்லை.

E. **கிராணி கேசரி மாத்திரை:** வாலை ரசம், கெந்தகம், அப்பிரக செந்தூரம், அல்லது பற்பம், அயச் செந்தூரம், அல்லது அன்னபேதிச் செந்தூரம், லிங்கம், அதிவிடயம், சுத்தி செய்த நாபி, சுக்கு, மிளகு, காட்டாத்திப் பூ, கடுக்

காய்த்தோல், விளாம்பழத்திேேடு, சோரைக் கிழங்கு, ஓமம், சித்திரமூலப் பட்டை, மாதுளம் பழத்திேேடு, பொரித்த வெங்காரம், வெட்பாலையரிசி, பழச்சாற்றிலூறப் போட்டு உலர்த்திய ஊமத்தை விதை, கழற்சிப் பருப்பு, இலவம் பிசின், வில்வவேர், திப்பிலி, ஜாதிக்காய், இந்தச் சரக்குகளை நீக்கி மற்றவைகளை நன்கு இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. அப்பால் சுத்தமாக அலம்பிய கல்வத்தில் முதன் முதல் வாலை ரசத்தைப் போட்டு கெந்தகம் கூட்டி நன்ருய் அரைத்து ரசம் உருமாறிக் கறுத்த சமயம் அப்ரகம், அயம், லிங்கம் முதலியவைகளை ஒன்றன் பின் ஒன்ருகக் கூட்டி அரைத்து எல்லாம் நன்ருய் மடிந்த பின், முன் சித்தப்படுத்திய இதரச் சரக்குகளின் சூரணத்தைப் போட்டு அதனுடன் எட்டு விராகனெடை அபினியைக் கூட்டி ஊமத்தை யிலைச் சாற்ருல் இரண்டு, மூன்று சாமமரைத்து உளுந்துப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திக் குப்பியில் பத்திரப்படுத்துக.

இம்மாத்திரையைத் தேனிலேனும், நெய்யிலேனும் உரைத்துத் தினம் இரண்டுவேளை ஐந்துநாள் கொடுக்க பல பண்டிதர்களால் கைவிடப்பட்ட எத்தகைய கிராணிகளுங் குணப்படும். இப் பிரயோகத்தில் சிறிது குணம் தவறுவதாக உணரின் காலதாமதம் செய்யாமல் கிராணி அல்லது பேதி முதலியவைகளைக் குணப்படுத்தக் கூடிய ஏதேனுமொரு நாக பற்பத்துடன் அனுபானம் செய்து கொடுக்கவும்.

F. **ஜாதிக்காய் மாத்திரை :** (வழக்கு) சாதிக்காயைத் துளைத்து அதற்குள் ஒரு குன்றி அபினியை அடைத்து துளைவாய்க்குச் சாதிக்காய் தூளையிட்டடைத்து ஒருநீண்ட கதிரில் காயைக் குத்திக் கொண்டு தேனில் தோய்த்து நெய் விளக்கில் காய் வேகும் வரையில் சுட்டு, கல்வத்திலிட்டு அரைத்து மெழுகு பதம் வருஞ் சமயத்தில் சிறு பயறளவு மாத்திரை செய்து வைக்கவும். அசீரண பேதி, அதிஸாரம், சீதபேதி, கிராணி இவைகளுக்கு ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று முறை கொடுக்கத் தீரும்.

G. **அபினியெண்ணை:** ஒரு உச்சிக் கரண்டி நல்லெண்ணெய்யில் ஒரு பயறளவு அபினி கூட்டி எரித்து இரண்டு துளி காதில் விட காது நோய், சீழ்வடிதல் நிற்கும்.

H. **அபினியெண்ணெய் (வேறு):** ஒரு உச்சிக்கரண்டி நல்லெண்ணெய்யில் ஒரு குன்றியளவு அபினி, கஸ்தூரிப் பட்டை, வேர்ப்பட்டை ஒரு சிறிய துண்டு சேர்த்துஎரித்து வடித்துக் காதில் ஒன்று இரண்டு துளி விட்டுவர காது நோய், காது குத்தல், சீவடிதல் தீரும்.

I. **மேல்பூச்சுத் தைலம்:** ஒரு வராகனெடை அபினியை கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் பலம் பதினைந்து விட்டரைத்து ஒன்றுபடக் கலக்கி கற்பூரம் ஒருவராகனெடை பொடித்துச் சேர்த்துத் தடவி வர கீல்வாதம், இடுப்புவலி, கால் குடைச்சல், எலும்பைப்பற்றிய நோய்கள், சந்நிபாதத்தில் காணும் இசிவு வலி, சூதகவயிற்றுவலி முதலிய நோய்கள் தணியும்.

J. **ஜாதிக்காய்ச் சூரணம்:** ஜாதிக்காயைச் சோறு கொதிக்கும் போது அதில் சொருகி வேக வைத்தெடுத்து உலர்த்தியதும், அபினியுஞ் சமனெடை யெடுத்துச் சூரணம் செய்து அதில் ஒன்று, இரண்டு குன்றியளவு எடுத்து கால் வராகனெடை கற்கண்டுப் பொடி அல்லது தேனுடன் கலந்து நாளொன்றுக்கு இரண்டு, மூன்று முறை கொடுக்க கிராணி பேதி நிற்கும்.

K. **கபாடசூரணம்:** அபினி ஒன்றரை, மிளகுப்பொடி இரண்டு, சுக்குத்தூள் இரண்டு, சீரகத்தூள் ஆறு, பாதம் பிசின் அரைப்பங்காக ஒன்று கூட்டிக் கலக்க அரைத்து ஒன்று, இரண்டு குன்றி கொடுக்க பேதி, சூலை, நித்திரையின்மை, இசிவு தீரும்.

L. **அஹிபேனுஸவம்:** இலுப்பைக் கள்ளு ஒரு துலாம், கிருதபாண்டத்திலிட்டு அதில் அபின் ஒரு குடவம், கோரைக்கிழங்கு, ஜாதிக்காய், வெட்பாலையரிசி, ஏலம் வகைக்குப் பலம் ஒன்று சூரணித்துக் கட்டி மூடிச் சீலை மண் செய்து ஒருமாதம் சென்றபின் வடிகட்டி ஒன்று முதல் ஐந்து துளிகள் வரையில் ஜலத்தில் சேர்த்துக்

காய்த்தோல், விளாம்பழத்திேைடு, சோரைக் கிழங்கு, ஓமம், சித்திரமூலப் பட்டை, மாதுளம் பழத்திேைடு, பொரித்த வெங்காரம், வெட்பாலையரிசி, பழச்சாற்றிலூறப் போட்டு உலர்த்திய ஊமத்தை விதை, கழற்சிப் பருப்பு, இலவம் பிசின், வில்வவேர், திப்பிலி, ஜாதிக்காய், இந்தச் சரக்குகளை நீக்கி மற்றவைகளை நன்கு இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. அப்பால் சுத்தமாக அலம்பிய கல்வத்தில் முதன் முதல் வாலை ரசத்தைப் போட்டு கெந்தகம் கூட்டி நன்ருய் அரைத்து ரசம் உருமாறிக் கறுத்த சமயம் அப்ரகம், அயம், லிங்கம் முதலியவைகளை ஒன்றன் பின் ஒன்ருகக் கூட்டி அரைத்து எல்லாம் நன்ருய் மடிந்த பின், முன் சித்தப்படுத்திய இதரச் சரக்குகளின் சூரணத்தைப் போட்டு அதனுடன் எட்டு விராகனெடை அபினியைக் கூட்டி ஊமத்தை யிலைச் சாற்ருல் இரண்டு, மூன்று சாமமரைத்து உளுந்துப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திக் குப்பியில் பத்திரப்படுத்துக.

இம்மாத்திரையைத் தேனிலேனும், நெய்யிலேனும் உரைத்துத் தினம் இரண்டுவேளை ஐந்துநாள் கொடுக்க பல பண்டிதர்களால் கைவிடப்பட்ட எத்தகைய கிராணிகளுங் குணப்படும். இப் பிரயோகத்தில் சிறிது குணம் தவறுவதாக உணரின் காலதாமதம் செய்யாமல் கிராணி அல்லது பேதி முதலியவைகளைக் குணப்படுத்தக் கூடிய ஏதேனுமொரு நாக பற்பத்துடன் அனுபானம் செய்து கொடுக்கவும்.

F. **ஜாதிக்காய் மாத்திரை :** (வழக்கு) சாதிக்காயைத் துளைத்து அதற்குள் ஒரு குன்றி அபினியை அடைத்து துளைவாய்க்குச் சாதிக்காய் தூளையிட்டடைத்து ஒருநீண்ட கதிரில் காயைக் குத்திக் கொண்டு தேனில் தோய்த்து நெய் விளக்கில் காய் வேகும் வரையில் சுட்டு, கல்வத்திலிட்டு அரைத்து மெழுகு பதம் வருஞ் சமயத்தில் சிறு பயறளவு மாத்திரை செய்து வைக்கவும். அசீரண பேதி, அதிஸாரம், சீதபேதி, கிராணி இவைகளுக்கு ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று முறை கொடுக்கத் தீரும்.

G. **அபினியெண்ணெ :** ஒரு உச்சிக் கரண்டி நல்லெண்ணெய்யில் ஒரு பயறளவு அபினி கூட்டி எரித்து இரண்டு துளி காதில் விட காது நோய், சீழ்வடிதல் நிற்கும்.

H. **அபினியெண்ணெய் (வேறு) :** ஒரு உச்சிக்கரண்டி நல்லெண்ணெய்யில் ஒரு குன்றியளவு அபினி, கத்தூரிப் பட்டை, வேர்ப்பட்டை ஒரு சிறிய துண்டு சேர்த்துஎரித்து வடித்துக் காதில் ஒன்று இரண்டு துளி விட்டுவர காது நோய், காது குத்தல், சீவடிதல் தீரும்.

I. **மேல்பூச்சுத் தைலம் :** ஒரு வராகனெடை அபினியை கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் பலம் பதினைந்து விட்டரைத்து ஒன்றுபடக் கலக்கி கற்பூரம் ஒருவராகனெடை பொடித்துச் சேர்த்துத் தடவி வர கீல்வாதம், இடுப்புவலி, கால் குடைச்சல், எலும்பைப்பற்றிய நோய்கள், சந்நிபாதத்தில் காணும் இசிவு வலி, சூதகவயிற்றுவலி முதலிய நோய்கள் தணியும்.

J. **ஜாதிக்காய்ச் சூரணம் :** ஜாதிக்காயைச் சோறு கொதிக்கும் போது அதில் சொருகி வேக வைத்தெடுத்து உலர்த்தியதும், அபினியுஞ் சமனெடை யெடுத்துச் சூரணம் செய்து அதில் ஒன்று, இரண்டு குன்றியளவு எடுத்து கால் வராகனெடை கற்கண்டுப் பொடி அல்லது தேனுடன் கலந்து நாளொன்றுக்கு இரண்டு, மூன்று முறை கொடுக்க கிராணி பேதி நிற்கும்.

K. **கபாடசூரணம் :** அபினி ஒன்றரை, மிளகுப்பொடி இரண்டு, சுக்குத்தூள் இரண்டு, சீரகத்தூள் ஆறு, பாதம் பிசின் அரைப்பங்காக ஒன்று கூட்டிக் கலக்க அரைத்து ஒன்று, இரண்டு குன்றி கொடுக்க பேதி, சூலை, நித்திரையின்மை, இசிவு தீரும்.

L. **அஹிபேனுஸவம் :** இலுப்பைக் கள்ளு ஒரு துலாம், கிருதபாண்டத்திலிட்டு அதில் அபின் ஒரு குடவம், கோரைக்கிழங்கு, ஜாதிக்காய், வெட்பாலையரிசி, ஏலம் வகைக்குப் பலம் ஒன்று சூரணித்துக் கட்டி மூடிச் சீலை மண் செய்து ஒருமாதம் சென்றபின் வடிகட்டி ஒன்று முதல் ஐந்து துளிகள் வரையில் ஜலத்தில் சேர்த்துக்

கொடுக்க அதி உக்கிரமான அதிசாரம், கிரஹணி, சீத, ரக்தபேதி, விஷூசி இவைகள் தீரும்.

M. **கபாடலேகியம்:** முன்கூறிய கபாட சூரணம், மூன்று வராகனெடை சேர்த்து இலேகியங் கிண்டி இரண்டரை முதல் பத்து குன்றிவரை, ஒருநாளைக்கு இரண்டு, மூன்று முறை உபயோகிக்க வயிறு பொருமியுண்டாகும் பேதி உடல் வலி நீங்கும்.

N. **கபாடவடகம்:** அபினி ஒன்று, சுக்கு இரண்டு, ஜாதிக்காய் இரண்டு, சீரகம் இரண்டு, அதிவிடயம் ஒன்று, பேரீந்து இரண்டு, பங்கெடுத்து எலுமிச்சம்பழரசம் விட்டு மைபோலரைத்து கடலையளவு மாத்திரை செய்துவர்த்தி ஒன்று, இரண்டு மாத்திரை தேனில் கொடுக்க பேதி கட்டும்.

O. **புற்கை:** ஊமத்தை யிலை, தராயிலை வகைக்கு ஒருபலம், சடாமாஞ்சில், மஞ்சள் வகைக்கு கால்பலம், அபினி இரண்டு, மூன்று குன்றி சேர்த்து அரைத்துப் போதுமான அளவு நல்லெண்ணெய் விட்டுக் கிண்டி புற்கை செய்து வேதனையுடன் கூடிய வீக்கம், கட்டி, நீர்ப்பை தாபிதம் இவைகளுக்கு நோயுள்ள இடங்களில் பூசிவர மிக்க நன்மையைத் தரும். நிச்சயம்.

P. **ஓமத்துகள்:** ஓமம் ஒருபலம், கற்பூரம் அரை வராகனெடை, சுட்ட வாதுமைக் கொட்டை யோட்டுக் கரி பலம் அரை, அபினி குன்றியொன்று சேர்த்துப் பொடி செய்து பல் தேய்த்துவர பல்வலி, ஈறுகட்டல், வாய் நாற்றம் போம்.

Q. **கண்ணோயிற்கு வேது:** அபினியை வெந்நீர் விட்டரைத்து, வெந்நீரில் கலந்து ஆவி யெழும்பும்படி காய்ச்சி வேது பிடிக்கக் கண்ணோய் தீரும். அல்லது மேற்படி நீரைக் குளிர ஆறவிட்டுக் கண்களைக் கழுவி வந்தாலுங் கண்ணோய் தீரும்.

## முடிவுரை.

அபினி, கஞ்சா இவ்விரண்டும் கொடிய விஷச் சரக்குகளா யிருந்தும், இந்தியாவிலும், விசேஷமாக சீன தேசத்

திலும், மதுபானத்தைப்போல் மனதிற்கு மதத்தை யுண்டு பண்ணிக் கொள்ள விரும்பி அவற்றை லாகிரி வஸ்துக்களாக உபயோகிக்கும் பழக்கமுள்ள ஜனங்கள் ஆயிரக் கணக்காயுண்டு. இப்பழக்கம் உடல் வன்மையையும், மனதையும் பொதுவாக நற்குணங்களையும் சீரழிக்கின்றன. அதற்குள்ள சில ஔஷத குணங்களைக் கொண்டு வைத்திய முறையில் மாத்திரம் அதைச் சிறந்த வஸ்துவாகக் கருதலாமேயன்றி வேறுவகையில் அதை உபயோகிக்காமலிருப்பது தான் நலம்.

## இக்கட்டுரை எழுதுவதற்கு உதவியாயிருந்தவை.

ஆயுர்வேதபூஷணம் பண்டித M. துரைஸ்வாமி ஐயங்கார், A. V. S. அவர்களினதும். Ayur. Dr. A. V. இராஜரத்னம், D. A. M. (Cey) M. B. (H.) F. I. A. P. Lecturer, L. A. M. College. Jaffna. அவர்களினதும் அபின் விஷயமான கட்டுரைகள், சென்னை இறையாட்சி இந்திய மருத்துவக் கலாசாலை சித்த மருத்துவத்தலைமை ஆசிரியர் திருவாளர் வைத்தியரத்தினம். க. ச. முருகேச முதலியார் அவர்கள், வைத்திய வித்வன் மணி சி. கண்ணுசாமி பிள்ளை அவர்கள், ஆயுர்வேத பாஸ்கரர் கந்தசாமி முதலியார் அவர்கள், வைத்யபூபதி S. கிருஷ்ணராவ் அவர்கள், யாழ்ப்பாணம் இருபாலைச் செட்டியார் அவர்கள், சுதேசவைத்தியர் அ. பொன்னையா பிள்ளை அவர்கள் இயற்றிய நூல்கள்.

முற்றும்.

# சிரரோகத்தின் விளக்கம்.

[இலங்கா ஆயுர்வேத சித்தவைத்திய கல்லூரி ஆசிரியர் வைத்திய கலாநிதி திரு. வி. கனகசபை அவர்கள் எழுதியது]

(மே-மாதம் 145-ம் பக்கத் தொடர்ச்சி)

### 4-வது கபால பித்த சேற்பன குணம்.

இது சிரமீது பித்தமும், கபமும் கூடித் தொந்தித்துண்டாகும். இதன் குணங்கள்; புருவம், நெற்றி, உச்சி இவைகளில் குத்தி மிகவும் வேதனை செய்யும். கண்களில் நீர்ப்பாய்ந்து சிவந்த நிறங்கொள்ளும். நாசியில் நோவு மிகும். தேகம் வெப்பமாயிருக்கும். நெஞ்சிற் சளியுடன் இருமலுமுண்டாகும்.

**சிகிட்சை.**

**1. அமுதவல்லிக் கிருதம்:** முற்றின சீந்தில் தண்டு *100* பலத்தை சிறு சிறு துண்டுகளாக வெட்டி நன்ருயிடித்து ஒருபடி கொதிக்கின்ற நீர்விட்டு ஆறியபின் பிழிந்து வடித்தெடுத்த சாறு, மொசுமொசுக்கைச் சாறு, பிரமிச்சாறு, பேய்ப்புடோற் சாறு, தண்ணீர்விட்டான் சாறு, கையாந்தகரைச் சாறு, அவிரிச்சாறு, இண்டந் தண்டிலைச்சாறு, எலுமிச்சம் புளி, கருப்பஞ் சாறு, கண்டங்கத்தரிச்சாறு, பசும்பால், இளநீர், பசுநெய், வகை படி *1.*

இவைகளைப் பாண்டத்திற் சேர்த்து சிறுதியிற் கொதிப்பித்து, கோட்டம், இந்துப்பு, முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், சாதிப்பத்திரி, கராம்பு, வாய்விளங்கம், ஏலரிசி, சீனி, பனைவேர், கோரைக் கிழங்கு, கல்நார், திப்பலி மூலம், சடாமாஞ்சில், தேவதாரு, அத்தித் திப்பிலி, நாகம்பூ, சுத்தி

---

குறிப்பு: 85-ம் பக்கம் 16-ம் வரியில் உள்ள "கபால கலை" என்னும் சொல்லை "கபால சூலை" யெனத் திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

செய்த கெந்தி, வெண்காரம், காந்தம், இலந்தைத் தம்பலம், கடுவேர், மஞ்சள், திரிபலை, சந்தனம், பச்சைக்கற்பூரம், கோரோசனை வகைகளஞ்சு 1.

**செய்முறை :** இவைகளில் இந்துப்பு, சீனி, கல்நார், காந்தம், பச்சைக்கற்பூரம், கோரோசனை நீங்கலாக மற்றைத் திரவியங்களை இடித்து மேற்கூறிய திரவங்களி லொன்றினுலரைத்து, கஷாயத்தில் கலந்து, சிறு தீயி லெரித்து, அடிப்பற்ருது மெழுகு பதத்தில் வடித்து, இந்துப்பு முதலிய திரவியங்களைப் பொடி செய்து, கிருதத்திற் கலந்து பதனஞ் செய்யவும்.

இக்கிருதத்தில் கால் பலம் வீதம் காலை, மாலை உண்டு, இளவென்னீர் குடித்து. புளி, கார சாரங்கள் நீக்கி பத்தியம் உண்டு வரவேண்டியது.

**தீரும் வியாதிகள் :** பித்த சேற்பன கபால முதலாகிய தொந்த கபாலங்கள் நீங்கும்.

### 5–வது கபால சேற்பன பித்தத்தின் குணம்.

வாயில் நீரூறி வழுவழுத்தல், தலையிலும், முகத்திலும், அதிக வேர்வையுண்டாதல், எழுந்து நடந்தால் தலைசுற்றல், நாவடைவில் தேகமிளைத்து வெளுத்தல், மலசலம் சிவந்து கழிதல், தலை கனத்தல், காதடைத்தல், உடம்பெரிதல். உள்ளங்கால் உள்ளங்கைகள் கசிதல், சிலவேளைகளில் தாகமதி கரித்தல், உறக்கமுண்டாதல், இருமல் மிகுந்து கோழை கக்குதல், உணவில் வெறுப்பு, நரம்புப் பலவீனமுமாகிய உபத்திரவங்கள் செய்யும்.

**சிகிட்சை :**

**குடி நீர் :** திப்பிலி, உள்ளி, வெண் குங்கிலியம், கடுக்காய், பேய்ப்புடோல், வேப்பங்காம்பு, சத்திச்சாறடைவேர், வகை கழஞ்சு 2. இவைகளைச் சிறுதுண்டுகளாக நறுக்கி இரண்டுபடி நீர்விட்டு அரைக்கால் படியாகக் குறுகக் காய்ச்சி வடித்து நேரம் ஒரு பலம் வீதம் காலை, மாலை இருநேரம் உட்கொண்டு முற்கூறிய பத்தியமாயுண்டு வரின் கபாலசேற்பன பித்தஞ் சாந்தமாகும்.

**ஆடாதோடைக் கிருதம் :** ஆடாதோடைவேர், தூதுவளைவேர், பிரமிசமூலம், வட்டுக்கத்திரி வேர், துளசிவேர்; கத்தாழை வேர், பேய்ப்புடோல் சமூலம், வெற்றிலை வேர், அல்லது கொடி, தொய்யில் சமூலம், சாத்தாவாரிக் கிழங்கு, முல்லைவேர், மலைதாங்கி வேர், கற்றுழஞ் சருகு வகைக்குப் பலம் 10. இவைகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பாண்டத்திற் போட்டு, 16 படி நீர்விட்டு அரைக்கால் படியாகக் குறுகக் காச்சி வடித்து, கிருதம் காச்சும் பாண்டத்திற் சேர்த்து, இவற்றுடன் பால், நெய், இளநீர் வகைக்கு படி 2 கலந்து கொள்ளவும். திரிபலை, சிற்றரத்தை, கொத்தமல்லி, கடுகு, வெட்பாலையரிசி, சிறு தேக்கு, கச்சோலம், திரிகடுகு, சிவதை வேர், வசம்பு, கோட்டம், கோரோசனை, செண்பகப்பூ, தேவதாரு, மேதை, கண்டில் வெண்ணை, தாளிசபத்திரி, முந்திரிகைப்பழம், கடுகுரோகணி, சீனி, வில்வவேரின் வயிரம் வகை கழஞ்சு 3. இவைகளை இடித்துப் பொடி செய்து (கோரோசனை, சீனி நீங்கலாக) முற்கூறிய திரவங்கள் ஒன்றினுரைத்துக் கழாயத்தில் கலந்து காச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கோரோசனை, சீனி இவை இரண்டையும் அரைத்துக் கலந்து கிருதத்தைப் பதனஞ் செய்யவும்.

இக் கிருதத்தை மேற்கூறிய அளவின்படி காலை, மாலை இருநேரமாக 20 நாள் உண்டு, கீழ்க் கூறும் திரிபலாத் தைலத்தை, தலைக்குத் தேய்த்து முழுகிவரின் பித்தசேற்பன கபாலம், சேற்பன பித்தகபாலங்கள் நீங்குதலன்றி உடம்புச் சூடு, வெளுப்பு முதலிய உபத்திரவங்களும நீங்கி நல்ல வசீகரமான தோற்றமுண்டாம்.

**திரிபலா தைலம் :** வித்து நீக்கிய கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வகைக்குப் பலம் 50. பதினறுபடி நீர்விட்டு அவித்து இரண்டுபடியாக வற்றிய பின் வடித்துக் கொண்டு இதனேடு இளநீர், நல்லெண்ணை வகைக்குப் படி 4, கலந்து தைலபாண்டத்திற் சேர்த்துச் சிறுதீயாக எரித்துக் கொதிக்கும் போது; செங்கழுநீர்க் கிழங்கு, நற்சீரகம், ஏலம், திப்பலி மூலம், நாகம்பூ, நாகணம், பச்சிலை, மேதை, வாய்விளங்கம், சாதிக்காய், கராம்பு, நன்னரிவேர்,

இலவங்கப்பட்டை, வட்டுக்கத்தரி வேர், இருவேலி, இலா மிச்சம் வேர், மல்லிகை வேர், தேவதாரம், மதுரம், அகில் கட்டை, சந்தனம், குக்கில், செண்பகப்பூ, புனுகுச்சட்டம் கோரோசனை, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ இவை வகைக்கு கழஞ்சு 3.

**செய்முறை :** இவைகளில் கீழ்க்கூறிய புனுகுச்சட்டம் முதலிய நான்கு திரவியங்களை நீக்கி, மற்றவற்றை இடித்துப் பொடி செய்து, இளநீரினாலரைத்து தைலபாண்டத்தில் கஷாயங்களுடன் கலந்து, கடுகு, மெழுகு பதமான பக்குவத்தில், புனுகுச்சட்டம் முதலிய திரவியங்களை முன் முறைகளிற் கூறிய பிரகாரம் வடிகலசத்திலிட்டு வடித்து வாரமிருமுறை தலைக்குத் தேய்த்தும், செவி முதலிய தானங்களில் விட்டும் முழுகிவர சேற்பகபாலம், பித்த சேற்பகபாலம், சேற்பன பித்தகபாலம் முதலிய பிணிகள் நீங்கும்.

**கடுக்காய் சூரணம் :** கொட்டை நீக்கிய கடுக்காய், சிறு தேக்கு வகை பலம் 4. மதுரம், ஏலம், நற்சீரகம், முந்திரிகைப் பழம், தாளிசபத்திரி, கூகைநீறு, அகில்கட்டை, சீனி, தூதுவளைப்பழம், மாதுளைப்பழம், கிளியூறல், திரிகடுகு, கடுகுரோகணி, மேதை, வாய்விளங்கம், சடாமாஞ்சில், சிற்றரத்தை, சாம்பல் மொந்தன் வாழைப்பழம், நாகம்பூ, தாமரை வளயம், இவைகள் வகை கழஞ்சு 1. இவைகளில் சீனி, முந்திரிகைப்பழம், வாழைப்பழம் நீங்கலாக மற்றவற்றை இளவறுப்பாக வறுத்துச் சூரணஞ் செய்து, இருவகைப் பழங்களையும், சீனியையும் சேர்த்து அரைத்து வெய்யிலில் காயவைத்து உலர்த்தி அரைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் காலை, மாலை இருநேரமாக 40 நாள் உண்டு, புளி, புகை, காரமான பொருட்களை நீக்கி உணவு கொள்ளவும். கபால சேற்பன பித்தம் முதலிய கபால நோய்கள் தீரும்.

**6-வது கபால வாத பித்த குணம்.**

வாதம் அதிகரித்து பித்தத்தோடு சம்பந்தமுற்று, கபால நரம்புகளைப் பற்றி நின்று, சிரோபாரம், திமிர்ப்பு,

குத்து (இவைகளன்றி) பிடரியில் அதிக வேதனையுடன் வலித்தல், நாக்கு மரம்போல் விறைத்துப் போதல், உடம்பிலுள்ள பொருத்துக்களிற் புண்போன்ற வேதனை, இடையிடையே வேதனை குறைதலாகிய குணங்களுண்டாம்.

சிகிட்சை :

**ஆயிற்பட்டை தைலம் :** ஆயிற்பட்டை பலம் 100. சீந்திற் கொடி, நொச்சிவேர், வாதமடக்கி வேர், வெட்டிவேர், இருவேலித்தண்டு, வேப்பம் பட்டை, கற்றாழஞ்சருகு, எட்டிப்பட்டை, சிற்றாமட்டி வேர், முதியார் கூந்தல் சமூலம், இலந்தைவேர், முன்னை வேர், பாதிரிப்பட்டை, கொட்டைநீக்கிய திரிபலை, சிற்றரத்தை இவை வகைக்குப் பலம் 3. இவைகளை நறுக்கி யிடித்து 32 படி நீரில் விட்டு எட்டொன்ருய் வற்றக் காச்சி, வடித்து இதனேடு கையான் தகரைச் சாறு, பசுப்பால், இளநீர், எள்ளெண்ணெய் இவை வகைக்குப் படி 4. கலந்து பாண்டத்தில் சேர்த்துச் சிறு கொதியிட்டுப் பின்பு ;

திரிகடுகு, திரிபலை, இடவகம், ஏலம், கராம்பு, பெருஞ்சீரகம் இலவங்கப்பட்டை, வெந்தயம், கோட்டம், சாத்திரவேதி, தக்கோலம், தேவதாரம், விழாலரிசி, செண்பகப்பூ, சடாமாஞ்சில், மஞ்சிட்டி, கொட்டிக்கிழங்கு இருப்பைப்பூ, அதிமதுரம், நெரியரிசிப் பால், கோரோசனை, பச்சைக் கற்பூரம் வகைக்கு கழஞ்சு 1.

இவைகளில் கோரோசனை, பச்சைக் கற்பூரம் நீங்கலாக உள்ள மற்றச் சரக்குகளை நறுக்கி யிடித்து முன் திரவங்களில் ஒன்றினுல் அரைத்துக் கஷாயத்துடன் கலந்து நான்கு நாட் சென்றபின் மெழுகு பதத்தில் வடித்துக் கோரோசனை, பச்சைக்கற்பூர மிரண்டையும் பொடி செய்து கலந்து வைத்துக் கொள்ளவும்.

இத்தைலத்தை வாரத்திற்கிருமுறை தலையில் தேய்த்து சிகைக்காயரப்பிட்டு முழுகிவரின் கபாலவாத பித்தத் தொந்திப்பாலுண்டாகும் உபத்திரவங்கள் யாவுந் தீர்ந்து உடல் வசீகரமுண்டாம்.

# அசாத்தியம் நாலில்

## 1-வது கபால பாரிச வாயுவின் குணம்.

இது கபாலத்தின் ஒரு புறத்திற் கடினமான வேதனையுடன் குத்தி நொந்து வரண்டு, திமிர்த்து மிகுதியான வியர்வை காணுதலோடு, கண்ணிலும், புருவத்திலும், வாயு மிகுந்து குத்தும். பிடரியில் நோவுண்டாகும். காதில் புண்ணாகி ஓடு விழுந்து சீளிரத்தம் வரும். உள் மருந்து, தைலம் இவைகளால் தீராது. இரக்ஷை செய்தால் எளிதில் மாறும்.

**இரக்ஷைக் கருவி:** வெள்ளிக் கம்பியினால் முத்தலையுடைய சூலாயுதம் போன்ற வடிவுடையதாகிய ஒரு கருவி செய்து அடிப்புறத்தை ஒரு விரற் பருமனுள்ளதும், ஆறு அங்குலத்திற் கதிகப்படாததுமாகிய ஒரு மரத்தினாற் செய்த பிடியில் இறுக்கிச் சொருகிக் கொள்ளவேண்டும். மற்றொரு கம்பி ஒரு நூற் பருமனுள்ளதாகவும், சுமார் ஆறங்குல நீளமுள்ளதாகவும் செய்து முன்போலொரு பிடியிற் சொருகி வைத்துக் கொள்ளவும். ஆமணக்கெண்ணை அல்லது எள்ளெண்ணை விளக்கில் விட்டு ஒரு சிறு விரற் பருமனுள்ள திரியிட்டு எரியும் போது நோயாளியைப் பக்கத்தில் இருக்கச் செய்து அதன் பின் வைத்தியன் தனது வழிபடு கடவுளை வணங்கி, ஒருமுழ அகலமும், நாலுமுழ நீளமுமுள்ள மென்மையான வெண் துணியினால் நோயாளியின் கழுத்தில் சுற்றிக் கண்ணின் கடைப்புறம், புருவ மத்தி இவைகளிலுள்ள நரம்புகள் புடைத்து வெளிக் காணும்படி நோயாளியின் கழுத்தில் சுற்றிய சீலையை மெதுவாக இறுக்கவும். அவ்வேளையில் மேற்குறித்த இடங்களிலுள்ள நரம்புகள் புடைத்துக் காணும். அப்போது வைத்தியன் தான் பிடித்திருந்த துணியின் இருதலைப்புகளையும் கைதேர்ந்த பரிசாரகனை நோயாளியின் பின்புறம் நிற்கச் செய்து அவன் கையிற் கொடுத்துப் பிடித்திருக்கச் செய்து மற்றொரு பரிசாரகனால் விளக்கின் மீது காச்சும்படி செய்த சூலக்காலென்னுங் கருவியை வைத்தியன் தனது வலக்கையால் வாங்கி நோயாளியின் முன்னின்று

முதலில் நோயுள்ள புருவத்தின் பாகத்தின் நரம்பின் மேல் கருவியினுல் மேல்புறஞ் சாய்வாக அரையிஞ்சு நீளம் தோலின்மேல் விரணமுண்டாகும் படி தகித்துப் பின் காச்சிய தனிக் கம்பியின் முனையினுல் கடைவிழியின் பின் நேராக இரண்டங்குலந் தள்ளிப் பொட்டுச் சூடு செய்யவும். அதன் பின் நோயாளியின் கழுத்திற் சுற்றிய துணியை யெடுத்து விட்டுப் பிடரிக் குழியில் சூலக்காலினுல் தகித்துவிட வேண்டும். சிறிது நேரஞ் சென்றபின் தகித்த விடங்களில் பொங்கி யிருக்கும். அதனை வெள்ளரி விதை போன்ற வடிவுடையதும் அளவுடையதுமான கூறிய கருவியின் முனையினுல் நீக்கிப் புண்ணுருவண்ணம் கீழ்க் கூறும் கார மருந்தைப் பூசி வரவேண்டும்.

**காரம் :** நல்லெண்ணெய் 60 சொட்டு, எருக்கம்பால் 60 சொட்டு. கறிமஞ்சள் 1 கழஞ்சு, இவைகளில் மஞ்சளைப் பொடி செய்து ஷெ எண்ணெயையும் பாலையுங் கலந்து நன்கு அரைத்து ஒரு கண்ணுடிக் குப்பியில் வைத்துக்கொண்டு தகித்தவிடங்களில் பூசிவரப் புண்ணுருமல் நீர் வடியும். இங்ஙனம் சுமார் இரண்டுவார முதல் மூன்று வாரம் வரைக்கும் புண்ணுருமல் பூசி வரவேண்டும். அதன் பின் அப்புண்களைத் தானுக ஆறவிடினும் விடலாம். அல்லது கீழ்க்கூறும் எண்ணெயைப் போட்டு ஆற்றுகினும் ஆற்றலாம்.

**புண்ணுற்று மெண்ணெ :** வேப்பாடற் பட்டை, கிழுவம் பட்டை இவைகள் வகை கழஞ்சு 4. இவைகளைப் பொடி செய்து காற்படி தேங்காயெண்ணெயை ஒரு அகலிற் கொதிப்பித்து வெற்றிலை வெடி பதத்திலிறக்கி உடனே ஷெ தூளைப் போட்டு துழாவிவிடவும். பின் எண்ணெ யாறியதும் வடித்து ஒரு சீசாவில் பதனஞ் செய்து வைத்துக்கொண்டு புண்களிற் போட்டுவர விரைவிற் புண் ணுறும்.

இஃதன்றிப் பச்சைக்கொடிவேலி வேரை அரைத்துக் கையிற் படாமல் ஒரு கம்பியாலெடுத்துக் குறித்த தானங் களிற் பூசினுலும் அவ்விடங்களிற் புண்ணுகும். வெடியுப்

புத்திராவகமென்னும் "நைற்றிக் காசிற்"றை அல்லது "காடிக்கார"மென்னும் "சில்வர்நையிற்றெயிற்"றைக் கையிற்படாமல் ஒருகுச்சியில் பஞ்சினாற்தொட்டுக் குறித்த ஸ்தானங்களில் பூசினாலும் அவ்விடங்களிற் புண்ணாகும். பின்னர் புண் விரைவிலாறுமலிருக்க மேற்கூறிய காரத்தைப் பூசியும் வரலாம். இவைகளினால் சிலருக்கு அதிக நயமுண்டாகவில்லை. சிலருக்குச் சுகமுண்டாகியது. இருந்தாலும் மேலே கூறிய காரங்களை உபயோகித்தவர்களுக்கு இரண்டு மூன்று ஆண்டு காலங்களுக்கு இன்னேயின் வேதனை இல்லாமலிருந்தது.

குறிப்பு :— முன் அனுபோகப்படாத புது வைத்தியனே ஷை நரம்புகளைத் தெளிவாயறியும் பொருட்டு இயந்திரிப்பு முறையாகிய கழுத்தில் சீலைசுற்றும் முறையைக் கையாள வேண்டுமேயன்றி நன்கு அனுபோகம் வாய்ந்த பண்டிதர்கள் குறித்த தானங்களை நன்கு அறிவார்களாகையால். ஷை சீலை சுற்றி நரம்புகாணும் இயந்திரிப்பு முறை அவர்களுக்கு வேண்டியதில்லை. அன்றியும் இரத்த மோட்ஷணமென்னும் சிகிட்சையினாலும் இவ்வியாதியைச் சுகப்படுத்தலாம். அச்சிகிட்சை வேறிடங்களில் விபரமாயெழுத வேண்டியிருப்பதால் இவ்விடத்தில் அதனைக் கூறாது விடவேண்டியதாயிற்று.

## 2-வது கபால பித்தவாத குணம்.

பித்தமாவது வாதத்தோடு கூடி, கபாலத்திலேறி, அறிவை மயக்கிய காரணத்தால் இவ்வியாதியாளன் தன்னிலை தப்பி பலவகையான அர்த்தமற்ற பேச்சுக்களைப் பேசலும், பாடலும், ஆடலும் செய்வான். இவனுக்குக் கண்களில் புகைச்சலுடனிருமல், உச்சந்தலை யிடித்தல், நோதல், ஆகிய உபத்திரவங்களுண்டாம்.

**சிகிட்சை :**

**பொன்னுங்காணி நெய் :** பொன்னுங்காணி, நரிப்பயறு, சீந்தில் தண்டு, முன்னை, பாதிரி, நொச்சி, முள்ளங்கி, துளசி, நாரத்தைப் பழம் (தேன் தோடம் பழம்) இலந்தை கொட்டிக்கிழங்கு, மல்லிகை, வில்வம், முல்லை, கரும்பு வெள்ளரிக்காய், பூமிசர்க்கரைக் கிழங்கு, தாழை விழுது, தைவேளை, இவைகளின் சாறு வகைக்குப் படி அரை.

இருவேலி, நன்னாரிவேர், சாரணைக் கிழங்கு, இலாமிச்சு, பற்பாடகம், சீந்திக் கிழங்கு, சிற்றாமுட்டி. பேய்ப்புடோல், கொட்டை நீக்கிய திரிபலை, திரிகடுகு இவைகள் வகைக்கு பலம் 10. இருபத்திநாலுபடி நீர்விட்டு அரைக்கால்படியாக வற்றக் காய்ச்சி வடித்து, இவற்றுடன் பசுநெய், பசும் பால், இளநீர் இவைகள் வகைக்கு படி 3 கலந்து,

ஏலம், நாகம்பூ. இந்துப்பு, முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம், கடுக்காய்ப் பிஞ்சு, சிவதை, கடுகுரோகணி, கோட்டம், தேவதாரம், வாய்விளங்கம், ஓமம், சடாமாஞ்சில், திப்பலி மூலம், மஞ்சள், செஞ்சந்தனம், தகரம், குங்குமப்பூ இவை வகைக்குக் கழஞ்சு 3. இவைகளில் குங்குமப்பூ நீங்கலாக மற்றவற்றை இடித்துப் பொடி செய்து முற்கூறிய திரவங்களிலொன்றினால் நன்கரைத்துக் கஷாயத்திற் கரைத்துச் சிறு கொதியிட்டு மெழுகு பதத்தில் நெய்யை வடித்துச் சூட்டுடன் குங்குமப்பூவை அரைத்துக் கலந்து மூன்று தினஞ் சென்றபின் நாளொன்றிற்கிருநேரம் நாற்பது நாளுண்டு இளவெந்நீர் குடித்துவரின் பித்த வாத கபாலந்திரும். பத்தியம் முற்கூறியவாறு காத்து வரவும்.

## 4-வது கபாலவாத சேற்பன குணம்.

இது கபாலத்திலுள்ள நரம்புகளில் வாதமும், சேத்துமமும் தொந்தித்து விகாரப்படுவதினால் உண்டாவது. இதன் குணங்களாவன: கபாலத்திலதிக வேதனையாக வலித்தல், வேர்வை காணல், அவ்விடத்தில் வெப்பமுண்டாதல், பற்கிட்டுதல், வாயிலிருந்து வழுவழுப்பான நீர்விழுதல், முகம் வெளுத்தல், இருமலுண்டாதல். நாளடைவில் உணவில் வெறுப்புண்டாதல், கழுத்துக்கு மேற்பட்ட உறுப்புகளில் அதைப்புக் காணல். உடம்பு உலர்தல். கண்குழி விழுதல் ஆகிய குணங்களை உண்டாக்கும்.

சிகிட்சை :

**திப்பிலி ரஸாயனம் :** திப்பிலி பலம் 1, சீந்திற்கொடி, கற்கடகசிங்கி, திரிபலை, சடாமாஞ்சில், சிற்றரத்தை, சுக்கு, வெண்கோட்டம், விழாலரிசி, சிவதைவேர், கடுகுரோகணி

அதிமதுரம், தேவதாரம், நற்சீரகம், முந்திரிகைப்பழம், ஏலரிசி, கராம்பு, கச்சோலம், ஓமம், வாய்விளங்கம், கண்டில் வெண்ணெய், தாளிசபத்திரி, அக்கராகாரம், கருஞ்சீரகம், கடல்நுரை, பேரீச்சம்பழம், வால்மிளகு, இருவேலி இவைகள் வகைக்குக் கழஞ்சு 2.

**செய்முறை :** இவைகளை நறுக்கி இடித்து சூரணம் செய்து ஒரு புதுப் பாண்டத்தை அடுப்பில் வைத்துச் சூடு உண்டாக்கி அதை இறக்கி ஷை சூரணத்தை அப்பாண்டத்திலிட்டுக் கருகாமல் வாசனையெழும்ப வறுத்து ஒரு பீங்கான் பாத்திரத்திற் சேர்த்துக் கொள்ளவும். பின்னர் பசு நெய், தேன் இவைகள் வகைக்கு அரைப்படிவீதம் ஷை சூரணத்தில் கலந்து பின்னர், விற்வப்பூப் பன்னீர், அல்லது ரோசாப்பூப்பன்னீர் இவை இரண்டில் ஒன்றைக் கால்படி எடுத்து ஷை மருந்துடன் கலந்து பிசைந்து வெய்யிலில் வைத்து எடுத்துப் பக்குவம் செய்யவும். இந்தரஸாயனத்தில் ஒரு புன்னைக்காய் வீதம் காலை, மாலை இரு நேரமாக 20 முதல் 40 நாள் வரை உண்டு அபத்திய பதார்த்தங்களை நீக்கி, உணவு உட்கொண்டு, முற்கூறிய ஆயில்ப்பட்டைத் தைலம் முதலியவற்றிலொன்றைத் தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்துவரில் கபாலவாத சேற்பனம் முதலிய தொந்த கபால ரோகங்கள் நீங்கும்.

**விளக்கம் :**

சிலர் வாத பித்த தொந்தத்தினாலுண்டாகும் கபால ரோகம் வாதத்திற்குரிய காலமாகிய சூரியன் உதிக்கும் போது தோன்றிச் சூரியன் ஏற ஏற அதிகரித்து மத்தியத்தில் மிக்க வேதனை செய்து, பின்னர் சூரியன் மேற்றிசையிலிறங்க இறங்கப் படிப்படியாக நோயின் வேதனை இல்லாது நீங்கிவிடும். இதனைச் சூரியகபாலம். எழுஞாயிறு சூரியாவர்த்தம் என்றும், வாதசேற்பன தொந்திப்பினால்த் தோன்றி மாலைக் காலம் முதல் நடுநிசிவரை நோயேறி அதிகரித்தும், நடுநிசியின் பின் படிப்படியாகத் தணிந்து உதயத்தில் நோயின் வேதனை இல்லாது நீங்கிவிடுவதைச் சந்திரகபாலம், படுஞாயிறு, சந்திராவர்த்தம், என்றும்

கூறுவர். இது பொருத்தமாகக் காணவில்லை. எங்ஙன மெனில், செகராச சேகரம், பரராச சேகரம், என்னும் நூல்களில் வாதரோகத்தைக் கூறும் நிதானங்களில் சூரிய வாதத்தை, சூரியாவர்த்தமென்றும்; சந்திரவாதத்தை, சந்திராவர்த்தமென்றும் தலைப்பெயர் கொடுத்துக் குறித் திருக்கும் வாதரோகங்களுக்கும் ஈண்டு கூறிய கபாலவாத பித்தம், கபாலவாத சேற்பன மாகிய இரண்டுக்கும் மலைக் கும் மடுவுக்குமுள்ள வேற்றுமை போலத் தோன்றுகின் றது. இதனை அறிஞர் ஆராய்ந்துகொள்ளுமாறு அச் செய்யுள்களைக் கீழே தருகின்றோம். அச்செய்யுள்கள் வருமாறு:—

"தலைகனத்துச் சுழற்றிஉட நடுக்க முண்டாய்ச் சாற்றிடி
லுட்டண வேர்வை யதிகமாகி
நிலைகனத்து நாசடைத்துத் தும்மி யூர்ந்து நீர்விழுந்து வுளைந்து
குத்தி வலியுண்டாகும்
கலைகனத்த கிரணமதி முகத்தை வெல்லும் கணையென நல்
விழிபடைத்த கமல மின்னே
மலைகனத்த கொடுமுடிசே ருதய மீது மருவிடுசூ ரியவாதம்
மகிழ்ந்து காணே."

என்றும்;

"சூரியவாதந் தோன்றிற் றும்மலுஞ் சலமு மூறும்
பாரிதாய்த் தலைகனத்துப் பரந்துட லழற்றி வேர்த்துச்
சீரிடாதடைத்துளுசி சிந்திட வலியு முண்டாய்ச்
சாரிதாய்த்தலை நடுக்கும் சாற்றுஞ் சூரியவா தந்தான்."

என்றும் செகராச சேகர நூலார் கூறுவர்.

"இயம்புசூ ரியவா தந்தா னிடத்தாதல் வலத்தி லாதல்
நயந்தமூக் கடியைப் பற்றி நயனமும் புருவ நொந்து
வியன்கதிர் தோன்றத் தோன்றி மிகுமுச்சிப் போது மேலாய்ப்
பயன்பெற நோவு தீரும் பாவையே பழகு வாயே."

என பரராசசேகர நூலாரும் சூரியவாதத்தின் குணத்தைக் கூறியுள்ளார். இனிப் படுஞாயிறு வென்னும் சந்திர வாதத்தைக் கூறுங்கால் பரராசசேகர நூலார்

"பழகிய சந்திர வாதம் பயன்பெற முன்பு சொன்ன
அழகிய குணமு முண்டா யந்தியம் போது தோன்றி
எழுமுத யத்தே தீரு மிக்கமுக் கனியுந் தேனும்
குழலுமா மொழிநல் லாளே கூறினேங் கண்டு கொள்ளே."

என்று கூறுவர்.

இனி ஷை கபாலரோகங்களுக்கு நமது அனுபவத்தில் வந்த சில அரிய முறைகளை இதன் கீழ் தருகின்றோம்.

**கபாலரோகம், பீனசம், நேத்திரரோகம், முதலியவற்றிற்குத் தைலம்:** நல்லெண்ணெ, பசுப்பால் வகை படி 3. இளநீர், கற்றாழைச் சாறு, தாழைவிழுதுச் சாறு, கர்ப்பூரவள்ளிச் சாறு, மொசுமொசுக்கைச் சாறு, பொன்னாங்காணிச் சாறு, நெல்லிக்காய்ச்சாறு, வகை படி $1\frac{1}{2}$. இவைகளை ஒரு பாண்டத்தில் சேர்த்துக்கொண்டு; ஏலம், குங்குமப்பூ, வெட்டிவேர், சந்தனம், இலாமிச்சு, நற்சீரகம், சிற்றரத்தை, குங்குமப்பட்டை, நாகம்பூ, ஓமம், வாலுழுவை அரிசி, கொத்தமல்லி, அதிமதுரம், மரமஞ்சள், கிளியூறல் பட்டை, கராம்பு, மஞ்சள், வெட்பாலரிசி, கஸ்தூரி மஞ்சள், பச்சிலை, தேவதாரம், குக்கில், செண்பகப்பூ, தான்றிக்காய், குளவிந்தமஞ்சள், வகை கழஞ்சு 3. இவைகளில் குங்குமப்பூ நீங்கலாக மற்றவற்றை யிடித்து மேற்கூறிய திரவங்களொன்றிலுலரைத்து, கஷாயத்தில் கலந்து சிறுதீயிட்டு எரித்து மெழுகு பதத்தில் 5-ம் நாள் வடிக்கும் போது வடிகலசத்தில் குங்குமப்பூவைப் பொடி செய்து போட்டு வடித்துக் குப்பியில் அடைத்துக் கொள்ளவும்.

இத்தைலத்தைச் சிரசிற்குத் தேய்க்கும் போது; காது, கண், மூக்குத் துவாரங்களில் மும்மூன்று துளி வீதம் விட்டு, உள்ளங்காலிலும் நன்கு தேய்த்துப் பின் ஆவாரை யிலை, பயறு, சிகைக்காய் இவைகளில் ஒன்றை அரைத்துத் தலைக்குத் தேய்த்து இளவென்னீரில் வாரமிருமுறை ஸ்நானம் செய்யவும்.

**தீரும் வியாதிகள்:** கபாலரோகங்கள், விழிநோய்கள், பீனசம், சூரியவாதம், முதலிய சிரத்தைப்பற்றிய வாத நோய்களும், பித்த ரோகங்கள் தந்தநோய்கள், காதில் வரும் நோய்கள், தொண்டை நோய், அஸ்திச்சூடு, தேக எரிச்சல், மூலக்கொதிப்பு, பிரமியரோகங்கள் இவை முதலிய பிணிகள் நீங்கும். சிலமுறைகளில் இத்தைலத்தில் நெல்லிக்காய், பொன்னாங்காணி, இவையிரண்டு சாறுகளையும் நீக்கிக் கூறியிருக்கின்றனர். அத்தைலமுங் குணந்தரத்தக்கதே என அறிக.

**தாமரைவளையத் தைலம்:** தாமரைவளையம், தண்ணீர் விட்டான் கிழங்கு, தாழை விழுது, வல்லாரை, கையாந்த கரை, நெல்லிக்காய் இவைகளின் சாறும், இளநீர், பசுப் பாலும் வகை படி 1. நல்லெண்ணை படி 2. இவைகளை ஒன்று படக் கலந்து கொள்ளவும். சிற்றுமுட்டி, இரு வேலி, இலாமிச்சு, நன்னாரி இவை வேர், கீழ்காய்நெல்லி ஸமூலம், வகைக்குப் பலம் 5. இவைகளை நறுக்கி 16 படி தண்ணீரிலிட்டு அரைக்காலாக வற்றக் காய்ச்சி முன் கஷா யத்துடன் கலந்து கொள்ளவும். பின்னர் சாதிக்காய், சாதிபத்திரி, வசுவாசி, ஏலம், இலவங்கம், தகரம், குங்கு மப்பூ, சடாமாஞ்சில், அதிமதுரம், தேவதாரம், புனுகுச் சட்டம், நெரியரிசி, கோரோசனை, செண்பகப்பூ, பூலாங் கிழங்கு, பச்சிலை, சதகுப்பை, கிளியூறல்பட்டை இவை வகை கழஞ்சு 2. இவைகளில் குங்குமப்பூ, கோரோசனை, புனுகுச்சட்டம் இவை மூன்றும் நீங்கலாக மற்றவற்றை நறுக்கி யிடித்துப் பொடிசெய்து முன் திரவங்களொன்றினு லரைத்து முன் கஷாயத்தில் கலந்து ஐந்தாம் நாள் மெழுகு பதத்தில் வடிக்கும் போது குங்குமப்பூ, கோரோசனை இவற்றைப் பொடி செய்தும், புனுகுச் சட்டத்தை மெல் லியதாக அரிந்தும், வடிகலசத்திலிட்டுச் சூட்டுடன் வடித் துக் கொள்ள வேண்டியது.

**தீரும் வியாதிகள்:** கபால வாய்வு முதலிய கபால ரோ கங்களும், ஈழை, கண்ணோய், பீனசம், அஸ்திசுரம், தேக வரட்சி, பிரமேகம், மூலம், பெரும்பாடு முதலிய ரோகங் கள் குணமாகும்.

**பத்தியம்:** அன்று புளி, புகையிலை, பகல்நித்திரை, இவைகளை நீக்கிக் காற்று, வெய்யில் இவை படாமல் இருந்துகொள்ளவும். இத்தைலத்தை முற் :தைலத்தில் கூறியவாறு தலைமுதலிய உறுப்புக்களில் தேய்த்து அதி காலையில் ஸ்நானம் செய்து வரவேண்டியது.

**அமிர்த சர்க்கரை:** நிலக்குமிழ் வேர்ப்பட்டை, நெருஞ்சி சமூலம், அமுக்கராய் வேர், சிந்தில்க் கிழங்கு, முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம் தாமரைவளையம், சாத்

தாவரி, இருவேலி, இலாமிச்சம் வேர், நிலப்பனங்கிழங்கு, குருந்தம்வேர், அதிமதுரம், சந்தனம், கர்ப்பூரம், திரிபலை, கோட்டம், குங்குமப்பூ, சாதிக்காய், அடவிகச்சோலம், கற்கடகசிங்கி, நாகம்பூ, தக்கோலம், வால்மிளகு, வகை கழஞ்சு 1. முந்திரிகைப்பழம், பேரீச்சம் பழம், கர்ப்பூரம், குங்குமப்பூ இவற்றை நீக்கி மற்றவற்றை இடித்துச் சூரணஞ் செய்து கொண்டு முன் சொன்ன முந்திரிகைப்பழம் முதலிய நான்கு சரக்குகளையும் சேர்த்து அரைத்துக் கொண்டு இச்சூரணங் கண்ட எடைக்கு இரண்டு பங்கு வடிகட்டிய சீந்தில் சர்க்கரை (சீந்தில் மா) சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ளவும்.

**அனுபானம் :** சீனி, பசுப்பால்.

**தீரும் வியாதிகள் :** கபால பித்தசேற்பனம் முதலிய சிரரோகங்களும், அழல்வாதம், குத்து, வயிறு, கை, கால் முதலிய அவயவங்களில் எரிவுகள், நீர்க்கடுப்பு, பெரும்பாடு இரத்தப் பிரமியம், மூச்சு, முட்டு, இருமல் இருதயத்தைப் பற்றிய ரோகங்கள், மேகம், பிரமேகம், கிரந்தி, காசம் இவை முதலிய பிணிகள் தீரும். இம்முறையில் சீந்தில்மா நாலுபங்கு சேர்த்துச் செய்வாருமுளர். அது சிறிது தீபன பாசனத்தைக் குறைக்குந்தன்மை உடையதாயிருப்பதை அனுபோகத்தில் காண்பிக்கின்றோம்.

அசாத்தியம் நாலும் முற்றிற்று.

---

## 2-வது கபாலக் கரப்பானின் குணமும் அவற்றிற்குறிய சிகிட்சைகளும்.

**கபாலக் கரப்பான் வரும் காரணம் :** கிருமி முதலிய அசுத்தங்கள் நிறைந்த நீரில் ஸ்நானஞ் செய்வதினாலும், அதிக காங்கையான வெய்யிலில் திரிவதலாலும், தலையிலழுக்குப் படிதலாலும், கெட்ட நோயுள்ள ஸ்திரீகளோடு சேர்க்கை செய்வதாலும், தலையிலதிக வேர்வை கொள்ளுதலாலும், அதிக குளிர்ச்சியினாலும், கொழுப்பு நிறைந்த உணவுகளைப் புசிப்பதினாலும், அசுத்தமாகிய காற்று உடம்பில்

படிதலினாலும், மீன் பதனழிந்த மாமிசம், எருமைப்பால், நெய், பனைவெல்லம், முதிர்ந்த வாழைக்காய், கத்தரிக்காய். முள்ளிக்காய், பதனழிந்த மாவடு மாங்கனிகள் இவைகளை அபரிமிதமாக உண்பதினாலும், தேகத்தில் வண்டு, எலி முதலியவைகளின் விஷங்கள் தாக்குதலாலும், உடம்பிலதிக உஷ்ணம் மீறி இரத்தத்தில் கிருமிகொண்டு இரத்தம் கெடுவதாலும், விஷசுரத்தின் வேகத்தாலும், சிரத்திலுள்ள தாதுப்பொருள்கள் விகாரமடைந்து ஆங்குள்ள வாத, பித்த, கபம் முதலிய தோஷங்களையும், இரத்தம் முதலிய தாதுக்களையும், ஆச்ரயித்துக் கபாலத்தில் கரப்பான் நோய்கள் உண்டாகின்றன.

இவை ஆறுவகைப்படும். அவற்றின் பெயர்கள்;— வாத கரப்பான், பித்தக்கரப்பான், சேற்பன கரப்பான், செங்கரப்பான் வெண் கரப்பான், கருங்கரப்பான் என்று சொல்லப்படும். இவற்றில் வெண்கரப்பான், வாதக்கரப்பான் ஆகிய இரண்டும் அசாத்தியம். பித்தக்கரப்பான், சேற்பன கரப்பான், செங்கரப்பான், கருங்கரப்பான் இவை நான்கும் சாத்தியமாகும்.

**அசாத்திய மிரண்டில் முதலாவது வாதகரப்பானின் குணம் :** முகம் மினுமினுத்து வீங்கும். உடம்பு குளிர்ந்து விறைக்கும். சந்துகள், பிடரி, இவைகளில் நொந்து தலை அதிக கனப்பாயும் அவ்விடத்தில் நீரும் சீழும் பாய்ந்து அனல் போலெரிந்து குத்துண்டாகும். அதன்பின்னர் தலை வரண்டு அகறுகள் காய்ந்து மிகவும் அரிப்புண்டாகும். அதனைச் சொறிந்தால் அபொருக்குச் சாம்பல்போல் அவ்விடத்தினின்றும் விழும். அவ்விரணங்களில் நெய் போன்ற வழுவழுத்த நீர்வடியும். மிகவும் துர்நாற்ற முண்டாகும் என்பர்.

**இதற்குச் சிகிச்சை :**

**நிலவாகை யெண்ணை :** நிலவாகையின் சமூலம், கருடக் கொவ்வை யிலை, சங்கமிலை (இயங்கமிலை). இஞ்சிக்கிழங்கு, சங்கங் குப்பியிலை. பூவரசம் பட்டை, அவுரி யிலை, புங்கம் வேர், கொன்றையிலை, உத்தமாகாணி யிலை, சிறுகாஞ்

சோன்றி யிலை, இவைகளைத் தனித்தனியே யிடித்துப் பிழிந்த சாறுகள் வகைக்குப் படி கால். ஆமணக்கெண்ணை படி 1. இவைகளைத் தைலபாண்டத்தில் கலந்து வைத்துக்கொண்டு பின்னர், கருஞ்சீரகம், வெண்சிவதை வேர், மஞ்சள், வசம்பு, வெள்ளுள்ளி, குளவிந்த மஞ்சள், மரமஞ்சள், இலவங்கப்பட்டை, கஸ்தூரிமஞ்சள், கருஞ்சிவதை வேர், கடுகுரோகணி, சுத்திசெய்த துத்தம், துருசு, மிளகு இவை வகைக்குக் கழஞ்சு 1. இவைகளை யிடித்து ஷி சாறுென்றினாலரைத்து முன் கஷாய எண்ணைகளில் கலந்து நாலுநாள் கொதியிட்டு ஐந்தாநாள் மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். இவ்வெண்ணையைக் காலையில் முக்கால் பலம் வீதம் குடித்துத் தலையிலும் பூசிவரவும்.

**தீரும் வியாதிகள்:** கபால கரப்பான், கபாலச்சொறி, தினவு, இவைகள் தீருவதுமன்றி, உடம்பிலுள்ள கிரந்தி கரப்பான் சம்பந்தமான நோய்களும் தீரும்.

**துளசி எண்ணெய்;** துளசி, குருந்து, நொச்சி, உத்தமாகாணி, கையாந்தகரை, சிறுகாஞ்சோன்றி, கொட்டாங்கரந்தை, கருக்ருவாச்சி, கற்ருழை, சீதேவியார் செங்கழுநீர், வேம்பு, முருக்கு, பொற்றிலைக் கையாந்தகரை இவைகளின் இலைச்சாறு வகை படி கால். ஆமணக்கெண்ணை படி 1. இவைகளைத் தைலபாண்டத்தில் கலந்து வைத்துக் கொண்டு பின்னர், சிவன் வேம்பு, அவுரி, நன்ஞரி, பெருமருந்து, நிலவாகை இவைகளின் வேர், கருஞ்சீரகம். இந்துப்பு, அதிமதுரம், சந்தனம், அகில் அக்கராகாரம், நற்சீரகம், சிவதைவேர், ஓமம், சுத்திசெய்த காந்தம், கெந்தகம், அரிதாரம், கடுகு, பொரித்த வெண்காரம், சடாமாஞ்சில், சித்தரத்தை, கொட்டை நீக்கிய திரிபலை வகை கழஞ்சு 1. இவைகளை இடித்து அரைத்து முன் முறையிற் கூறிய பிரகாரம் கலந்து வடித்து உள்ளும் குடித்துத் தலையிலும் பூசிவரவும். மேற்சொல்லிய ரோகங்கள் யாவும் தீரும். இவ்விரண்டு எண்ணைகளும் விரேசன குணமுடையதால் அவற்றைக் காலையில் உட்கொண்டு, தேநீர், கஞ்சித் தெளிவு இவைகளிலொன்றை எண்ணை குடித்த இருமணி நேரத்தின் பின் குடித்துவர வேண்டியது. நன்கு பேதி

யானபின் புளி, காரம், கரப்பான் பண்டங்களை நீக்கிப் பத்தியம் கொள்ளவேண்டும். தேகம் பலஹீனமானவர்கள் இவ்வெண்ணெயை ஒருநாள்விட்டு ஒருநாளாகப் பத்து முறை குடிக்கலாம். அதன் பின்னர் கரப்பான் ரோகங்களுக்கென இதன் கீழ்க் குறிக்கப்படும் ஒளடதங்களி லொன்றை உட்கொண்டு இந்நோய்களுக்குக் கூறிய தைலங்களிலொன்றைப் பூசிவர நன்மையுண்டாகும்.

## 2-வது கபால வெண்கரப்பான் குணம்

தலையில் புள்ளி புள்ளியாயும், நிறம் வெளுப்பாயும், இடை யிடையே குறுணல் போன்றும், செகிட்போன்றும், சிறுகொப்புளங்களுண்டாகும். அக் கொப்புளங்களிலிருந்து ஊறியூறி நீர்விழும். அதிக சொறியுண்டாகும். இடை யிடையே ஓடுவிழுந்து புண்ணாகும். அவ்விடத்தில் தடவினால் கரகரப்பாயிருக்கும். நாளடைவில் நோயாளி தேகம் வரண்டு மெலிந்து போவான். தலையின்றி உடம்பிலும் குத்து, உளைதல் முதலிய வேதனைகளுண்டாகும்.

**சிகிச்சை :**

**கெந்தகத் தைலம் :** சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் மூன்று கழஞ்சு எடுத்துக் கல்வத்திலரைத்து நுண்ணிய பொடிசெய்து வெள்ளைச் சீலையில் பரப்பி அச்சீலையை உருட்டித் திரியாக்கிக்கொள்ளவும். பின்னர் கால்படி நெய்யை ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு முன் சொன்ன திரியை ஒரு கம்பியில் பந்தம்போல் சுற்றி வழுவாது நன்கு இறுக்கிக் கட்டிக்கொண்டு பசுநெய்யிற் தோய்த்து அப்பந்தத்தைக் கொளுத்தி அதிலின்று விழும் சுடர் தைலத்தை மற்றொரு பீங்கான் பாத்திரத்தில் சேர்த்துக் கொள்ளவும். இப்படியே நெய் முடியும் வரையில் பந்தத்தில் விட்டுக் கொண்டே வந்து முடிவில் பீங்கான் பாத்திரத்தில் வீழ்ந்த நெய்யை மெல்லிய துணியில் வடிகட்டி வைத்துக்கொண்டு கால் பலம் வீதம் காலைமாலை ஏழுநாள் உட்கொண்டு தலைக்குப் பூசி வரவும். வெண்கரப்பான் தீரும்.

**அரிதாரத் தைலம் :** சுத்தி செய்த பொன்னரிதாரம் கழஞ்சு 1. உத்தமாகாணி யிலையை அரைத்து ஒரு பாக்

களவு எடுத்து அரிதாரத்தோடு சேர்த்துக் கல்வத்திலரைத்தெடுத்துக் கொள்ளவும். பின் புளியமிலை, சாணி இவைகளிலவித்து மூக்கு வெட்டிச் சுத்திப் படுத்திய சேங்கொட்டையில் ஆறு எடுத்துக் கையால் தொடாமல் ஒரு குறட்டினால் அச்சேங்கொட்டைகளைப் பிடித்து நான்கு துண்டுகளாக நறுக்கி கால்படி ஆமணக்கெண்ணெயில் போட்டு முன் அரைத்து வைத்த அரிதார கந்தகத்தையும் கலந்து கொள்ளவும். பின்னர் ஒரு எண்ணெய் பழகிய பாத்திரத்தில் இருபக்கங்களிலும் கிட்டி கட்டி அப்பாத்திரத்தில் முன் சொன்ன தைல கற்கங்களை விட்டு அடுப்பின்மீது வைத்து எரிக்கவேண்டியது. தைலம் நன்கு முறுகிய பதத்தில் தீப்பற்றும். அவ்வேளையில் மற்றொரு பாண்டத்தில் விட்டு ஷை தைலத்தைப் பக்குவமாக நீர்ப்பாண்டத்தில் விட்டு ஆறியபின் மிதக்குமெண்ணெயை நீர்ப்பற்றின்றி எடுத்துப் பக்குவப் படுத்திக் கரப்பான் புண்களிற் பூசிவரின் விரைவிற் குணமாகும்.

**குறிப்பு :—** சேங்கொட்டையின் உள்ளிருக்கும் பால் மிகவும் சாராக்கினித் தன்மை உடைத்தாதலால் அது தேகத்தில் படின் அவ்விடத்தில் விரணமுண்டாகும். ஆதலினால் கையில் நெய் அல்லது எள் முதலியவைகளின் தைலத்தைப் பூசிச் குறட்டினால் பிடித்து நறுக்குதல் நன்று. இங்ஙனம் செய்யில் அப்பால் தாக்கினும் அவ்விடங்களில் கெடுதலொன்றுஞ் செய்யாவென்பதை அறியவும்.

**ஏரண்டத் தைலம் :** கருக்குவாச்சி யிலை, முள்முருக்கிலை, கையாந்தகரை, உவாயமிலை, சங்கிலை, முதியார் கூந்தல், எருக்கிலை, ஊமத்தமிலை இவைகளின் சாறு சிற்றாமணக்கெண்ணெ வகைக்குப் படி 1. குங்கிலியம், மஞ்சள், சுத்திசெய்த சேங்கொட்டை, கடுக்காய், சுக்கு, மிளகு, சுத்திசெய்த துத்தம், துருசு, கெந்தகம், ரசம், கஸ்தூரிமஞ்சள், வெந்தயம், அதிமதுரம், வேம்பாடல் இவைகள் வகைக்குக் கழஞ்சு 3.

**செய்முறை :** ஒரு கல்வத்தில் கெந்தகத்தை யிட்டரைத்துப் பொடி செய்து அவற்றோடு இரசத்தைச் சேர்த்தரைக்கக் கறுப்பாகும். பின்பு துருசு, துத்தம் இவைகளைக் கூட்டி அரைத்து மற்றைய சரக்குகளைப் பொடி

செய்து கெந்தகம் முதலியவற்றோடு கலந்து முன்சொன்ன சாறுகள் ஒன்றினால் நன்கு அரைத்துக் கழாய எண்ணெயில் கலந்து கொள்ளவும். அடிப்பற்றாது சிறுதீயாக எரித்து நான்காம் நாள் கடுகு மெழுகு பதமாகும் பதத்தில் வடித்துப் பக்குவப்படுத்தித் தலையில் தடவ வெண்கரப்பான் ரோகங்கள் நீங்கும். இவ்வெண்ணெயைக் காலையில் கால் பலம் வீதம் உட்கொண்டு வரலாம். விரேசன குணமுடையது. பத்தியம் முற்கூறியவாறே யிருக்கவும்.

(தொடரும்)

# அறிவிப்பு

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்திற்கு சந்தா ஸம்பந்தமான வருஷம் ஜனவரி முதல் டிஸம்பர் முடிய (Calender Year) கணக்கு வைக்கப்படுகிறது.

அங்கத்தினர்களுக்கு வருஷச் சந்தா ரூ. 3—0—0

வைத்திய சந்திரிகை எனப்படும் மண்டலத்தின் மாதப்பத்திரிகை அங்கத்தினர்களுக்கு தனிக்கட்டணமின்றி வழங்கப்படும்.

விளம்பர விகித விஷயங்கள், அங்கத்தினர்களின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந்தேதிக்குள் பத்திரிகை கிடைக்காவிடில் தெரிவிக்கப்படவேண்டியது. மற்றும் பத்திரிகை நிர்வாஹ ஸம்பந்தமான ஸகல விஷயங்களுக்கும் உபகார்யதர்சிக்கு எழுதிக்கொள்ளவேண்டும்.

ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி, ஆயுர்வேதாசார்ய,
ஆசிரியர்: வைத்ய சந்திரிகா,
ஆத்ரேயாசிரமம், தென்னூர்ரோடு திருச்சிறுப்பள்ளி.

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுதவேண்டும்.

**குறிப்பு:** சந்திரிகையில் பிரசுரமாகும் இதரர்களுடைய கட்டுரைகளில் காணும் மதபேதங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல. பிரசுரத்திற்கு அனுப்பவேண்டிய விஷயங்கள் தெளிவான எழுத்தில் காகிதத்தில் ஒரு பக்கத்தில் கொஞ்சம் இடம் (Margin) விட்டு எழுதப்படவேண்டும். விஷயத்தைப் பிரசுரிக்க காலம், இடம், அளவு முதலியவைகளில் ஆசிரியருக்குப் பூர்ண ஸ்வாதந்தர்யம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பிப் பெறவேண்டுமாகில் தபால் கட்டணம் கட்டுரையாளரால் அனுப்பப்படவேண்டும்.

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# சரபேந்திரர் வைத்ய முறைகள்

Dr. S. வெங்கட்டராஜன், L. I. M. (Regd)
சரஸ்வதி மஹால், தஞ்சை.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## 9. பிள்ளை பிறந்து சீழ் கட்டின பேருக்கு மருந்து.

எள்ளு நாழி யூற வைத்துப் பிசைந்தும்
அதனை யிறுத் தெடுத்து
மெள்ள வுழக்குச் சாறதனில்
வெங்காரந் திப்பிலி பொரித்திட்
டள்ளிப் பொடித் தண்ணீர் கலந்து
மரிவை யருந்த வளித்திடவே
பிள்ளை பிறந்து சீக்கட்டும்
பிணி போமென்று பேசினரே. (139)

(இ-ள்.) எள்ளு ஒரு நாழி எடுத்து அதைச் சுத்தத் தண்ணீரில் ஊற வைத்து, அதை நன்றாகப்பிசைந்து மேல் தெளிவு நீரில் 1 உழக்கு எடுத்துக் கொள்ளவும். பொரித்த வெங்காரம், திப்பிலி இவ்விரண்டின் சூரணத்தை ஷை இறுத்த நீரில் கலந்து தினந்தோறும் அருந்தி வர குழந்தை பிறந்ததனாலுண்டான சீழ்க்கட்டு (உதிரச் சிக்கல்) நீங்குவதுடன் பற்பல ரோகங்களும் நிவ்ருத்தியாகும்.

அரிவை — 25 வயதுள்ள பெண்.

## 10. குழந்தைகளின் பட்சி தோடத்திற்கு

கடுகு மிளகு கரிசாலங்கண்ணி
கீழ்காய் நெல்லியும் புள்
ளடியாவின் பால் வார்த்தரைத்தெண்
ணையிலிட்டங் கருந்திடவே
பம்மிதினிலாம் பாலகனுக்குப்
பக்கிதோடம் பறக்குமென்க
கடலின் கட்டிற் சுழித்தெழுங்
காவிரி நாடாள மன கட்டுரையே. (121)

(இ-ள்.) கடுகு, மிளகு, கரிசாலங்கண்ணி, கீழ்நெல்லி, சிறுபுள்ளடி இவைகளை சமமெடுத்து பசும்பால் விட்டு அரைத்து சுத்த நல்லெண்ணெயில் குழப்பிக் குழந்தைக்குப் புகட்ட பட்சி தோஷம் நீங்கும்.

பட்சி தோஷக் குறி குணம் :

குறிப்பு:-குழந்தைக்கு வயிறுஉப்பிசம், தண்ணீராக பேதியாதல் வாந்தி எடுத்தல், தலை தூக்காமலிருத்தல், கண்களில் பீளைசாறு தல், பற்பல விதமாக ஜ்வரமடித்தல், வீறிட்டு அழுதல், மூலை யுண்ணுதிருத்தல், கழுத்து பெரிதாகி முகம் சிறுத்தல் ஆகிய வைகளாம். இது ஆண் பட்சி தோடம், பெண் பட்சி தோடம், அலி பட்சி தோடம், மலட்டுப் பட்சி தோடம் என 4 வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

## 11. குருவி தோடத்திற்கு மருந்து

வரட்சுண்டியம்மான் பச்சரிசி வேரை
வசம்புள்ளியுடனறுக்கி வாய் பேசாமல்
தருக்கியுண்ணக் குருவி தோடங்களெல்லாஞ்
சாராதென்றே சரபதுங்கர் சொன்ன
திருத்தியதாம் வாகட நூலுரைக்க வல்லோர்
திவாகர சூடாமணிகள் செய்யுட்கோவை
வருக்க விலக்கணமைந்துங் கற்றுணர்ந்தே
வரகவி களெனவுலகோர் மதிப்பர்தாமே. (155)

(இ-ள்.) வாய் பேசாமல் அம்மான் பச்சரிசி வேரும் வரட்சுண்டி வேருங் கூட்டி, வசம்பும், வெள்ளைப்பூண்டும் நறுக்கி கூடப் போட்டு, எல்லாவற்றையும் மென்று சாப் பிட குருவி தோடம் தீரும்.

1. குருவி தோடக் குறி குணங்கள் :

குறிப்பு:—குழந்தைக்கு உடம்பு வலித்தல், குடித்த பால் செரி யாமல் கக்குதல், மேல்மூச்சு வாங்கல். தூங்கும்போது திடீ ரென வீரிட்டு அழுதல், தலையுச்சி பள்ளம் விழுதல், குழந்தை கையில் தங்காமை, வயிற்றுக் கடுப்பு, சுரம் இவைகளுண்டா தல் முதலியவைகளாம்.

2. ஐந்து இலக்கணங்கள் :

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன.

3. வரகவிகள் :

பிறக்கும் போதிலிருந்தே கவி பாடும் வன்மை.

### 12. மாந்தத்திற்கு மருந்து

நல்லெண்ணை நீர்முள்ளி நறுஞ்சாறு
முருங்கையிலை நல்லசாறு
மெல்லவே சமனுக விடுகலந்து
கொடுமாந்தம் விட்டே விட்டே
யல்லலினிச் செய்யோ மென்றகலு
மிதைச் சரபேந்திர ராயுனூற்கண்
டில்லறத்தோர்க் கினிதாய் மற்றேனை
யோர்க்கு மியல்பா யியம்பினுரே (160)

(இ-ள்.) சுத்தமான நல்லெண்ணை, நீர்முள்ளிச்சாறு சமூலம், முருங்கையிலைச்சாறு, இவைகளைச் சமனுக எடுத்துக் குலுக்கி குழந்தைக்குப் புகட்ட, "இனி இக் குழந்தைக்கு கஷ்டம் கொடுக்க மாட்டோம்" என்று சொல்வது போல மாந்தம் தீரும்.

### 13. மாந்தத்திற்கு மாத்திரை

திருகடுகங் திரிபலை வகையொன்றுக்கு
சீர்செய் பலமரை சுத்திசெய்த வாளப்
பருப்பு பலமொன்றிவைகள் மிளகளவதாகப்
பண்ணுமுண்டை கொளச்செய் பரக்கு மாந்த
வருக்கமெனச் சரபேந்திரன் மகிழ்வாற் சொன்ன
வாகட நூலுணர்ந்தவரே வைத்யரெல்லாம்
விருப்பமுடனே மெச்சு மேன்மையுள்ள மேதாவி
யோரெனவே விளம்பலாமே (165)

(இ-ள்.) சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், நெல்லி வற்றல், தான்றிக்காயிவைகள் வகைக்கு அரைப் பலம், சுத்தி செய்த வாளம் 1 பலம். இவைகளைக் கல்வத்திலிட்டுத் தண்ணீரினுலரைத்து மிளகளவு மாத்திரைகளாக வுருட்டவும். இதில் 1 மாத்திரை உட்கொள்ள நன்ருக மலங்கழிந்து மாந்தம் திரும்.

### 14. மாந்த வலிப்புக்கு தூபம்

வடக்கயிறு கோழியிறகுடனே நல்ல
மாட்டுக் கொம்புந் தலையின் மயிரீதெல்லா

*யிடித்து வாசனத்திலுடம் பெங்கும் பூசி*
*யிப்புகை காட்டவு மாந்த வலிப்பு மேகும்.*
*அடுத்தவருக் கருள் புரியுஞ் சரப்பூபனறிந்து*
*சொன்ன விம் முறையை யறிய வல்லோர்*
*படித்தவரின் மிக்கவராய் பரிசுள் ளோராய்*
*படிமிசையில் வாழ்வ ரெனப் பகரலாமே.* *(171)*

(இ-ள்.) வடக்கயிறு, கோழியிறகு, மாட்டுக் கொம்பு, தலைமயிர் இவைகளை கத்தரித்தோ அல்லது சீவியோ தூளாகும்படி செய்து நெருப்பிலிட்டு எழும் புகையை வலிப்புள்ள குழந்தையின் ஆசனத்திலும் உடம்பிலும் காட்ட வலிப்பு நிற்கும்.

## 15. குழந்தைகளின் கக்குவானுக்கு மருந்து

*குட்டி விளா களிப்பாக்கு கூறு நெய்*
*கொட்டான் பழமும் கொடு வெந்நீரில்*
*இட்டுணச் செய் முப்பிறை கண்டெழுங்*
*கக்குவான் ஏழு நாளில் போமென்றுங்*
*கட்டளை செய் திடு சரப காவலர் வர்கடங்*
*குடகீழ் கடறென் கன்னி*
*யிட்டவட வேங்கடமா மெல்லையப்பாலு*
*மிசை பெற்றிருக்குந் தானே.* *(156)*

(இ-ள்.) குட்டிவிளா, களிப்பாக்கு, நெய்கொட்டான் பழம் (பூவந்திப்பழம்) இவைகளை அறைத்து வெந்நீரில் கொடுக்கவும். மூன்று பிறை யாகுமட்டும் வருந்தச்செய்கின்ற கக்குவானிருமல் 7 நாளில் குணமாகும்.

**குறிப்பு:**—இச்செய்யுளில் தமிழ் நாட்டின் எல்லை குறிப்பிடப் பட்டிருக்கிறது.

(தொடரும்)

# ॥ जलौकोऽवचारणम् ॥

## அட்டைகளின் பிரயோக முறை.

சோதனக்கிரியைகளில் ரக்தமோக்ஷம் என்பது ஒரு பிரதானக்கிரியையாகும். ரக்தாவஸேசனம் செய்ய உபாயங்கள் பல. சிருங்கம் (கொம்பு) ஜலௌகம் (அட்டை) அலாபு (சுரைக்குடுக்கை) இவைகளால் ரக்தத்தை வெளிப்படுத்தல் லகுவான கிரியை. சிராவியதமென்று சொல்லப்படும் ரக்தக்குழலை ஒழுங்காக வெட்டி ரக்தாவஸேசனம் செய்தல் மிகப்பெரிய கஷ்டஸாத்தியமானகிரியை. ஆனால் சிராவியத சிகித்ஸை வியாதிகளை ஸமூலம் நாசம் செய்துவிடும். ஆகவேதான் அதை:—

"सिराव्यधश्चिकित्सार्धं संपूर्णं वा चिकित्सितम् ।
शल्यतन्त्रे स्मृतो यद्वत् बस्तिः कायचिकित्सिते ॥
यथा रक्तमधिष्ठानं विकाराणां विकारिणाम ।
अन्यन्न हि तथा दूष्यं कर्मेदं प्रथमं ततः ॥"

என்று புகழ்கின்றனர். வியாதிகளுக்கு எல்லாவற்றைப் பார்க்கிலும் ரக்தமே பிரதான இருப்பிடம். ரக்தாவஸேசனம் ரக்த சுத்திக்கு முக்கியம். ரக்தாவஸேசன கர்மாக்களுக்குள் சிராவ்யதம் சிறந்தது என்பதே அதைப் புகழ்வதற்குக் காரணம். இவ்வித சிறப்பினும் ஆயுர்வேத வைத்திய உலகில் விரண சிகித்ஸையின் அப்பியாஸம் இப்பொழுது மிகவும் மங்கிவிட்டபடியால் சஸ்திர வித்யையில் பிரதானமான சிராவ்யதம் செய்யும் ஸாமர்த்தியமும் ஆயுர்வேத உலகில் அநேகமாய் அழிந்து விட்டது. நாட்டுப்புறங்களில் மட்டும் மாடுகளுக்கு கிராம வைத்தியர்கள் சில சமயங்களில் சிராவ்யதம் செய்துகொண்டிருக்கின்றனர்.

அடுத்தபடியாக சிருங்கத்தினாலும், அலாபு (சுரைக் குடுக்கை) யினாலும் ரக்த மோக்ஷம் இப்பொழுதும் சில கிராம வைத்தியர்களால் மனிதர்களுக்கும் செய்யப்படுகின்றது. இவ்விரு முறைகளும் பிராசீன சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகளால் ரக்தம் எடுக்கும்பொழுது நோயாளிக்கு வேதனை மிகவும் பொறுக்கமுடியாமல் அதிகமாயிருக்கும். ஆதலால் மூன்றுவதான ஜலௌகம் என்று சொல்லப்பட்ட அட்டைகளின் பிரயோகம் ரக்தாவஸேசன கர்மாக்களின் உத்தமோத்தமம் என்று கருதப்படுகின்றது.

परमसुकुमारोऽयं शोणितावसेचनोपायोऽभिहितो यज्जलौकसः

என்று புகழ்கிறார் ஸுச்ருதாசார்யர். அமிருத கலசத்துடன் அட்டையையும் பாணியில் தரித்துக்கொண்டு விளங்குகின்றார் தந்வந்தரிபகவான். நாளது வரையிலும் எல்லா ஆயுர்வேத வைத்தியர்களாலும் ரக்தத்தை வெளிப்படுத்த அட்டைகள் ஸர்வஸாதாரணமாய் பிரயோகிக்கப்படுகின்றன. இக்கட்டுரைக்காரருடைய இருபது வருஷங்களுக்கு மேலான அநுபவத்தில், அட்டைகளுடைய பிரயோகத்தினால் ரக்தாவஸேசனத்தினால் சிகித்ஸை செய்யப்படவேண்டிய ரோகங்களில் ஆச்சரியகரமான குணங்கள் கணக்கில்லாமல் ஏற்பட்டிருக்கின்றன. ரக்த தோஷத்தினால் ஏற்படும் விஸர்ப்பம் முதலிய ஸர்வாங்க வியாபகமான நோய்களென்ன, ஒரு இடத்தில் ஏற்படும் கிரந்திகள், கட்டிகள், வீக்கங்கள், பற்பல வித குஷ்டங்களென்ன இவைகள் எல்லாவற்றிலும் அட்டைகளால் ரக்த மோக்ஷம் செய்து பிறகு ரக்தப் பிரஸாதனங்களால் சமனக்கிரியை செய்தால் சீக்கிரமாகவும், ஸ்திரமாகவும் வியாதி விலகுவது அநுபவமாயிருக்கிறது

यथा च हंसः क्षीरोदकात् क्षीरमाधत्ते; तद्वत् उत्क्लिष्टे रक्ते जलौकाः प्राक् दुष्टमसृक् ।

பாலும் நீரும் கலந்து வைத்தால் பாலைமட்டும் ஹம்ஸபக்ஷி பருகி விடுவதுபோல் கெட்ட ரக்தம் நல்ல ரக்தம் இரண்

டும் ரக்தக் குழலில் கலந்தே ஓடிக் கொண்டிருப்பினும் கெட்ட ரக்தத்தையே அட்டை முதலில் உறுஞ்சுவதாக வும், பிறகே நல்ல ரக்தத்தை உறுஞ்சுவதாகவும் அஷ்டாங் கஸங்கிரஹகாரர் கூறுகிறார். இது எவ்வளவு மட்டும் சரி யாக இருக்க முடியும் என்று நிச்சயிக்கும் வழி சிரமமா யிருக்கிறது. பாலையும் நீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டும் ஹம்ஸ பக்ஷி பருகிவிடும் என்பதை உபமான மொழிகளுக்கு உதாஹரணமாகக் கிரந்தங்களில் பார்க்கி றோமே தவிர அந்த சாமர்த்தியம் வாய்ந்த பறவையை நாம் ஒருவரும் இக்காலத்தில் பார்த்ததில்லை. ஸிராஜாலங் களில் ஓடிக்கொண்டிருக்கும் ரக்தத்தில் கெட்டதும் கெ டாததும் இரண்டும் ஒன்றாகத் தானிருக்கின்றது. இதில் கெட்ட ரக்தத்தையே அட்டை குடிக்கின்றது என்பதை நாம் எவ்விதம் கண்டுபிடிக்க முடியும்? சாதாரணமாய் ஊஹிக்குங்கால் இது முடியாத கார்யமென்றே தோன்று கின்றது. உடலில் துஷ்ட ரக்தம் தோல்புறத்தில் மேலாக விருக்கும். உள்ளே ரக்தம் அதிகம் கெட்டிராது. ரக்த தோஷக் கெடுதல்கள் வெளித்தோலிலேயே விசேஷமாய் காணப்படுகின்றன. அட்டை முதலில் வெளி ரக்தத்தை யே சாப்பிடமுடியும் प्रागदुष्टमसृगादत्ते என்று சொல்வது சரியே. பிறகு நல்ல ரக்தத்தை குடிக்கும். அப்பொழுது அட்டைகளை அகற்றிவிட வேண்டும். கடிவாயில் வலி தினவுகளினால் அட்டை நல்ல ரக்தத்தைச் சாப்பிடுவதாக வைத்தியனறிந்து அட்டைகளை அகற்றவேண்டும் என்று प्रागदुष्टमसृगादत्ते என்பதிற்குப் பொருள் கொள்ளுவது உசித மாய் தோன்றுகின்றது.

பாலும் நீரும் கலந்துள்ளதிலிருந்து பாலை மட்டும் பிரி த்து ஹம்ஸம் பருகுவதுபோல் என்று ஸ்ரீவாக்படாசார்யர் கொடுத்துள்ள உதாஹரணம் முற்றிலும் பொருத்தமாக வில்லை. எவ்விதம் அர்த்தம் கூறினால் அட்டை விஷயத் தில் ப்ரத்யக்ஷத்திற்கு விரோதமாகாதென வித்வான்கள் சந்திரிகை வாயிலாகத் தெரிவிக்க வேண்டுமென்று பிரார்த் திக்கிறேன். அட்டை கெட்ட ரக்தத்தை மட்டுமே குடிக் கும் நல்ல ரக்தத்தைக் குடிக்கவே குடிக்காதென்று கூட

சில பாமரர்கள் சொல்லுகின்றனர். இது பிரத்யக்ஷத்திற்கும் விரோதம். சாஸ்திரத்திலும் முதலில் கெட்ட ரக்தத்தைக் குடிக்கும், பிறகு நல்ல ரக்தத்தைக் குடிக்கும்; அச்சமயம் அட்டைகளை அகற்று என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

ஜலௌகோவசாரண விதியில் வைத்தியர்கள் கவனிக்க வேண்டிய சில குறிப்புகள்:—

அட்டைகளில் 12 விதங்கள் இருக்கின்றன. 6 விஷமுள்ளவை. 6 விஷமில்லாதவை என்று எல்லாவற்றுக்கும் தனியாகப் பெயரையும் குறிகளையும் கூறியுள்ளார் ஸ்ரீ ஸுசுருதாசார்யர். இப்பொழுது தமிழ் நாட்டில் நமது அநுபவத்தில் ஸுசுருதர் கூறிய விஷ அட்டைகளில் மூன்றுவித அட்டைகளே தென்படுகின்றன. எமது குறுகிய அநுபவத்தில் அகப்படாமல் இருப்பதால் மற்றவை இல்லையென்று சொல்லமுடியாது. ஆதலால் ஸ்ரீ ஸுசுருதர் கூறியுள்ள விஷ அட்டைகளின் லக்ஷணங்களை முற்றிலும் மனதில் வைத்தியர்கள் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். விஷ அட்டைகளை வைத்தியர் பிரயோகம் செய்யாவிடினும், சில ஸந்தர்ப்பங்களில் விஷ அட்டைகள் மனிதர்களையும், மிருகங்களையும் தானுகக் கடித்து ரக்தாகர்ஷணம் செய்யும். அவ்விடங்களில் விசேஷ விஷ சிகித்ஸை வைத்தியன் செய்ய வேண்டும். அட்டைகள் உத்பத்தி ஸ்தானத்தைக் கவனித்து க்ரஹிக்கப் பட வேண்டும். பூச்சி புழுக்களின் சவங்களாலும், மல மூத்திரங்களாலும், அழுகின செடிகளாலும் மிகவும் நாற்றமெடுத்த பிரதேசத்தில் வளர்ந்த அட்டைகளை ப்ரயோகம் செய்யவே கூடாது. பரிசுத்தமான தடாகங்களிலும், நீரோட்டங்களிலும் வளரும் அட்டைகளையே கவனித்து எடுத்துக் கொள்ள வேண்டும். விஷமற்ற ஜாதி அட்டைகளைப் பிடித்துக் கொண்டு வந்து அவைகளை வைத்தியர்கள் தங்கள் ஆரோக்கிய சாலைகளில் வளர்த்து வருவது மேல். அட்டைகளை வளர்க்கும் விதம் சுச்ருதத்தில் நன்கு வருணிக்கப் பட்டுள்ளது.

எவ்வளவு ரக்தம் வெளிப்படுத்த வேண்டுமோ அவ்வ

ளவு அட்டைகளுக்கு 2, 3 எண்கள் அதிகமாகவே தயாரித்துக் கொள்ள வேண்டும். வெளியாக்கப்பட வேண்டிய ரக்தத்தின் அளவையும், விடப்பட வேண்டிய அங்கத்தையும் அநுஸரித்து சிறிய பெரிய அட்டைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். காலை நேரத்தில் அட்டை கடிக்க விடுதலே உத்தமம். சில சமயங்களில் அட்டைக் கடிவாய் ரக்தக் கசிவு நிற்காமல் தொந்தரவு கொடுப்பதுண்டு. மாலையில் ஜலௌகோவசாரணம் செய்தால் ராத்திரி அகாலத்தில் வைத்தியனுக்கும் வியாதிக் காரனுக்கும் சிரமம் ஏற்படும். ஆதலால் காலை நேரம் நல்லது. மறு நாள் காலையில் உபயோகிக்க வேண்டிய அட்டைகளை முதல் நாள் பிற்பகலிலேயே எடுத்துத் தனியாக ஒரு வாயகன்ற சீசாவில் ஜலம் பாதி நிரப்பி அதில் விட்டு மெல்லிய ஈரத்துணியால் சீசாவின் வாயை மூடிக் கட்டி வைக்க வேண்டும். அன்று மாலை ஒரு தடவை அந்த ஜலத்தை அகற்றிப் புதிய ஜலம் ஊற்றுவது நல்லது. அட்டைகளின் அழுக்கும் மலமும் அலம்பப் பட வேண்டும். அன்றிரவு அவைகளுக்குப் பட்டினி போட வேண்டுமே தவிர உணவு ஒன்றும் கொடுக்கக்கூடாது. மறு காலையில் சுமார் கால் தோலா கடுகு சூர்ணம், அரைத் தோலா மஞ்சள் சூர்ணம் இரண்டையும் சுமார் கால் படி சுத்த ஜலத்தில் கலக்கி அதில் அட்டைகளை 7, 8 நிமிஷ நேரம் விட வேண்டும். அட்டைகள் அந்தக் கடுகு ஜலத்தில் விட்ட உடனே மல ஜலங்களை சுத்தியாகக் கழித்துக் கொள்ளும். மிகச் சுறுசுறுப்பாய் ஓடத் தொடங்கும். அதிக நேரம் கடுகு ஜலத்திலிருந்தாலும் அவைகட்கு அங்கஸ்தாதமேற்படும். உடனே திரும்பவும் சுத்த ஜலம் நிரம்பிய பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒன்றொன்றாகப் பிரயோகிக்க வேண்டியதே. அட்டைப் பூச்சியைப் பார்த்து அரண்டு ஓடும் தைரிய சாலிகளும் சிலருண்டு. அது மாதிரி நோயாளிகளுடைய கண்களில் படாத படியே அட்டைகளைத் தயாரித்து, அந்த வியாதிஸ்தனைப் படுக்க வைத்துக் கண்களைத் துணியால் மூடி விட்டு அட்டைகளை விடுவதே வைத்தியனுக்கு சிரமம் குறைவு.

அட்டை கடிக்க வேண்டிய தோல் பாகத்தை சுத்தமாகக் கழுவி வரளத் துடைத்துக் கொள்ள வேண்டும். ஈரமாயிருக்கக் கூடாது. இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது;— தோலில் எந்த வித நாற்றமிருப்பினும் அட்டை அவ்விடத்தில் எளிதில் கடிக்காது. ஆதலால் தோலை லைஸால், டெட்டால் முதலிய திரவம் கலந்த ஜலத்தால் சுத்தம் செய்யக் கூடாது. அட்டையைப் பிடிக்கும் வைத்தியருடைய கைகளிலோ, துணிகளிலோ எதிலும் டெட்டால் லைஸால்போன்ற நாற்றமுள்ளதாயின் அட்டை பிடிப்பித்தலில் சிரமமேற்படுவது அநுபவப் பிரத்யக்ஷம். ஆதலால் அட்டை சிக்கிரம் பிடிப்பதற்காக தோலில் கொஞ்சம் கீறுவதற்கு உபயோகிக்கும் சஸ்த்ரத்திற்கும் சுத்தியைக் கருதி லைஸால் முதலியன தடவக் கூடாது. அப்படி உபயோகிக்க வேண்டிய சஸ்த்ரத்திற்கு ஜலத்தில் காய்ச்சுதல் ரூபமான சுத்தியே செய்தாக வேண்டும்.

அட்டைகள் ரோகியின் தோல் கஜ சர்ம வியாதியில் போல் மிகவும் காய்ந்து பசையற்று மரத்தோல் போல் சுற சுறப்பாயிருந்தாலும் எளிதில் கடிக்க ஆரம்பிக்காது. கடிக்க வேண்டிய இடத்தில் பால், நெய், வெண்ணெய், ரக்தம் ஏதாவதொன்றின் ஒன்றிரண்டு துளி வைத்தால் பிடிக்கும். அப்படியும் கடிக்காவிடில், ஒரு கடுகளவு ரக்தம் தோலின் உள்ளிருந்து வெளிவரும்படிக்கு ஊசியால் குத்தி விடுதல், அல்லது தோல் மட்டும் சிறிது நீங்கும்படிக்கு கத்தியினுல் கீறி சிறிது ரக்தத்துளி தெரியப்பண்ணி விட்டால் அட்டை உடனே ஆர்வத்துடன் பிடிக்கும். வைத்தியர் ஜாக்ரதையாக அட்டையைப் பிடிக்கா விடில் எந்த இடத்தில் ரக்த ஸ்ராவம் அவசியமோ, அவ்விடத்தைப் பிடிக்காமல் பக்கத்தில் தன் இஷ்டமான வேறு இடத்தில் பிடித்துக் கொள்ளும். வைத்தியனுடைய கை விரலிலும் கடிக்கப் பிடிக்கும். நனைத்துப் பிழிந்த சிறு துணித் துண்டத்தால் அட்டைகளைப் பிடித்துக் கடிக்க விட வேண்டும். வியாதி, வெளியாகவேண்டிய ரக்தம், ரோகியின் பலம் எல்லாவற்றையும் வைத்தியன் கவனித்துத் தேவையான

அட்டைகளை பிரயோகிக்க வேண்டும். ஒன்று அல்லது ஒன்றரை அங்குல இடைவெளி விட்டு 4, 5 அட்டைகளை ஒரு இடத்தில் கடிக்க விடலாம். உறுஞ்சும் ஸமயத்தில் ஈரத் துணியால் அவைகளை மூடி, துணியின் மேல் அடிக்கடி கொஞ்சம் சீத ஜலம் வார்க்க வேண்டும். அட்டைகள் வயிறு ரக்தத்தினுல் நிரம்பிய பிறகே தானுகக் கடி வாயிலிருந்து விலகும். ஓரளவு ரக்த ஸ்ராவம் போதுமென்று அட்டைகளைக் கடி வாயிலிருந்து விலக்க வேண்டுமாயின் அட்டைகளைப் பிடித்து பலாத்காரமாய் வெளியில் இழுக்கக் கூடாது. கடலுப்பு அல்லது இந்துப்பு ஒரு உளுந்து பிரமாணம் கடி வாயில் வைத்தால் அட்டை தத்க்ஷணமே கடிவாயை விட்டு விலகி விடும். புகையிலை வாஸனை வாயில் காட்டினுலும் விட்டு விடும்.

மத்யம வயதுள்ள சுமார் 4 அங்குல நீளமுள்ள ஒரு நல்ல அட்டை சுமார் 30 நிமிஷ நேரத்தில் அதன் வயிறு நிறைய சாப்பிடும். இது சுமார் ஒன்றரை அவுன்ஸ் ரக்தத்திற்குக் குறைவின்றி இருக்கும். ஆதலால், ரோகீ, ரோகம், அட்டைகளுடைய வயது, ஸாமர்த்தியம் எல்லாவற்றையும் பலாபலம் கவனித்து அட்டை கடிக்க வேண்டிய காலவரையை வைத்தியர் தீர்மானித்துச் செய்ய வேண்டும். ரக்தம் நன்ருய் சுத்தியாகாமலிருந்தாலும் ஒரே தடவையில் அதிகமாக ரக்த ஸ்ராவம் செய்வித்தல் ஆதுரனுக்கு ஆபத்து. 7, 8 நாட்களுக்கொரு தரம் திரும்பத் திரும்ப அவசியத்திற்குத் தகுந்த படி ரக்தாவஸேசனம் செய்வதே உசிதம்.

### ரக்த மோக்ஷத்தில் உத்தர கர்ம.

ரக்தப் பிரவிருத்தி அட்டை விலகின பிறகும் கடிவாயிலிருந்து இன்னும் வெளியாக வேண்டுமென்றிருந்தால் கடிவாயை சுற்றுப் புறங்களில் செம்மையாக அதக்கி விட வேண்டும். ரக்தத்தை உடனே நிறுத்தி விட வேண்டுமாகில் சீதளமான ஜலத்தில் நனைத்துப் பிழிந்த பஞ்சுத் துண்டத்தால் கடிவாயை அழுத்திப்பிடித்துக் கொண்டிருந்தால் ரக்த ஸ்ராவம் நின்று விடும். நிற்காவிட்டால் 'படிக்காரத்

தூளைத் தூவி பருத்தியினால் அழுத்திப் பிடிக்க நிற்கும். அநேகமாய் எல்லா வாய்களிலும் 5—10 நிமிஷங்களுக்குள் ஸ்ராவம் நின்று விடும். ஏதாவது சில ஸந்தர்ப்பத்தில் 4, 5 மணி நேரம் கூட அட்டைக்கடிவாய் ரக்தஸ்ராவத்தை நிறுத்த முடியாத சிரமம் ஏற்படுவதுண்டு. படிக்காரத்தையும் திரிபலா சூர்ணத்தையும் தூவி பலமாய் அழுத்திக் கட்டினால் எந்த வித ரக்தப் பெருக்கும் சீக்கிரமே நின்று விடுகிறது.

ரக்தம் நின்ற பிறகு உடனே கடிவாய்களை சுத்தமாய் துடைத்து பஞ்சு வைத்து இறுகக் கட்டி விட வேண்டும். ஸத்யோவ்ரண சிகித்ஸை போலிதிலும் எல்லா பரிசுத்தியும் காப்பாற்றப் பட வேண்டும். இல்லையாகில் கடிவாயில் சீழ் கொண்டு உபத்திரவங்கள் பல ஏற்படும். கடிவாயில் சாம்பிராணிக் கலவைத் திராவகம் (Tr. Benzoin co.) அல்லது आर्चाजतुद्रावकम् (ஆர்ச்சாஜது திராவகம் யாதவீய ஸித்த யோகத்திலிருக்கிறது) பூசிக் கட்டி விட்டால், ரக்தக்கசிவு ஏற்படாதிருப்பின் மறு நாள் கட்டை அவிழ்க்க வேண்டியதில்லை. மூன்றாவது நாள் கட்டை அவிழ்த்து உசிதமான லேபங்களைப் பூசி வெளி அழுக்குச் சேராமல் 2—3 தினங்கள் மேலாகக் கட்டி வைத்திருந்தால் போதுமானது. விரணம் நன்கு தழும்பாகும் வரையில் ஜலம் அதிகம் பட விடக் கூடாது. கடிவாய் 5—6 தினங்களில் முற்றிலுமாறிவிடும்.

கடிவாயிலிருந்து அகற்றப்பட்ட ஜலௌகங்களைத் திரும்பவும் அவைகளையே உபயோகத்திற்கு வளர்ப்பதாயின் உடனே வைத்தியர் செய்யவேண்டிய கார்யமாவது:— முதலில் அவ்வட்டைகள் குடித்துள்ள ரக்தத்தை வமனம் செய்வித்து வெளியாக்க வேண்டும். உளுந்துப் பிரமாணம் உப்பைப் பொடித்து அட்டையின் வாயில் தடவி அதன் வால் பக்கத்தை இருவிரல்களால் பிடித்துக்கொண்டு, மற்றிரு விரல்களால் வாலிலிருந்து வாய்வரை நிதானமாய் அழுத்தி உருவினால் உண்ட ரக்தம் அநேகமாய் பூராவும் வமனமாகிவிடும். சில அட்டைகள் உப்பு வாயில் போட்ட

சில நிமிஷங்களில் தானகவே வெகு அழகாய் வாய் வழியாய் பீச்சி ரக்தத்தைக் கக்கிவிடும். நன்ருய் வாந்தியான தற்கு அறிகுறி அட்டைகள் ஜலத்தில் விடப்பட்டால் துள்ளி விளையாட ஆரம்பித்தலே. செவ்வனே வமனமாகா திருந்தால் திரும்பவும் வமனம் செய்வித்து அவைகளுடைய வளர்க்கும் பானையில் விட்டுவிட வேண்டியது. 7, 8 நாட்களுக்குப் பின்பு இவைகளைத் திரும்ப உபயோகிக்கலாம். பூர்ணமாய் ரக்தம் குடித்து வமனம் செய்விக்காமலிருந்தால் அட்டைக்கு इन्द्रमद: (இந்த்ரமதம்) என்ற அஸாத்திய நோய் ஏற்பட்டு ஒன்றிரண்டு நாளில் மரித்து விடும்.

அட்டையின் ரக்தத்தை வெளிப்படுத்தும் கார்யத்தில் வைத்தியர் மிக முக்கியமாய் கவனிக்கவேண்டியது—ஆத்ம ரக்ஷை. பொதுவாய் ரக்த தோஷத்தினுல் ஏற்படும் எல்லா ரோகங்களுமே ஸாங்கிராமிகங்கள்தான். (ஒட்டுவார் ஒட்டி.) குஷ்டங்கள், உபதம்சம், பிரங்கம் முதலிய நோய் பீடிதனுக்கு விடப்பட்ட அட்டைகளை வமனம் செய்விக்குங்கால் அந்த ரக்தம் வைத்தியன் கையில் படாதபடி ஜாக்கிரதை செய்து கொள்ளவேண்டியது அவசியம். மிகவும் துஷ்ட ரக்தமுள்ளவனுக்கு விடப்பட்ட அட்டைகளை அந்த ரோகிக்கே திரும்ப விடவேண்டிய அவசியமிருப்பின் வமனம் செய்வித்து தனி கலசத்தில் காப்பாற்றி வைத்து அவனுக்கே திரும்ப விடுவது நல்லது. அதை வேருெரு ரோகிக்கு விடுவது தோஷமாகலாம்.

ரக்த மோக்ஷம் சோதன சிகித்ஸையில் இன்றியமையாதது. ரக்த மோக்ஷ வழிகளில் மிக எளிது ஜலௌகாவசாரணம். நிரபாயமானது. ஆயினும் இந்நாளில் ஆயுர்வேத வைத்தியர்களிடையேகூட பலர் சோதன சிகித்ஸையைக் கையாளாது சமன சிகித்ஸையில் மட்டுமே கருத்தானவர்களாக ஆகிவிட்டது வருந்தத் தக்கது. நிர்மூலம் ஸ்திரமான வியாதிநிவிருத்தி ஆயுர்வேதத்தினுல்தான் என்று ஆயுர்வேதத்திற்கு ஏற்பட்டுள்ள பெருமை

சோதன புரஸ்ஸரம் சிகித்ஸை செய்வதால்தான் என்பது தத்துவம்.

क्षेत्राणि ग्रहणं जातीः पोषणं सावचारणम् ।
जलौकसां च यो वेत्ति तत् साध्यान् स जयेत् गदान् ॥

चकारात् पश्चात्कर्मादि ।

शिवार्पणमस्तु ॥

## செய்திகள்.

### ஸம்ஸ்கிருத பாஷையில் வைத்திய பரிபாஷை.

மத்திய மாகாணம் ஆரோக்கிய இலாகா மந்திரி ஸ்ரீ D. W. S. பார்லிங்கே அவர்களால் கூட்டப்பட்ட அநேக வைத்தியப் பிரமுகர்களுடைய கூட்டத்தில் ஆலோசித்து, நவீன வைத்திய சாஸ்திரத்தின் பல்வேறு அங்கங்களையும் சேர்த்து இந்திய தேசீய பாஷையில் முதலில் பரிபாஷை எழுதவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இப்பரி பாஷை பாரத தேசத்தின் எல்லா மாகாணங்களுக்கும் பொதுவாயும் பிரயோஜனமாயுமிருக்க வேண்டுமென்று நிச்சயித்து இந்த பரிபாஷை ஸம்ஸ்கிருதத்தில் தொகுக்கப் பட வேண்டுமென்றும் தீர்மானித்து ஸம்ஸ்கிருதபாஷை வித்வான்களில் பிரஸித்தி வாய்ந்த Dr. ரகுவீர அவர்களை அவருக்கு உதவி செய்ய ஓர் ஆயுர்வேத வித்வானையும் கூட்டிக்கொண்டு இப்பரிபாஷைத் திரட்டுத் தொகுக்க ஆரம்பம் செய்ய ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது.

(Indian Express 6-7-48)

**இக்கார்யம் சரியானபடி செய்யப்பட்டால் அதிகத் தாமத மின்றியே பிராசீன ஆயுர்வேத ஸித்தாந்தப்படிக்கு, நவீன வைத்திய சாஸ்திரத்தின் உபயோகமுள்ள அம்சங்களை ஞானத்துடன் சேர்த்துக் கொள்ளவும், நவீனக் கிரந்தங்களை ஆயுர்வேத பரிபாஷைப்படிக்கு எழுதவும் நாம் செய்யும் பிரயத்னங்கள் சீக்கிரமே பலித்துவிடும் என்பதில் ஐயமில்லை.**

**—ஆசிரியர்.**

## மதுவிலக்குச் சட்டமும் ஆஸவாரிஷ்டங்களும்

ஆஸவாரிஷ்டங்களை மதுவிலக்குச் சட்டத்திலிருந்து விலக்கிவிடவேண்டும் என்று சென்னை சர்க்காரிடம் ஸகல வைத்தியர்களாலும் கேட்டுக்கொள்ளப்பட்டதின் மேல், மந்திரி சபையில் ஒரு கமிட்டி 25-6-48ல் இதைப்பற்றி விசாரிக்கக் கூடிற்று. ஐக்கிய மாகாணத்திலும் பம்பாய் மாகாணத்திலும் மதுவிலக்குச் சட்டம் அமுலிலிருக்கும் பிரதேசத்தில் ஆஸவாரிஷ்ட மருந்துகள் மத்ய வர்க்கத்தின்கீழ் சேர்க்கக் கூடாதெனத் தீர்மானித்திருப்பதைப் பற்றித் தெரிந்து அதுபோல இங்கும் நடத்தலாமாவென ஆலோசனை புரிய மேற்படி இரு மாகாணங்களுடைய சர்க்காருக்கு ஆஸவாரிஷ்ட விஷயத்தில் அவர்கள் செய்துள்ள விதி விலக்குகளை அறிவிக்கும்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

---

## திருச்சிராப்பள்ளி ஜில்லா
## ஆயுர்வேத ஸபா மாதாந்தரக் கூட்டம்.

3-7-48ல் திருச்சி ஆயுர்வேத யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ ஆயுர்வேதசிரோமணி, வைத்திய விசாரத, அவர்கள் அக்கிராஸனம் வஹித்தார். கரூர், வைத்திய வாசஸ்பதி பண்டித ஸ்ரீ P. S. ராம சர்மா அவர்கள் **நிஸ்ஸாரகம்** என்ற வியாதியைப் பற்றி விஸ்தாரமாய் உபந்யாஸம் செய்தார். நிஸ்ஸாரகம் என்று ஆயுர்வேதத்தில் சொல்லப்படும் வியாதியும், ஆங்கிலத்தில் (Sprue) என்று சொல்லப்படும் வியாதியும் ஒன்றுதான் என்று உபந்யாஸகர் உரைத்தார். இதில் சபையோர்களால் செய்யப்பட்ட சர்ச்சை மிகவும் ஸாரமாயிருந்தது. அக்கிராஸனரின் விரிவுரையுடன் கூட்டமினிது முடிந்தது.

V. R. ஸுப்பிரமணிய அய்யர்,
ஸபா மந்த்ரீ.

சேலம் ஜில்லா கிளை

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

## மாதாந்தரக் கூட்டம்—5

இன்று சங்கத் தலைவர் டாக்டர் S. A. சஞ்சீவி அவர்களின் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. ரிஜிஸ்டர்ட் மெடிகல் பிராக்டிஷனர்களாகிய இந்திய வைத்தியர்களை ஆஸவாரிஷ்டங்களை உற்பத்தி செய்யவும், பிணியாளர்களுக்கு விநியோகிக்கவும், வாங்கவும், விற்கவும் உரிமையை மதுவிலக்கு என்ற பெயரால் தடை செய்யக் கூடாதென்றும், மதுவிலக்குச்சட்டப்படி அலோபதிக் டாக்டர்கள் Prescription பேரில் கொடுக்கலா மென்றிருப்பதானது மிக வருந்தத் தக்கதென்றும், ஆஸ்வாரிஷ்டங்களைப் பற்றி அலோபதிக் டாக்டர்களுக்கு ஒன்றுமே தெரியாதென்றும், டாக்டர் S. T. R. மணி அவர்களால் ஓர் தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. ஷை தீர்மானத்தை ஆதரித்து டாக்டர் S. A. சஞ்சீவி அவர்கள் ஆயுர்வேத டாக்டர்கள் தாங்களே மருந்து உற்பத்தியாளரும், பார்மஸிஸ்ட்களாகவும் இருப்பதால் ஆயுர்வேத டாக்டர்கள் ஆஸவாரிஷ்டங்களை உபயோகிக்க லைசென்ஸ் வேண்டுமென்பது வெட்கக் கேடானதென்றும் அவ்வுத்திரவை கவர்ன்மெண்ட் அடியோடு நீக்கி சகல உரிமையும் கொடுக்க வேண்டுமென்றும் கோரியதுடன் ஆயுர்வேத வைத்தியர்கள் கூடிய வரையிலும் மேநாட்டு முறை மருந்துகளை விடுத்து நாட்டுமுறை மருந்துகளை சாஸ்திர ரீதியாக விஞ்ஞானமுறைப்படி முடிக்க முயல வேண்டுமென்றும் பேசினர்.

3. மேற்குறித்தவைகளை யொட்டி டாக்டர் R. K. பழனியப்பா அவர்களாலும், கோவிந்தராவ் அவர்களா

லும் மதுவிலக்குச் சட்ட காரணத்தையும் குறைபாடுகளைப்பற்றியும் தர்க்கித்து சர்ச்சை செய்து விரிவாகப் பேசினார்கள்.

4. மேநாட்டுமுறை வைத்தியர்களைப்போல் நம்நாட்டு வைத்தியர்கள் நோயாளிகளுக்கு சர்ட்டிபிகேட் கொடுக்க உரிமை உண்டா? என்ற கேள்வி கூட்டத்தில் உண்டாக்கப்பட்டதை யொட்டி, கிரிமினல், சர்ஜிகல் வகையைத் தவிர்த்து நமக்கு உரிமை உண்டென்பது பற்றி சட்ட பூர்வ ஆதாரங்களுடன் டாக்டர் S. வெங்கடராவ் அவர்களால் விரிவாகப் பேசி நம் நாட்டு வைத்தியர்கள் நம் உரிமைக்கு தைரியமாகப் பாடுபட வேண்டுமென்றும் சொன்னார்

5. **வைத்தியமும், வைத்தியர்கள் கடமையும்** என்பது பற்றி டாக்டர் R. K. பழனியப்பா அவர்களாலும் **வைத்தியர்கள்** என்பதுபற்றி சிவராஜயோகி S. பொன்னுசாமி செட்டியார் அவர்களாலும் தெளிவாகவும் விரிவாகவும் பேசப் பட்டது.

6. நீண்டகாலமாக அலோபதிக் முறையும், இந்திய முறையும் கலந்து பேடண்ட் (Patent) மருந்துகள் தயார் செய்து வந்துள்ளதை தற்போது கவர்ன்மெண்டார் அலோபதிக் வகையில் பயிற்சி பெற்றவர்களால் செய்ய வேண்டுமென்றும், மற்றவர் செய்யக்கூடாதென்று உத்திரவானது பெரும்பான்மை வைத்தியர்களைப் பாதிப்பதால் அதை நீக்க வேண்டுமென்ற தீர்மானம் சித்த வைத்திய பண்டிட் S. V. ராஜரத்தினக்கண்டர் அவர்களால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

7. அடுத்த மாதக் கூட்டத்தில் க்ஷயரோகம் (Tuberclosis) என்பது பற்றி டாக்டர் S. வெங்கடராவ் அவர்களும் (2) வைத்தியர்கள் என்பது என்ன? யார் யார் வைத்தியம் செய்வது? என்பது பற்றி T. ராமலிங்கமுதலியார் அவர்களும் (3) அமுக்கிராக் கிழங்கு என்பது பற்றி டாக்டர் R. K. பழனியப்பா அவர்களும் பேசுவதாக தீர்மானிக்கப்பட்டு பிறகு காரியதரிசியால் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

# சிர ரோகத்தின் விளக்கம்.

[இலங்கா ஆயுர்வேத சித்த வைத்தியக் கல்லூரி ஆசிரியர் வைத்திய கலாநிதி திரு. வி. கனகசபை அவர்கள் எழுதியது]

(190-ம் பக்கத் தொடர்ச்சி.)

## சாத்திய கரப்பான் நாலில்

### 1-வது கபாலபித்த கரப்பான் குணம்.

**காரணம்:** இக்கரப்பனில் பித்த தோஷ மதிகரித்து வெப்புக்கொண்டு சிரத்தில் நீருண்டாய்க் கிரிமிகளை யுற்பத்தியாக்கி உபத்திரவங்களை யுண்டாக்கும்.

**இதன் குணம்:** தலையில் எரிவுடன் வீங்கி குன்றி போன்ற கொப்பளங்களுண்டாகிக் கனப்புடன் வெடித்து அவ்விடத்தில் நீர் பாய்ந்து இடையிடையே காய்ந்து பொருக்குண்டாகிச் சொறிவு மிகும். சொறிந்தால் அவ்விடத்தினின்றும் விஷத்தன்மை பொருந்திய நீர்வடியும். பின்னது காய்ந்து மரத்து நுண்ணிய தூளாகவுதிரும். நேத்திரங்களிற் குத்துண்டாகி நீர்வடியும்.

#### சிகிச்சை

**பறங்கிக்கிழங்குச் சூரணம்:** பறங்கிக்கிழங்கு பலம் 3 மிளகு, சுக்கு, நற்சீரகம், கருஞ்சீரகம், வெண்கோட்டம், சென்னகரம் பழம், கராம்பு, வசுவாசி, அதிவிடயம். இவை வகை கழஞ்சு 1. சாதிக்காய் கழஞ்சு 2. சங்கம் வேர்ப்பட்டை கழஞ்சு 4. சிறுகுறிஞ்சாவேர், நத்தைச் சூரிசமூலம், சுத்திசெய்த கொடிவேலி வேர்ப்பட்டை

---

**கவனிப்பு:** சென்ற ஜூலை மாத இதழில் 180-ம் பக்கத்தில் 4-ம் வரியில் "அரைக்கால் படி" என்றிருப்பதை "எட்டொன்ருக" என்றும், ஷெ ஸஞ்சிகையில் 189-ம் பக்கத்தில் முதல் வரியில் "அரிதாரத்தோடு" என்றிருப்பதை "அரிதார கெந்தகத்தோடு" என்றும் திருத்திக் கொள்க.

இவை வகை கழஞ்சு 3. இவைகளை நறுக்கி வெய்யிலில் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து ஒன்றுபடக் கல்வத்திலரைத்து வைத்துக்கொண்டு நாளொன்றுக்குக் காலை மாலை இருநேரமாக 40 நாள் வென்னீரிற் கலந்து உட்கொண்டு வரத் தீரும் வியாதிகள்; இருபது வகை மேக ரோகங்களும், பதினெண் வகைக் குட்ட ரோகமும், எண் வகைக் கரப்பானும், நாக்கு, வாய், தொண்டை இவைகளிற் கிரந்தி, கரப்பன் காரணமாக வரும்புண்களும் பதினெண் வகைச் சூலையும், சோம ரோகமும், ஆண், பெண் இவர்களின் மர்மஸ்தானங்களில் வரும் புண்களும் அவ்விடத்திலின்று வடியும் வெண்ணீரும் குணமாகும்.

**பத்தியம்:** இம்மருந்துண்ணும்போது மச்ச மாமிசத் தோடு கரப்பனை அதிகப்படுத்தும் பொருள்களை நீக்கிப் பசும்பால், முருங்கையிலை, முருங்கைக்காய், தூதுளங்காய், வாழைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, இவைகளைக் கறி பதார்த் தங்களாகக் கொண்டு; புளி, தேங்காய், மிளகாய் இவற்றை நீக்கி உப்பை வறுத்துச் சேர்த்துக் கொள்ளவும். இதன் கீழ்க் கூறும் தைலங்களிலொன்றை தலைக்குத் தேய்த்து வாரமொருமுறை ஸ்நானஞ்செய்து வரவும்.

## தைலம்.

**சித்திரமூலத் தைலம்:** கொடிவேலி வேர், சங்கம் வேர், ஆயிற்பட்டை, வகைக்குப் பலம் 20. இவைகளை நறுக்கி யிடித்து 8 படி தண்ணீரிலிட்டு சிறுதீயிலெரித்து 1 படி யாக வற்றக்காச்சி வடித்து தைல பாண்டத்திற் சேர்க்க வும். நல்லெண்ணெய் படி 1, வேப்பெண்ணை படி கால், பசுவின் வெண்ணெய் படி 2 இவைகளை யெடுத்து ஷெ கழாயத்திற் சேர்த்துக் கொண்டு இரண்டு பலம் மிளகைப் பசும்பால் விட்டரைத்து முன் சித்தப்படுத்திய கழாயத் திற் கலந்து பதமுறக் காச்சி வடித்துக் கொள்ளவும். மேகம், குட்டம், கரப்பன் முதலிய ரோகங்களுக்கு மருந் துண்ணுங் காலத்தில் இவ்வெண்ணையைத் தலையில் தேய்த்து வாரத்திற் கொருமுறை ஸ்நானஞ் செய்துவரில் மேற்கூறிய நோய்கள் விரைவிற் சுகமடையும்.

## 2-வது கபாலசேற்பன கரப்பன் குணம்

**காரணம்:** இக் கரப்பனில் சிலேஷ்ம தோஷம் விஷ நீரோடு சம்பந்தமுற்றுத் தலையிற் சேர்ந்து க்ருமிகளையுத்பத் தியாக்கி அவ்விடங்களில் உபத்திரவத்தை யுண்டாக்கும்.

**இதன் குணம்.** தலையில் திமிர், வீக்கம், நோவு, வியர் வை கண்டு அவ்விடத்தில் வெண்ணிறம் பொருந்திய கொப்புளங்களுண்டாகும். பின் இக் கொப்புளங்கள் உடைந்து நீர் வடிந்து காய்ந்து துர்நாற்றமுடைய அசறுக ளும் சீழும் காணும். காதடி, பிடரி, கன்னம், கழுத்தடி இவைகளில் வேதனையுடன் நெறிகள் தோன்றி நெற்றி, புருவம் இவற்றில் குத்துதலை யுண்டாக்கும்.

### சிகிச்சை.

**தூதுளை எண்ணெ** தூதுளை, நீர்முள்ளி, நாரத்தை, எலு மிச்சை, ஆடாதோடை, மல்லிகை, உத்தமாகாணி, மொசு மொசுக்கை, காரை, சாரணை, பொன்னாங்காணி, தேற்று இவைகளின் இலைச்சாறு வகை படி 1. இவற்றோடு சுத்த மான ஆமணக்கெண்ணெ படி 1 கலந்து தைல பாண்டத் திற் சேர்த்துச் சிறு கொதியிட்டு இவற்றில்; சிற்றரத்தை, பேரரத்தை, விழாலரிசி, கருஞ்சீரகம், செஞ்சந்தனம், அபின், கஸ்தூரி மஞ்சள், வசம்பு, சிவதை வேர், வெள் ளுள்ளி, மிளகு, குந்திருக்கம், கார்கோலரிசி, பெருஞ்சீர கம் இவை வகைக்குக் கழஞ்சு—1 இவைகளை நறுக்கியிடி த்து மேற் கூறிய சாறொன்றினால் அரைத்துத் தைல பாண் டத்தில் சேர்த்து நான்காம் நாள் பதத்தில் வடித்துக்கொள் ளவும். இவ் வெண்ணெயில் காலை மாலை கால் பல வீதம் உட்கொண்டு தலையிலும் தேய்த்து வாரத்திற்கிருமுறை ஸ்நானம் செய்து வரவும்.

**பத்தியம்.** உப்பு, புளி, கசப்பு, காரம், இனிப்பு பண் டங்களை நீக்கி உணவு கொள்ளவும்.

**தீரும் வியாதி.** சேற்பன கரப்பனும் அவற்றினாலாய உபத்திரவங்களும் நீங்கும்.

## 3-வது கபால கருங்கரப்பன் குணம்

**காரணம்;** கபாலத்தில் விஷ நீர் பற்றுதலினால் அங்குள்ள தோஷங்களில் ஒன்றிரண்டு கோளாறடைந்து உண்டாகும். இது கருநிறமுடையதாய் இருத்தலினால் இதனைக் கருங்கரப்பானென்றும் இதுபோலவே வெண்ணிறமுள்ளதை வெண்கரப்பனென்றும், செந்நிற முள்ளதை செங்கரப்பனென்றும் கூறுவர்.

**குணம்:** சிரத்தில் கருமணல்போன்ற நிறமுடையதான சிறு கொப்பளங்கள் தோன்றி, தலை முழுதும் பரவிப் புண்ணாகி, விஷ நீர்ப்பாயும். அவ்விடத்தில் நுண்கிருமிகள் உண்டாகி ஊருதல் போன்ற உணர்ச்சி யுண்டாக்கி சுற சுறப்பும், கனப்பும், தேமல்போன்ற வடிவமும் தோன்றும்.

### சிகிச்சை

**மேற்பூச்செண்ணை:** திரிகடுகு, சிற்றரத்தை, கடுகு ரோகணி, சிவதைவேர், செவ்வரலி வேர்ப்பட்டை, காக்காய் கொல்லிவிதை, மணிக்கொன்றை விதை, கருஞ் சீரகம், மஞ்சள், நேர்வாளவித்து, பேய்ப்பீர்க்கம்வித்து, மஞ்சிட்டி, புன்னை வித்து, குன்றுமணி, ஆட்டலாங் கொட்டை, சித்திரமூல வேர்ப்பட்டை, நிலவாகைவேர், இயங்கம்வேர்ப்பட்டை வகை கழஞ்சு 1. நல்லெண்ணை படி 1.

**செய்முறை:** இவைகளில் எண்ணை நீங்கலாக மற்றவற்றை நறுக்கிச் சிறு தூள்களாக இடித்து வைத்துக் கொள்ளவும். நல்லெண்ணையை ஒரு பாண்டத்திலிட்டு அவ்வெண்ணை கொதிக்கும் நேரம் வெற்றிலையில் ஒரு சிறு துண்டைக் கிள்ளிப் போடவும். அவ்விலை உடனே படபடவென வெடிக்கும். அதுவே தக்க பதமென வறிந்து பாண்டத்தையிறக்கி ஈரத்தன்மையுடைய நிலத்தில் வைத்து மேஷி சரக்குத்தூளை அவ்வெண்ணையிற் கலக்கும் போது எண்ணை பொங்கி வழிந்து போகாவண்ணம் கவனமாகத் துளாவிக் கொள்ளவும். எண்ணை நன்கு ஆறிய பின் வடித்துப் பக்குவப் படுத்தவும். இவ்வெண்ணையைக்

கருங்கரப்பன் மேற் புண்கொண்ட பாகங்களிற் கைபடாமற் கோழியிறகு முதலியவற்றினுல் தொட்டுப்பூச வேண்டியது.

குறிப்பு: இவ்வெண்ணை கொடிய நஞ்சுத்தன்மையுடையதாதலால் இதனை உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது. எண்ணை வடிக்கும்போது கை முதலிய வுறுப்புக்களில் படுமாதலால் அவ்வுறுப்புக்களை நன்ருக சுத்தஞ்செய்து கொள்ளவேண்டியது வைத்தியன் கடமையாகும். இங்ஙனம் நோயாளியும் இவ்வெண்ணையை நோயுள்ள பாகத்தில் மேற்கூறிய பிரகாரம் பூசி மூன்றுமணி நேரங் கழித்துச் சியக்காயரப்பிட்டுக் குளிர்ந்த நீரில் ஸ்நானஞ்செய்து மோர் கலந்த உணவு உட்கொள்ள வேண்டும். அத்தோடு இக்கரப்பான் ரோகங்களுக்குக் கூறிய பொதுச் சிகிச்சை ஔடதங்களிலொன்றை ஏற்ற பெற்றி யறிந்து உட்கொள்ள விரைவில் நல்ல பலன் உண்டாகும்.

### 4-வது கபால செங்கரப்பான் குணம்

சிரமீது சிவந்த குன்றுமணி போன்ற வடிவ முடையதாய் கொப்புளங்களுண்டாகி அவ்விடங்களில் வெப்ப மிகுந்து காந்தலுண்டாகும். பின் அக்கொப்புளங்களுடைந்து நீர் பாயும். உடம்பிலதிக வெப்பங்காணும். உண்மூச்சு முட்டு இவைகளினுல் ரோகி வருந்துவான்.

### சிகிச்சை

**கரிப்பானெண்ணை:** கையாந்தகரைச்சாறு, நல்லெண்ணை வகை படி 1 மிளகுப் பொடி படி கால் அபின் கழஞ்சு 2 வெட்பாலரிசி, விழாலரிசி, மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், குளவிந்த மஞ்சள், மரமஞ்சள். சுக்கு, கருஞ்சீரகம், சிவதைவேர். இந்துப்பு, சுத்தி செய்த கெந்தகம், இரசம், அரிதாரம், அதிமதுரம், கோட்டம், திரிபலை, வகை கழஞ்சு 1 இவைகளைக் கையாந்தகரைச் சாறு விட்டு அரைத்து கஷாயத்திற் கலந்து சிறுகொதியிட்டு நாலாம் நாள் பதத்தில் வடிக்கவும். இவ்வெண்ணையில் துட்டிடை ஒன்றை விட்டொருநாள் காலையிலுண்டு சிர

சிலும் பூசி; புளி, உப்பு, கசப்பு, காரம் முதலிய சுவைகளை நீக்கி முருங்கை, தூதுவளங்காய், துவரம்பருப்பு இவைகளில் கறி சமைத்து உணவுட் கொள்ளவும். செங்கரப்பான் முதலிய கரப்பான் நோய் பலவுந்தீரும்.

**சங்கஞ்சாற்றெண்ணை:** இயங்கிலை, வெற்றிலை, கமுகமிலை, பொடுதலை, அவுரியிலை, கையாந்தகரை, எலுமிச்சம் புளி, நல்லெண்ணை, இவை வகை படி 1 இவைகளை யொரு பாண்டத்திற் சேர்த்துச் சிறு கொதியிட்டு, சதுரக் கள்ளிவேர், சத்திச்சாறணைவேர், புங்கம்வேர், பெருமருந்து வேர், காசுக்கட்டி, வேம்பாடல், உள்ளி, கருஞ்சீரகம், வசம்பு, கல்நார், இந்துப்பு, வெண்காரம், சுத்திசெய்த ரசம், கடுகுரோகணி, கிருமிசத்துரு, வெந்தயம், சுக்கு, சிற்றரத்தை, ஏலம், ஓமம், மஞ்சிட்டி, சடாமாஞ்சில், சுத்தி செய்த கெந்தகம், கோட்டம், சாயவேர், மஞ்சள் வகை கழஞ்சு.-1.

**செய் முறை:—** கெந்தகத்தைப் பொடிபண்ணி, சூதத்தைவிட்டரைத்து பின் வெண்காரம், இந்துப்பு, முதலியவற்றைச் சேர்த்து அரைத்துக்கொண்டு உள்ளி நீங்கலாக மற்றச்சரக்குகளைப் பொடிசெய்து ஷை சரக்குகளோடு கலந்து உள்ளியையும் சேர்த்து முன்சொன்ன திராவங்களிலொன்றுலரைத்து கழாயத்தில் கலந்து சிறுகொதியிட்டு நான்காநாள் பதத்தில் வடிக்கவும்.

இவ்வெண்ணையைச் சிரசிற்றேய்த்து ஏழுநாள் காலையில் கால் பல வீதம் உள்ளுக்குக் குடித்துவர ஷை கபால கரப்பன், கபாலகுட்டம் முதலிய கிரந்தி கரப்பான் ரோகங்கள் மாறும்.

(தொடரும்)

# அறிவிப்பு

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்திற்கு சந்தா ஸம்பந்தமான வருஷம் ஜனவரி முதல் டிஸம்பர் முடிய (Calender Year) கணக்கு வைக்கப்படுகிறது.

அங்கத்தினர்களுக்கு வருஷச் சந்தா ரூ. 3—0—0

வைத்திய சந்திரிகை எனப்படும் மண்டலத்தின் மாதப்பத்திரிகை அங்கத்தினர்களுக்கு தனிக்கட்டணமின்றி வழங்கப்படும்.

சந்தா அனுப்பவேண்டிய விலாஸம் :—

ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M.
உபகார்யதர்சீ, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
17, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சிறுப்பள்ளி.

விளம்பர விகித விஷயங்கள், அங்கத்தினர்களின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந்தேதிக்குள் பத்திரிகை கிடைக்காவிடில் தெரிவிக்கப்படவேண்டியது, மற்றும் பத்திரிகை நிர்வாஹ ஸம்பந்தமான ஸகல விஷயங்களுக்கும் உபகார்யதர்சிக்கு எழுதிக்கொள்ளவேண்டும்.

ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ, ஆயுர்வேதாசார்ய,
ஆசிரியர் : வைத்ய சந்திரிகா,
ஆத்ரேயாசிரமம், தென்னூர்ரோடு திருச்சிறுப்பள்ளி.

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுதவேண்டும்.

குறிப்பு: சந்திரிகையில் பிரசுரமாகும் இதரர்களுடைய கட்டுரைகளில் காணும் மதபேதங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல. பிரசுரத்திற்கு அனுப்பவேண்டிய விஷயங்கள் தெளிவான எழுத்தில் காகிதத்தில் ஒரு பக்கத்தில் கொஞ்சம் இடம் (Margin) விட்டு எழுதப்படவேண்டும். விஷயத்தைப் பிரசுரிக்க காலம், இடம், அளவு முதலியவைகளில் ஆசிரியருக்குப் பூர்ண ஸ்வாதந்தர்யம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பிப் பெறவேண்டுமாகில் தபால் கட்டணம் கட்டுரையாளரால் அனுப்பப்படவேண்டும்.

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# பதினைந்தாவது
# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம்
## கும்பகோணம்

கடந்த அக்டோபர் 3, 4 தேதிகளில் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் கட்டடத்தில் நமது மஹாமண்டலத்தின் 15-வது ஸம்மேளனம் கூடியது. 3-10-48 அன்று காலை ஆயுர்வேதாசார்ய, வைத்திய விசாரத ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் தலைமை வஹித்தார்கள். வாஞ்சியம் ஸ்ரீ ராமசந்திர அய்யர் அவர்களால் தன்வந்தரி பிரார்த்தனை செய்யப்பட்டவுடன், மஹாநாட்டைத் திறந்து வைக்க இசைந்திருந்த ஸ்ரீ ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் வர இயலாததால் அவருக்குப் பதிலாக சென்னை திவான் பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் மஹாநாட்டை ஆரம்பித்து வைத்தார்கள். அன்னார் தனது சொற்பொழிவில் மஹாத்மாஜீயின் அவதார வாரத்தில் மஹாத்மாஜீக்கு மிகவும் பிரியமான ஆயுர்வேதம் பற்றிய மஹாநாடு நடப்பது குறிப்பிடத்தக்கதென்றும், ஆயுர்வேதம் இந்தியாவிற்கும் மற்ற நாடுகளுக்கும் இன்றியமையாததான ஓர் வைத்திய சாஸ்திரமென்றும், லக்ஷக்கணக்கான வருஷங்களின் ஆராய்ச்சியின் பயனாக, சிறந்த நாகரீக வாழ்க்கை வாழ்ந்த நம் பெரியோர்களால் திட்டப்படுத்தப்பட்டு அடிப்படைத் தத்துவங்கள் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள சாஸ்திரம் என்றும், இதுதான் இந்தியாவின் ஒரே வைத்திய சாஸ்திரமாக செய்யப்பட வேண்டுமென்றும் கூறி மஹாநாட்டைத் திறந்து வைத்தார்கள்.

பிறகு மஹாநாட்டின் வரவேற்புக்கமிட்டியின் தலைவரான ஸ்ரீ சிங்காரம் செட்டியார் அவர்கள் வர இயலாமையால் அவரது வரவேற்புரை ஷெ கமிட்டிக் காரியதர்சி வைத்திய விசாரத, ஆயுர்

**வேத சிரோமணி V. R. லக்ஷ்மீகாந்த சர்மாவால் வாசிக்கப்பட்டது. அதில் குறிப்பிட்டிருந்ததாவது:-**

இந்தியனின் சராசரி வாழ்வு 25 வயது என்பது ஓர் கோரமான உண்மை. மேல் நாடுகளில் 45, 50 வயதென்பது சராசரியாக இருக்கின்றது. அத்தேசத்தினர்கள் கொடூரமான ரோகங்களை முன்னேற்பாட்டுடன் தடுக்க முயற்சிப்பதாலும் பிரசாரத்தினல் தனித்தனியே ஒவ்வொருவரும் சுகாதார வாழ்வு வாழ வசதிகளிருப்பதாலும் ஓரளவு அவ்வளவு அதிகமான வயது வாழ முடிகின்றது. நமது முன்னோர்களும் நீண்ட வயது வாழ்ந்தார்கள் என்பதற்கு நமக்கு முன் ஓரிரண்டு தலைமுறையில் வாழ்ந்தவர்களின் வயதைக் கவனித்தலே தகுந்த சான்ருகும். அவர்கள் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத சரீரம், மனது இவைகளின் நன்னடத்தை, ஸத்யம் போன்றவைகளைக் கடைப்பிடித்தார்கள். நாம் அவர்கள் அனுஷ்டித்து வந்ததை அநாகரிகமெனக் கருதியதால் வெகு குறுகிய காலத்திற்குள் அயல் தேசத்தினர் நகைக்கும்படி அவ்வளவு குறுகிய வாழ்வு வாழ்கின்ருேம்.

இந்தியாவில் இன்று நமது ஸமுதாய வாழ்வின் ஆரோக்கிய நிலையைச் சீர்திருத்தி அமைக்க இரண்டு காரியங்கள் செய்யப்படவேண்டும். 1. ஏழை, தனவான் என்ற பாகுபாடின்றி வியாதிக்கேற்ற சிகித்ஸை உடனே கிடைக்க உதவியளிக்கவேண்டியது. 2. ஆரோக்கியத்திற்கு அரசாங்கம்தான் பொறுப்பாளி என்று தனது ஆரோக்கியத்தில் அசிரத்தையுடன் இல்லாமல் நம்முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த அனுபவஸித்தமான ஆரோக்கிய வழிகளைப் பின்பற்றவும் ஜனஸமுதாயத்தின் மனதில் ஆரோக்கிய வாழ்வே செல்வமென ஒரு சிரத்தை ஏற்படுமாறும் பிரசாரம் செய்து அதற்கேற்ப ஆசார முறைகளைக் கற்பிக்க ஆரோக்கிய சாலைகள் ஏற்படுத்துவதே.

ஆயுர்வேத மூலம் ஜனங்களுக்கு ஸேவை புரியும் தங்களுக்கு நல்வரவாகுக.

பிறகு சென்னை தர்மரக்ஷாமணி ஸ்ரீ K. பாலஸுப்ரமண்ய அய்யர் அவர்கள் பேசுகையில் ஆயுர்வேத வைத்தியம் அபிவிருத்தி அடைவதற்கு பொது ஜனங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும்தான் அதிக முக்கியம். வைத்திய உதவி அளிப்பதில் ஆயுர்வேதம் ஈடற்றதென்பதில் ஸந்தேகமில்லை அது விக்ஞான ஸம்மதமா, இல்லையா என்று விசாரிப்பது அந்தந்த சாஸ்திர விக்ஞாலிகளின் கடமை. ஆயுர்வேத வைத்திய உதவி கிடைக்குமிடத்து மற்றமுறை வைத்தியத்தைச் செய்து கொள்ளாதிருப்பதே ஆயுர்வேத வைத்தியத்திற்கு நாம் தரும் ஆதரவு எனப் பொது ஜனங்களைப் பூர்ணமாக ஆயுர்வேத ஸேவையில் ஈடுபடும்படி பிரார்த்தித்தார்.

பிறகு பல இடங்களிலிருந்து வந்த ஸம்மேளன வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. இந்தியப் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு, சென்னை பிரதமர் ஸ்ரீ ராமஸ்வாமி ரெட்டியார், கனம் டாக்டர் ராஜன், ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ மாதவ மேனன், ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் முதலானோர் தனது வாழ்த்துச் செய்திகளைத் தெரிவித்திருந்தனர். மற்றும் நமது மண்டல அங்கத்தினர்கள் சிலர் தங்கள் வரமுடியாமையைத் தெரிவித்து வாழ்த்து அனுப்பியிருந்தனர்.

ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் தனது தலைமைப் பிரஸங்கத்தில் மண்டலத்தின் லக்ஷ்யங்களைப் பூர்த்தி செய்ய எல்லோருடைய ஒத்துழைப்பைக் கோரியும், இவ்வாயுர்வேத மஹாமண்டலத்தை ஸ்தாபித்தவரும் வளர்த்தவருமான மைலாப்பூர் K ஸ்ரீ G. நடேச சாஸ்திரிகள் அவர்களின் கைலாஸ ப்ராப்தியால் நம் மண்டலத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் நஷ்டத்தைக் குறிப்பிட்டு, அன்னாரால் இயற்றப்பட்டுள்ள ஆயுர்வேதக் கிரந்தங்களை அச்சடித்துப் பிரசுரம் செய்வது முதன்மையான கடமை என வற்புறுத்தினர்.

மேலும் அவர் பேசியதாவது:-

மஹாத்மா காந்தியவர்களின் வீரஸ்வர்க்காரோகணத்

தால் நமது பாரதவர்ஷத்திற்குப் பொதுவில் பெரும் நஷ்டமென்றாலும் இந்தியக்கலைகளுக்கு இதுமகத்தான நஷ்டம். அன்னாரொருவர் தாம் நம் இந்தியப் பண்பாடுகளில் ஆழ்ந்த அபிநிவேசமுள்ளவர்.

**ஸம்மேளனத்தின் நோக்கம்:**—இதற்கு முன்பு ஆயுர்வேதத்தின் அபிவிருத்திக்குப் பொருளாதார முறையில் அரசியல் விஷயங்களைச் சிந்திப்பதும், திட்டங்களை அரசாங்கத்தினிடம் ஸமர்ப்பிப்பதும், பயனை யாசிப்பதும் முக்கிய அலுவல்களாயின. இன்றைய நிலையில் ஆயுர்வேதாபிவிருத்தியில் திட்டம் வகுப்பதுடன் வித்வான்கள் சாஸ்திர பரிசயத்திலும் பூர்ணமான அபிவிருத்திக்கு மார்க்கத்தை நிர்ணயம் செய்தல்தான் முக்கியம்.

நமக்குப் பொருளாதார முறையில் ஸ்வதந்த்ரம் கிட்டிய பொழுதும், நமது ஸ்வதர்மம், வித்யைகள், பண்பாடு, கலைகள், இவைகளில் பக்தி, சிரத்தை, ஸாமர்த்தியம் இவைகள் பிரிட்டிஷாரின் ராஜ தந்திரத்தினால் மிகவும் குன்றி, மேனாட்டார்தான் விக்ஞானத்திலும் கலாசாரங்களிலும் உயர்ந்தவர்கள் என்ற மாறாத எண்ணம் நம்மை என்றென்றும் மேனாட்டாருக்கு அடிமையாக்கிவிட்டது. பொருளாதார விடுதலை கிடைத்தும் மானஸிக ஸ்வதந்திரம் கிடைக்காததால் உண்மை சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை எனவே கூறலாம். ஆயுர்வேதத்தைப் பற்றியவரை உண்மை சுதந்திரம் இன்னமும் உதயமாகவில்லை என்பது உண்மை.

நமது பிரதிநிதிகளான நம் அரசாங்கத் தலைவர்கள் நம் மக்களின் ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்ய மேனாட்டாரின் ஆசரணைகளையும் படிப்பையுமே எதிர்பார்க்கின்றனர். இந்திய தேசீய வழியில் ஆரோக்கியாபிவிருத்தியைப் பரிசீலிக்கும் எண்ணம் கூட இன்னும் ஏற்படவில்லை. சில ஆயுர்வேதாபிமானிகளின் தொந்தரவு பொறுக்காமல், அரசாங்கத்தார் ஆயுர்வேதாபிவிருத்தியை பரிசீலனை செய்ய ஸ்ரீ Col. R. N. சோப்ராவைத் தலைவரா

கக் கொண்ட கமிட்டியை இந்தியா முழுவதும் சுற்றி, தனது யாதாஸ்தை தெரிவிக்கும்படி நியமித்துள்ளது. அக் கமிட்டி தனது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு யாதாஸ்தைத் தயாரித்து அதை பிரசுரிப்பதில் முனைந்திருக்கின்றது. இக்கமிட்டி ஆயுர்வேதத்திற்கு உபகாரமளிக்கும் வகையிலேயே தனது யாதாஸ்தை தயார் செய்திருக்கின்றது என நம்பிக்கையான தகவல் எனக்கு கிடைத்திருக்கின்றது. அது எவ்விதமிருப்பினும் அரசாங்க ஸம்பந்தமான ஆயுர்வேதத்தின் வருங்காலத்திய அந்தஸ்து பூராவும் அக்கமிட்டியின் பேனா முனையிலிருக்கின்றது.

நமது சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் ராஜ்யம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும், முதல் ஆரோக்கிய மந்திரி ஸ்ரீமதி ருக்மிணிலக்ஷ்மீபதி அவர்களால் இடப்பட்ட பல திட்டங்களில், இந்திய வைத்திய ஸ்கூலை காலேஜ் அந்தஸ்திற்கு உயர்த்தினதென்றதைத் தவிர வேறு ஒரு திட்டங்களும் நடைபெறவில்லை. இந்திய வைத்திய கலாசாலையிலும் மாணவர்களின் படிப்புக்கு வேண்டிய வஸதியும், ஆராய்ச்சி-ஆஸ்பத்திரிகள் வஸதியும் இன்னமும் செய்து கொடுக்கப்படவில்லை. முதல் ஆண்டில் ஆயுர்வேதத்திற்காக ஒதுக்கப்பட்ட ஐந்து லக்ஷம் ரூபாய்களும் ஆயுர்வேத அபிமானமின்மையால்செலவழிக்கப்படவில்லை. இந்திய வைத்திய மத்திய போர்டின் தேர்தல் புதிய அமைப்பைப் பற்றியும் ஒன்றும் அறிய முடியவில்லை. ஆயுர்வேதத்திற்கு உபகாரமளிக்காவிடினும், நமது ஜனநாயக மந்திரிஸபை ஆஸவாரிஷ்டங்களை மதுவிலக்குச் சட்டத்தில் புகுத்தி அதனால் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு இழைக்கும் இன்னல்களைச் சொல்லி முடியாது.

வட இந்திய மாகாணங்களில் மாகாண சர்க்கார் நமது சென்னை மாகாணத்தையே அநுஸரித்து பரிசீலனைக் கமிட்டிகளை அலோபாதிக் வைத்யர்களின் தலைமையில் நிறுவி. சரமாரியாக பிரச்னைகளை அனுப்பி, ஆயுர்வேதத்தைப்பற்றி அலோபாதிக் வைத்தியர்களின் அபிப்பிராயங்களையும் சேர்ப்பதில் முனைந்துள்ளது. அமெரிக்காவிலும்

மற்ற மேனுடுகளிலும் உள்ள வைத்திய சட்ட திட்டங்களை மனதில் வைத்து ஆயுர்வேதத்திற்கு கேள்விகள் கேட்பதிலிருந்தே அன்னாரின் மனப்பான்மை நன்கு விளங்குமல்லவா ?

நமது தேசத்தலைவர்கள் தேசபக்தி மிகுந்தவர்களாயிருந்தும் இந்திய சாஸ்திரங்கள், கலை, ஆசாரங்கள், பண்பாடு இவைகளின் அப்பியாஸம் இல்லாததாலும் விதேசீய கலாசாரம், படிப்பு இவைகளில் ஊன்றித் திளைத்தவர்களானதாலும், நம் பாரதீயதர்சனங்களில் அவர்களுக்கு பற்றில்லாதது ஒரு விதத்தில் சரியே.

அத்தேசத் தலைவர்கட்கும், ஜனங்களுக்கும் ஹ்ருதயத்தில் ஊறிக்கிடக்கும் மேனாட்டு மோஹத்தைக் குறைத்து நமது கலாசாரங்களில் பக்தி ஏற்படுத்துவதும் இன்று ஆயுர்வேத வைத்தியர்களின் முக்கிய கடமையாகின்றது. இவ்விஷயத்தில் வாளாவிருந்தோமானால், ஆயுர்வேதத்தின் அபிவிருத்தி எவ்விதத்திலும் எதிர்பார்க்கமுடியாது. ஆயுர்வேதத்தின் பெருமையைப் பிரத்யக்ஷமாக நமது ஜனங்களுக்கு எடுத்துக் காட்ட பூர்ண வஸதி இல்லாவிட்டாலும், நாம் நமது ஸங்க சக்தியால் அரசியலிலும் ஸமூக ஸேவையிலும் பூர்ணமாக ஈடுபடுதல், மற்ற ஸாதனங்களை நம்மால் முடிந்தவரை ஸம்பாதித்தல் முதலியவைகளால் பொது ஜனங்களையும் அதிகாரிகளையும் நம் வசப்படுத்தி அவர்களுக்கு ஆயுர்வேதத்தின் பெருமையை உணர்த்தித் தானுகவேண்டும். நமக்குள் எத்தனைவித பேதமிருப்பினும் பாராட்டாமல், நமக்கு அன்னமளிக்கும் ஆயுர்வேதத்தின் அபிவிருத்திக்கு அனவரதமும் கார்யங்கள் செய்ய வேண்டும். மேலும் வைத்தியர்கள், கிராமப் பஞ்சாயத்து சபை முதல் மத்யசர்க்கார் மத்திய சட்டசபைவரை எல்லாவற்றிலும் அதிக ஸ்தானங்கள் பெற்று மற்ற அங்கத்தினர்களுக்கு நமது லக்ஷ்யத்தைப் புகட்டி அரசாங்கத்தின் அவலம்பத்தைப் பூர்ணமாகப் பெறவேண்டும். ஸமூகத்திற்கு, வகுப்பு வாதத்தினுல் ஏற்படும் கலகம், கொள்ளைநோய்கள் போன்ற கஷ்டங்கள் ஏற்படும்பொழுது வைத்தியர்கள்

ஆங்காங்கு சென்று ஸேவை புரியவேண்டும். தங்கள் சிகித்ஸையின் பிரயோஜனத்தைத் தகுந்த பரீக்ஷைகளுட னும் கணக்குகளுட னும் ஜனங்களுக்கு அறிவுறுத்தி ஜனங் களிடையே ஸாதனம் பூர்ணமாகப் பெறாத ஆயுர்வேதத்தி னாலேயே ஸமூகம் இவ்வளவு உபகாரம் பெறின், பூர்ண ஸாதனத்தை அளித்தால் இதனால் நடைபெறாத கார்யம் ஏது? என்ற அபிப்பிராயத்தை நன்கு பதியவைக்க வேண்டும். ஆயுர்வேதம் நமது முன்னோர்களின் வைத்திய மென்றோ, இந்தியாவின் வைத்தியமென்றோ, சிகித்ஸை சிக்கனமானதென்றோ, அதிக அளவில் ஜனங்களுக்கு இன்னும் உபகாரமளிக்கின்றதென்றோ நாம் ஆயுர்வேதா பிவிருத்தியில் ஈடுபடவில்லை.

விக்ஞான முறைப்படி நிறைந்துள்ளதென்றும், என் றும் மாறாத அடிப்படைத் தத்துவங்களுள்ளதென்றும், ஸ்திரமாக வியாதிகளை அகற்றுவதில் நிகரற்றதென்றும், மனஸ், சரீரம் இவ்விரண்டிற்கும் தூய்மையளிப்பதில் நிகரற்றதென்றும்தான் ஆயுர்வேதத்தை எடுத்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

மேலும், ஆயுர்வேத அபிவிருத்திக்கு பூர்ணமான ஸாதனங்களை மேனாட்டிலும் இங்கும் அவ்வைத்தியர் களுக்களிப்பதுபோல் அளித்தால் இன்னும் சுமார் 25 வரு ஷங்களுக்குள் ஆயுர்வேதத்தை எவ்விதப் பரீக்ஷையிலும் தேர்ந்து உயர்ந்ததென பிரத்யக்ஷத்தில் காட்டுவோமென நாம் சபதம் செய்து நமக்கு உதவிகளைப் பெறவேண்டும்.

ஆயுர்வேதாபிவிருத்தியில் பலவித அபிப்ராயபேதங்க ளிருக்கின்றன. "உலகம் முழுவதும் ஒரே வைத்திய சாஸ்தி ரம் விக்ஞானத்தை அடிப்படையாகக்கொண்டு அமைக் கப்பட வேண்டு" மென சிலர் கூறுகின்றனர். "தற்சமயம் உலகம் முழுவதும் வியாபகமாயுள்ள அலோபாதிக் வைத் திய முறையே விக்ஞான ஸம்மதமாயிருப்பதால், அதை யே ஏற்றுக்கொண்டு இந்திய வைத்தியங்களையும் அம் முறையில் பரீக்ஷித்து, உபயோகமான ஔஷத முறைகளை

அதனுடன் இணைத்து ஒரே வைத்தியமாக்கலாம். இம்முறையில் நான்கு ஐந்து வைத்தியங்களை போஷிப்பதற்குச் செலவிடும் தனம் மீதப்படுவதுடன், உலகம் முழுவதும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதால் ஆராய்ச்சியும் எளிதாகும்." இவ்வாலோசனையாளர் ஆயுர்வேதத்தையே ஒழித்துவிட பிரயத்னப்படுபவர்.

மற்றும் சிலர், "இந்திய வைத்தியம், ஆலோபாதிக் வைத்தியம், மற்ற வைத்தியங்கள் எல்லாவற்றையும் அதன் அதன் அடிப்படைத் தத்துவங்களை அவ்வப்படியே காப்பாற்ற எண்ணம் கொண்டவர்கள். ஆயுர்வேதத்துடன் அலோபாதிக் வைத்தியத்தையும் சேர்த்து மாணவர்களுக்குக் கற்பித்து விட்டால் காலாந்தரத்தில் எல்லாம் ஒன்றுகக் கலந்துவிடும்" என்ற அபிப்பிராயமுள்ளவர்கள். இந்நோக்கத்தில்தான் சென்னை இந்திய வைத்திய கலாசாலை நடைபெறுகின்றது. ஒவ்வொரு இந்திய வைத்தியமும் ஆயுர்வேதம், சித்தம், யூனனி என்றவை தனித்தனியே ஆலோபாதிக் வைத்தியத்துடன் கற்றுக்கொடுக்கப் படுகிறது. உற்று நோக்குங்கால்:— சித்த-ஆயுர்வேத-யூனனி முறைகள் ஒன்றுபட்டவையா? வேறுபட்டவையா? ஒன்றுனல் தனித்தனி பாடக்கிரமங்கள் தேவையில்லை? வேறுபட்டவையாயினும், இந்திய வைத்தியத்தையும் ஆலோபாதிக் வைத்தியத்தையும் ஒன்று படுத்த முயற்சிப்பதுபோல் இவைகளை ஒன்றுக்க ஏன் முயற்சிக்கவில்லை? இம்முறையைக் கடந்த 25 ஆண்டுகளாகக் கையாண்டதில் இந்திய வைத்திய முறைகளும் தங்களுக்குள் ஒன்றுகவில்லை. அலோபாதிக் வைத்தியமும் இந்திய வைத்தியத்துடன் சேரவில்லை. ஆக இவ்வழி பயன் தரவில்லை. இதன் விளைவாக இரண்டு வேறுபட்ட சாஸ்திரங்களை உபயோகத்தில் ஸமன்வயம் செய்ய சக்தியில்லாததாலும் காலப்போக்கினுலும் மாணவர்களுக்கு இந்திய வைத்தியத்தில் அபிமானம் பரிசயம் குன்றி, அலோபாதிக் வைத்தியத்தினுல் இழுக்கப்படுகிறுர்கள். ஆதலால் இவ்விளைவுகளை யகற்றுவதற்குத் திட்டத்துடன், மாணவர்களுக்கு

ஆயுர்வேதத்தில் ஞானம், பரிசயம், ஸாமர்த்தியம், சிரத்தை ஏற்படும்படி ஆயுர்வேதத்தைப் போதிப்பது அவசியமாகின்றது. இங்கே கவர்ன்மெண்டு இந்திய வைத்திய பள்ளிக்கூடத்தை நமது மண்டலம் விரோத மனப்பான்மையோடு எப்பொழுதும் கண்டிக்கின்றது என்ற சிலரின் எண்ணம் முற்றிலும் தவறானது என்பதை வற்புறுத்துகிறேன். பள்ளிக்கூடத்தின் அபிவிருத்தியில் தோஷங்களை விலக்கவும் குணங்களைச் சேர்க்கவும் ஆலோசனை சொல்லுவதற்கு அதனிடமிருக்கும் ஆதரவும் அபிமானமும்தான் காரணம்.

ஆயுர்வேதம் எவ்வளவு விக்ஞானப் பெருமை பெற்றிருந்தாலும், பிரயோகஸாமர்த்தியம் மிகக்குறைந்துள்ளதால் இன்று இந்திய மக்களுக்குத் தனியே மருத்துவ வசதி அளிக்கப் போதுமானதாக இல்லை. ஆனால் ஏழை இந்தியாவில் பலவித வைத்தியங்களை வளர்க்கப் பணமில்லை. அதற்காக ஆயுர்வேதத்தின் குறைகளையகற்றி தேவையாயிருக்கும் அம்சங்களில் இதர வைத்தியப் பிரயோகங்களைச் சேர்த்துச் சிறிது காலத்தில் இதர வைத்திய ஸஹாயமின்றியே ஆயுர்வேதத்தையே இந்தியாவின் ஒரே வைத்தியமாக்கிக் கொண்டு விடலாம். இக்காரியம் பூர்த்தியாகும் வரை இந்தியாவில் அலோபாதிக் வைத்தியத்தை வளர்ப்பதென்பது அவசியம். அதற்காக அலோபாதிக் வைத்திய திட்டத்தாலேயே வைத்திய உதவி அளிப்புத் திட்டம் போடுவது மிகவும் அறியாமையே.

## ஆயுர்வேதக் குறைவுகளை அகற்றும் வழி

இதில் அதன் கல்வித் திட்டமே மிகப் பிரதானம். விஷயவாரியாகப் பாட கிரந்தங்கள் அமைத்தலும், அக்கிரந்தங்களைத் தகுந்த கர்மாப்பியாஸ வஸதியுடன் மாணவர்களுக்கு போதித்தலும் வேண்டும். மற்ற வைத்திய சாஸ்திரங்களையும் ஆராய்ந்து, ஆயுர்வேத ஸித்தாந்தப்படி பரீக்ஷை செய்து உபகாரமளிப்பின் அவைகளை ஆயுர்வேத பரிபாஷைப்படி சேர்த்து மாணவருக்கு கற்பிக்க வேண்டும்.

உலகில் இன்றைய தினத்தில் உள்ள எல்லா சாஸ்திரங்களுக்கும் கலைகளுக்கும் பீஜரூபமான விவரணம் நமது தர்சனங்களிலும் கலைகளிலுமே அடங்கியிருக்கின்றன. ஆதலால் நவீன தர்சனங்களை ஆராய்ந்து அந்தந்த பிராசீன தர்சனப் பிரிவுகளில் ஒன்று சேர்ப்பது பண்டிதர்களுக்கு கடினமில்லை. இவ்விதம் பாரதீய தர்சனக்கலைகளிலும் அடங்கியிருக்கின்றன. ஆதலால் நவீன தர்சனங்களை ஆராய்ந்து உட்புகுத்தி பாரதீயதர்சனத்தையும் கலையையும் அடிப்படையாக அமைத்துக் கொண்டால்தான் இந்தியாவின் உண்மை சுதந்திரம் நிலைக்கும்.

இவ்விதம் ஆயுர்வேதம் உண்மையான அபிவிருத்தி அடைய நம் வைத்தியர்கள் ஒற்றுமையுடனும் உண்மையுடனும் எப்பொழுதும் முயற்சிக்க கோருகிறேன். முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்.

பிறகு நமது மஹாமண்டலத்தின் உப தலைவரும், அரசியல் நிர்ணயஸபை அங்கத்தினருமான ஸ்ரீரங்கம் ஆயுர்வேத ஸேவாப்ரவீண ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர் அவர்கள் மூலிகை மருந்துகள் பொருட் காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் மனித வர்க்கத்தின் நோயற்ற வாழ்க்கையை எந்த வைத்திய முறைகள் அளிக்க வல்லனவோ, அவ்வளவும் ஆயுர்வேத வைத்தியமென்றே தான் கருதுவதாகவும், நமது சர்க்கார் பொது ஜனங்களின் நியமனத்தாலேயே நிறுவப் பெற்றிருப்பதால் ஆயுர்வேத மூலம் பொதுஜனங்களின் நன் மதிப்பைப் பெற்றால் அதன் மூலம் சர்க்காரின் ஆதரவை சுய உரிமையுடன் அடைய நமக்கு அந்தஸ்து ஏற்படும் என்றும் பொது ஜன ஸேவையில் வைத்தியர்கள் ஈடுபட வேண்டுமென்றும் கோரினார். பிறகு விஷயாலோசனைக் கமிட்டிக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்ததும் 3–10–48 காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

மஹாநாடு பிற்பகல் கூடியபொழுது சென்னை இந்திய வைத்திய கலாசாலை பேராசிரியர் ஸ்ரீமான். V. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள், 'ஸமூக முன்னேற்றமும் சில

ஆயுர்வேத கோள்கைகளும்' என்பதுபற்றி விரிவாகப் பேசுகையில், ஆயுர்வேத வைத்தியர்களின் உதவி ஸமூகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும். தனிப்பட்ட மனிதனின் ஒவ்வொரு தசைகளிலும் எவ்வளவு தேவையாயிருக்கும் என்பதையும், வைத்தியன் மனிதனின் வாழ்க்கையை சீர்திருத்தி அமைப்பதில் எவ்வளவு பாடுபட வேண்டுமென்றும் அழகாக கோட்பாடுகளுடன் கூறினர்.

பிறகு சென்னை ஸ்ரீ K. ராகவய்யர் L. I. M. அவர்கள் 'சாரீரமும் நவீன விக்ஞானமும்' என்பதுபற்றி ஆராய்ச்சி மிகுந்த கட்டுரையை வாசித்தார்.

அத்துடன் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

மறுநாள் காலை 'ரஸ மணி' யைப் பற்றி ஓர் அழகிய விவாதம் நடைபெற்றது. சேலம் ஜோதிடமணி, ஸ்ரீ ராமஸாமி ஜோதிடரும், கும்பகோணம் ஸ்ரீ ஸுப்பையா வைத்தியரும் 'ரஸ மணி'யைப் பற்றிய தங்களது அநுபவத்தை விரிவாக உரைத்தார்கள்.

பிறகு தஞ்சை வைத்திய விசாரத, ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள், 'ஸம்பிராப்தி' என்ற விஷயத்தைப்பற்றி ஸம்ஸ்கிருத பாஷையில் ஓர் அரிய உபன்யாஸம் செய்தார்கள். பிறகு இவ்விஷயத்தைப் பற்றி நடந்த சர்ச்சையில் சென்னை வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலைப் பேராசிரியர் ஸ்ரீ V. S. வெங்கட ஸுப்பிரமண்ய சாஸ்திரிகளும், மதுரை ஸ்ரீமான் பண்டித நாராயணய்யங்கார் அவர்களும் கலந்து கொண்டு பல அரிய விஷயங்களை வெளிப்படுத்தினர்கள். ஸம்ஸ்கிருதத்தில் நடந்த அந்த சர்ச்சை மிக அழகாக இருந்தது. இத்துடன் 2-ம் நாள் காலை நிகழ்ச்சிகள் முடிவு பெற்றன,

அன்று மாலை, கூட்டத்தின் ஆரம்பத்தில் நமது மஹாமண்டலத்தின் பொதுக்காரியதர்சீ ஸ்ரீமான் T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் தனது காரியதர்சியின் வருஷாந்தர அறிக்கையில் 1947-ஆ மார்ச்சு 10, 11 தேதிகளில் சிதம்ப

ரத்தில் மஹா ஸம்மேளனம் கூடியதிலிருந்து இந்த ஸம்மேளனம் வரை ஐந்து ஸ்தாயி ஸமிதிக்கூட்டங்கள் கூட்டி அப்போதைக்கப்போது கவனிக்க வேண்டிய விஷயங்களை ஆலோசனை செய்து ஆவன செய்ய முயன்றிருப்பதையும், நமது தலைவர் கனம் சுகாதார மந்திரியை பேட்டி கண்டு ஆயுர்வேதாபிவிருத்தி விஷயமாக நேரில் ஒரு யாதாஸ்தை அளிக்க பல தடவை முயற்சித்தும் முடியாது போனதைப் பற்றியும், பிறகு 1948 ஜனவரியில் மதுவிலக்குச் சட்டத்தில் ஆஸவாரிஷ்டங்களையும் சேர்த்து ஆயுர்வேத வைத்தியர்களுக்கு இழைத்த அநீதியைக் கண்டித்து ஒரு விஞ்ஞாபனத்தை (மெமோராண்டத்தை) நம் உப தலைவர் ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர் மூலம் கனம் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டும் இதுவரை ஒரு பயனும் ஏற்படவில்லையென்றும், 1948 மார்ச்சில் சென்னைக்கு வந்த சோப்ரா கமிட்டிக்கு, உப தலைவர் ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள், Dr. K. ராகவன், ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் இம் மூவரால் சாக்ஷியம் கூறப்பட்டதைப் பற்றியும், நமது ஸங்க சக்தி அதிகமாக்க பல உபாயங்களைத் தெரிவித்தும் மண்டலத்திற்கு நிதி போதாமையால் வைத்திய சந்திரிகை நடத்துவது சிரமமாக இருக்கிறதால் நிதி சேர்ப்பதில் அங்கத்தினர்கள் தீவிரமாக முயலவேண்டும் என்றும், மஹா மண்டலத்தின் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறத் தலைவரையும், காரியதர்சியையும் 5 வருடத்திற்கொரு தடவை தேர்ந்தெடுப்பது மிகவும் உபகாரமாயிருக்கும் என்று தான் அபிப்பிராயப்படுவதாகவும் கூறி, தனக்கு ஏற்பட்டுள்ள பல வித அஸௌகரியத்தால், வேறொரு காரியதர்சியை வரும் வருடத்திற்கு தேர்ந்தெடுக்குமாறு கூறி, தனக்கு மண்டல காரியங்களில் பல விதத்திலும் உபகாரம் செய்த நண்பர்களுக்கு வந்தனமும் தெரிவித்தார். பிறகு வரவு செலவு கணக்கை சமர்ப்பித்தார்.

பிறகு புதிய வருஷத்திற்கு கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர். ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்தி

ரிகள். உப தலைவர்கள். ஆயுர்வேத ஸேவாப்ரவீண ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர், ஸ்ரீரங்கம். தர்மரக்ஷாமணி ஸ்ரீ K. பாலஸுப்பிரமண்ய அய்யர், சென்னை. ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ N. மாதவமேனன், சென்னை. காரியதர்சி ஸ்ரீ V. R. ஸுப்பிரமண்ய அய்யர், திருச்சி உபகாரியதர்சி ஸ்ரீ A. ராகவராவ் A. L. I. M. திருச்சி. பொக்கிஷதார், பண்டித P. S. ராமசர்மா, கரூர். வைத்திய சந்திரிகை ஆசிரியர், பண்டித S M. ஸுந்தரராஜாசாரியார், ஸ்ரீரங்கம்.

இதர அங்கத்தினர்கள்:— தஞ்சை ஜில்லா. 1. M சங்கர வைத்தியர், தஞ்சை. 2. ஸ்ரீ V. R. லக்ஷ்மீகாந்த சர்மா, கும்பகோணம். 3 ஸ்ரீ M. V. லக்ஷ்மண சாஸ்திரி, திருவாரூர். 4. ஸ்ரீ L. ராஜாவையா, மன்னார்குடி. 5. ஸ்ரீ ஸுப்பைய வைத்தியர், கும்பகோணம். 6. ஸ்ரீ T. S. ஸ்ரீனிவாஸய்யர், மாயவரம்.

திருச்சி ஜில்லா. 1. ஸ்ரீ S. R. வரதராஜலு நாயுடு, ஸ்ரீரங்கம். 2. ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.

ராமநாதபுரம். 1. ஸ்ரீ D. ஸ்ரீனிவாஸ அய்யர், ராமேச்வரம். 2. ஸ்ரீ K. கோவிந்தராஜலு, ராமநாதபுரம்.

மதராஸ், செங்கல்பட்டு ஜில்லா. 1. Dr. K. ராகவ அய்யர், L. I. M. மாம்பலம். 2. ஸ்ரீ R. ஸ்ரீனிவாஸராவ், சிந்தாத்ரிபேட்டை. 3. ஸ்ரீ K. ஸ்ரீனிவாஸராவ், மைலாப்பூர். 4. ஸ்ரீ C. M. சிவஸுப்பிரமண்ய அய்யர், A. L. I. M. திருவல்லிக்கேணி. 5. ஸ்ரீ V. S. வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரிகள், மைலாப்பூர். 6. ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள், M.A., L. I. M. மைலாப்பூர்

திருநெல்வேலி. 1. ஸ்ரீ L. ஸ்ரீனிவாஸன், கல்லிடைக்குறிச்சி.

மதுரை. 1. பண்டிட் S. நாராயணய்யங்கார். 2. T. S. ஸுப்பிரமண்ய அய்யர், மதுரை.

கோயம்புத்தூர். 1. ஸ்ரீ P. S. A. சர்மா, பொள்ளாச்சி

2. ஸ்ரீ C. K. விசுவநாத அய்யர், கோயம்புத்தூர். 3. ஸ்ரீ K. R. சுப்பராவ், ஈரோடு.

சேலம் 1. ஸ்ரீ T. P. C. சர்மா. 2. ஸ்ரீ S. A. ஸஞ்சீவி.

தென்-வட ஆற்காடு. 1. P. V. தேவராஜ முதலியார், திருப்பாதிரிப்புலியூர். 2. P. S. ஸ்ரீனிவாஸய்யர், சிதம்பரம். 3. ஸ்ரீ வெங்கடேசன், திண்டிவனம்." இவர்கள் மண்டலத்தின் கார்யங்களையும், பிரசாரங்களையும் தீவிரமாக நடத்தி நிறைவேற்றி வரக் கோரப்பட்டார்கள். மண்டலத்தின் பத்ரிகையான வைத்திய சந்திரிகை ஒன்றே நமது ஸமூகத்திற்கு உழைக்கக்கூடியதாகையால் அதை நிறுத்தாது அவசியம் நடத்த வேண்டுமென்றும், அதற்காக சந்தாவையும் ரூ. 5 வருடச்சந்தாவாகத் தீர்மானிக்கப்பட்டு இச் சந்தா விகிதம் 1949-ஆு ஜனவரி முதலாகவே அனுஷ்டானத்திற்கு வருமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த மகாநாட்டை சென்னையில் நடத்துமாறு சென்னை ஸ்ரீ K. பாலஸுப்பிரமண்ய அய்யர் அவர்கள் கேட்டுக்கொண்டு பேசுகையில், நமது மண்டலம் அகில இந்தியாவிலும் சர்க்காருக்கு உதவியாக ஆயுர்வேதத்தின் சட்ட திட்டங்களை நிர்ணயிக்கும் சபையாக மாறும்படி இதன் தரத்தை உயர்த்த நாம் மிகவும் பாடுபட வேண்டுமென்று வற்புறுத்தினர்.

பிறகு பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

1. மகாத்மா காந்தி, பிரம்மஸ்ரீ K. G. நடேசசாஸ்திரிகள், ஸ்ரீ S. ஸுப்பிரமண்ய சாஸ்திரிகள், (நமது மண்டலத்தின் பிரதான நிர்வாஹியான ஸ்ரீ P. S. ராமசர்மாவின் தகப்பனர்) இவர்கள் காலமானதைக் குறித்து மகாநாடு அனுதாபம் தெரிவிக்கிறது.

2. கர்னல் சோப்ரா தலைமையில் நியமிக்கப்பட்ட இந்திய வைத்திய பரிசீலனைக் கமிட்டியின் யாதாஸ்தை சீக்கிரம் பிரசுரிக்கும்படி இந்திய சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறது.

3. 30–3–48ல் G. O. No. 1000 P. H. 6–7–48ல் G. O. No. 2271 சர்க்கார் சட்டங்களை பலமாகக் கண்டிப்பதுடன் ஸ்தல ஸ்தாபனங்களின்கீழ் வேலை செய்யும், L. I. M. அல்லாத வைத்தியர்களுக்கும் கிளாஸ் வித்யாஸமில்லாமல் சம்பளமும், சர்வீஸ் படி சம்பள உயர்வும் கொடுக்காததையும், முன் G. O. அமுலிலிருக்கும் பொழுது கொடுக்கப்பட்ட ரூ. 400க்கு மேலுள்ள துகையை திருப்பிப் பிடித்துக் கொள்ள உத்திரவிட்டதையும் குறித்து இச்சம்மேளனம் தனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது. மறுபடியும் இவர்களுக்கு மட்டுமாவது இச்சலுகைகளை திருப்பிக் கொடுக்கவேண்டுமென இத்தீர்மானம் கேட்டுக் கொள்ளுகிறது. மேலும் மதராஸ் ஆயுர்வேத கலாசாலை வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலை போன்ற சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கலாசாலைகளில் 4 வருஷம் தேர்ச்சி பெற்று நீண்டகால ஊழியத்திலிருப்பவர்களுக்கு A கிளாஸ் வைத்தியர்களைப் போலவே சம்பளமும் மற்ற சலுகைகளும் கொடுக்கவேண்டும். இத்தீர்மானத்தை சுகாதார மந்திரியை பேட்டி கண்டு தெரிவிக்க சென்னை ஸ்ரீ K. பாலஸுப்பிரமண்ய அய்யர், ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர், ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களை பிரார்த்திப்பதுடன், இத்தீர்மானத்தை அவர்கள் அமுலில் கொண்டுவர முயற்சிக்கக் கோருகிறது.

4. 1948 ஜூன் மாதத்தில் நடந்த மந்திரி சபை விசேஷக் கூட்டத்தில் மதுவிலக்குச் சட்டத்தில் ஆஸவாரிஷ்டங்களை புகுத்தலாமா; கூடாதா என்று புனராலோசனை செய்ததற்காக வந்தனம் தெரிவிப்பதுடன், ஆஸவாரிஷ்டங்களை மதுவிலக்குச் சட்டத்திலிருந்தும் விலக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

5. ஆனரபில், V. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களால் 1905ம் வருடம் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ வேங்கடரமண ஆயுர்வேத கலாசாலையும் வைத்திய சாலையும் ஆயுர்வேதாபிவிருத்தியையே நோக்கமாகக் கொண்ட சாஸ்திரசிக்ஷை, கர்மபரிசயம் வழியாக சிறந்த ஆயுர்வேத வைத்தியர்களைத்

தயாரித்து தொண்டு செய்வதைப் பாராட்டி மேலும் சாஸ்திர கர்ம பரிசயத்திற்கு விசேஷ பயிற்சி ஏற்படுத்த பூர்ண வஸதிகளை ஏற்படுத்தி ஒரு ஆதர்ச (model) கலாசாலையாக அதை நிறுவ வேண்டுமென்று அக்கலாசாலை நிர்வாஹிகளைக் கேட்டுக்கொள்ளுகின்றது

6. சுமார் 27 வருஷ காலமாக நன்ருக நடந்து வந்த புதுக்கோட்டை ஸமஸ்தான ஆயுர்வேத வைத்யசாலையும் தஞ்சை முனிஸிபாலிடி ஆயுர்வேத வைத்யசாலையும், தற்சமயம் மூடப்பட்டதைக் கண்டித்து உடனே அதைத் திறந்து பொது ஜன நன்மை புரியுமாறு ஸம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

7. ஆயுர்வேதம், ஆயுர்வேத வைத்தியர்கள் இவர்களின் தன்மதிப்பைக் கெடுக்குமளவில் அநேக போலி ஸ்தாபனங்கள் பாத்ராபாத்ரம் அறியாது பட்டமளிக்கும் வகையைக் கண்டித்து, அப்பட்டங்களை வைத்தியர்கள் ஏற்கக்கூடாதெனத் தீர்மானிக்கிறது.

தீர்மானங்கள் நிறைவேறியதும் கரூர் பண்டித P. S. ராமசர்மா அவர்கள் 'கிருத்யநிவேதனம்' என்ற விஷயத்தைப்பற்றி விரிவாக இனிய ஸம்ஸ்கிருத பாஷையில் அழகாகப் பேசினுர்கள். அன்னுரின் உபன்யாஸம் ஸபையோர் மனதைப் பெரிதும் கவர்ந்தது. பிறகு தலைவரின் முடிவுரையுடனும் வரவேற்புக் கமிட்டி காரியதர்சியின் வந்தனோபசாரத்துடனும் ஸம்மேளனம் இனிது முடிந்தது.

மங்களம்.

# 10–3–47 முதல் 2–10–48 வரை வரவு செலவு கணக்கு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10–3–47ல் கையிருப்பு ரொக்கம் | 30 | 7 | 8 | அச்சடிப்பு கூலி பேபர் முதலியவை | 1863 | 5 | 0 |
| பாங்கில் டிபாஸிட் | 29 | 14 | 0 | தந்தி, தபால் செலவு | 92 | 0 | 6 |
| அங்கத்தினர் கட்டணம் சந்தா | 948 | 9 | 0 | ஸ்டேஷனரி | 18 | 9 | 0 |
| நன்கொடைகள் | 561 | 0 | 0 | பிரயாண செலவு | 5 | 12 | 0 |
| விளம்பரங்கள் மூலம் | 131 | 0 | 0 | பாங்கு கமிஷன் செலவு | 0 | 8 | 0 |
| ஸ்ரீ விலாஸம் பிரஸிற்கு அச்சடித்ததற்கு கொடுபட வேண்டியது | 409 | 5 | 0 | அகில இந்திய மஹாமண்டலத்துடன் இணைப்பிற்கு செலவு | 15 | 4 | 0 |
| | | | | கையிருப்பு ரொக்கம் | 84 | 15 | 2 |
| | | | | பாங்கு டிபாஸிட் | 29 | 14 | 0 |
| | 2110 | 3 | 8 | | 2110 | 3 | 8 |

ஸ்தாயிஸமிதியில் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டது.

21–0–48 V ஸுப்பிரமண்ய அய்யர்.

ஸம்மேளனத்தின் பொதுக் கூட்டத்தில் படிக்கப்பட்டு ஒத்துக்கொள்ளப்பட்டது.

4–10–48 V. B. நடராஜ சாஸ்திரி, தலைவர்.

## நன்கொடை வரவு

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் | 130 | 0 | 0 |
| ஸ்ரீ V. R. ஸுப்பிரமண்ய அய்யர் | 90 | 0 | 0 |
| ஸ்ரீ S. M. ஸுந்தரராஜாசாரியார் | 85 | 0 | 0 |
| ஸ்ரீ P. S. ராமசர்மா | 50 | 0 | 0 |
| ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி | 50 | 0 | 0 |
| ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர் | 40 | 0 | 0 |
| ஸ்ரீ A. ராகவ ராவ் | 40 | 0 | 0 |
| ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரியும் ஸ்ரீ K. ராகவய்யரும் | 30 | 0 | 0 |
| ஸ்ரீ V. R. லக்ஷ்மீகாந்த சர்மா | 20 | 0 | 0 |
| ஸ்ரீ M. துரைஸாமி அய்யங்கார் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ R. ஸ்ரீனிவாஸராவ் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ D. ஸ்ரீனிவாஸய்யர் | 4 | 0 | 0 |
| ஸ்ரீ V. நாராயணஸ்வாமி அய்யர் | 2 | 0 | 0 |

இவர்களுக்கு நமது நன்றி.

## தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம்

### சேலம் கிளை.

### ஏழாவது கூட்டம்

1. 26–9–48ல் சங்கத் தலைவர் டாக்டர் S. A. சஞ்சீவியின் தலைமையில் கூடி 15-வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹா சம்மேளனத்திற்கு கும்பகோணத்துக்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அவரவர்கள் சொந்தச் செலவில் போகலாமென தீர்மானிக்கப்பட்டது.

2. டாக்டர் S. A. சஞ்சீவி, டாக்டர் பழனியப்பா, சித்த வைத்திய பண்டிட் S. V. R. கண்டர், வைத்தியர் ராமலிங்கம் முதலியோர்களால் "நாட்டு வைத்தியமும்,

நமது கடமையும்" என்பது பற்றி தெளிவாகவும் விரிவாகவும் பேசி சர்ச்சை நடத்தப்பட்டது.

3. காந்திஜீயின் ஜயந்திக்காகவும், கும்பகோணம் சம்மேளன சார்பாகவும் 3-10-48 ஞாயிறன்று விசேஷக் கூட்டம் கூடத் தீர்மானம் செய்யப்பட்டது.

4. இதுவரை ஒவ்வொரு கூட்டமும் பிரதி ஆங்கில மாதம் கடைசி ஞாயிறு 4-மணிக்குக் கூடியதை இனி ஒவ்வொரு மாதக் கடைசி சனிக்கிழமை கூட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு காரியதர்சி பழனியப்பா வந்தனோபசாரம் கூற, கூட்டம் இனிது முடிந்தது.

## 3--10—48ல் காந்திஜீ ஜெயந்தி விசேஷக் கூட்டம். (8)

தன் வாழ்நாள் முழுதும் தேசசேவைக்காக அர்ப்பித்தவரும், இதனால் தன் சமூகத் தலைவர்களால் பல இன்னல்களுக்கு ஆளாகியும் தேசபக்தியைக் கைவிடா தேச பக்தர் ஜனப். சவுக்கார் கௌஸ் மொஹைதீன் சாயபு அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் காந்திஜீயைப்பற்றி கூறிய பின் சங்கத் தலைவர் டாக்டர் S. A. சஞ்சீவி அவர்களால் காந்திஜீ வாழ்க்கை, உபவாச தத்வமும் ஆயுர்வேதமும் என்பன பற்றியும், வைத்தியர் ராமலிங்க முதலியார் அவர்களால் காந்திஜீயின் நோக்கங்கள், உபதேசங்களும் நமது கடமை என்பது பற்றியும், டாக்டர் R. K. பழனியப்பா அவர்களால் மகாத்மாஜீயின் தத்வம், சுகாதாரம் என்பன பற்றியும், சிவராஜயோகி S. பொன்னுசாமி செட்டியாரவர்கள் காந்தியடிகளின் மேன்மை என்பது பற்றியும், உபகாரியதர்சி டாக்டர் S. அனந்தராமன் அவர்களால் காந்திஜீயும் பொது ஜனங்களும் என்பது பற்றியும், திரு. K. S. இரங்கசாமி கவுண்டர் அவர்களால் காந்திஜீயின் தத்வமும். வைத்தியர்கள் நடந்துகொள்ள வேண்டியவை என்பது பற்றியும் மிக விரிவுபட பேசியபின் தலைமை தாங்கிய ஜனப் கௌஸ் சாஹேப் அவர்கள் காந்திஜீயின் வாழ்க்கைத் தத்வத்தை விளக்கிக்கூறி, நபி நாயகம், இயேசு கிறிஸ்து போன்று மகாத்மா காந்தியடிகளும் அவதார புருஷரே எனவும் கூறினர். பிறகு டாக்டர் சஞ்சீவி அவர்

களாலும் டாக்டர் பழனியப்பா முதலியோர்களாலும் சென்னை ஆயுர்வேத ஆசிரமத்தில் சர். சி. பி. ராமசாமி அய்யர் பேசியதைப் பாராட்டியும், நம் 15வது சம்மேளனம் வெற்றிகரமாக நடைபெறவேண்டப்பட்டது.

பிறகு தலைவர் ஜனுப் சாஹேப் அவர்களுக்கு மாலை யணிவித்து கௌரவிக்கப்பட்டு பிறகு காரியதர்சி வந்த னோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

---

## சரபேந்த்ரர் வைத்ய முறையில் ஸந்தேஹங்கள்

மின்னக்கல், வைத்யசேகர K. S. சிவாமிருதம் எழுது கிறார்:—

1. 'மலட்டுப் புழு விழ' யோகத்தில், (Vol. 10- No. 6, 7ல்)

மருந்து வகைகள் சம எடை என்றிருப்பதால் ஒரு மருந்தின் எடை எவ்வளவு? பால் அளவு என்ன? மருந்து கொடுக்கும் காலம் மாதாந்தர விலக்க காலங்களிலா அல் லது மற்றைய நாட்களிலா?

3. "கர்ப்ப முண்டாக" யோகத்தில்

பிரம்மி இலை ரஸம் அரைப்படி என்பது பட்டணம் பக்காவிலா? சிறிய படியிலா? அந்த ரஸத்தில் எந்த அளவு, எவ்வளவு வேளை தினம் உபயோகிக்கவேண்டும்? கொடுக் கவேண்டிய காலம் விலக்க நாட்களிலா, மற்றைய நாட்க ளிலா?

4. "கர்ப்ப விருத்திக்கு"

எத்தனை நாட்கள் உபயோகிக்க வேண்டும்? பால், பனைவெல்லங்களின் அளவு என்ன?

7. "நஞ்சு பிரிய" யோகத்தில்

பருத்தி இலை, காடிகளின் அளவு என்ன? எவ்வளவு எடை உபயோகிக்க வேண்டும்?

8. "பால் சுரக்க"

பாதிரிவேர் தினம் ஒன்றுக்கு எவ்வளவு வேளை என்ன அளவு?

# சந்த்ரிகை அன்பர்களுக்கு வேண்டுகோள்

உலகில் ஒவ்வொரு ஸமூகமும் ஸ்தாபனமும் தான் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று நினைப்பது இயற்கையே. அப்படி முன்னேற்றம் அடைய வேண்டுமானுல் தன்னுடைய உண்மை நிலையைத் தெரியப்படுத்துவதுடன் பிறர் தன்மீது சொல்லக்கூடிய பழிகளை விலக்கி ஜனங்களிடையே பிரசாரம் செய்வது மிக மிக அவசியம். இதற்கு ஸாதனமாகவுள்ளது இக்காலத்தில் பத்ரிகையே என்பதில் ஒருவருக்கும் அபிப்பிராயபேதமிருக்கக் காரணமில்லை.

வாழ்க்கைக்குவேண்டிய எல்லாப் பொருள்களும் ஒன்றுக்கு மூன்று முதல் ஐந்து மடங்கு வரை விலை வாசிகளில் ஏறியிருப்பது அனைவரும் அறிந்த விஷயம். இது போலவே பத்ரிகைத் தொழிலிலும் எல்லா சாமான்களும் மிகவும் விலை ஏறியிருப்பதனுல் அதிகச் செலவேற்படுகிறது. ஆகவே, இக்காலத்தில் ஒரு பத்ரிகை நடத்துவதானுல் மிகவும் சிரம சாத்யமாயிருப்பதுடன் நிதியும் வேண்டியது அவசியமாகிறது. சந்தா செலுத்துபவர்களைக் கொண்டே பத்ரிகை நடத்துவதும் இயலாத காரியம் என்பது அனுபவசாலிகள் அறிந்த விஷயம். விளம்பரம் முதலிய வியாபார முறைகளாலேயே பல பத்ரிகைகள் நடந்து வருவதை நாம் பார்த்து வருகிறேம், சில விக்ஞானப் பத்ரிகைகள் விளம்பர வழிகளை எதிர்பார்க்க முடியாது; எனவே அவைகள் அபிமானிகள் அபிமானத்தாலும் சிறந்த நன்கொடைகளாலுமே முன்னேறி வருகின்றன. நிற்க,

நமது வைத்ய சந்த்ரிகைக்கு சந்தாதார்களும், அபிமானிகளுமே கைம்முதல். வேறு நிதியில்லை என்பது மட்டுமல்லாமல் கொடுக்க வேண்டிய பாக்கிகூட இருப்பது பிறிதொரு இடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கணக்கு விவரங்களினுல் அறியலாம். இந்தக் காரணத்தினுலேயே நமது சந்த்ரிகை இரண்டுமாத காலமாக வெளிவர இயலவில்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்தாமலிருப்பதற்கில்லை.

சென்ற வருஷம் சில அன்பர்கள் தாமாகவே நன்கொடை அளிக்கவும் முன் வந்தார்கள். அம்மஹான்களின் விவரங்களையும் மற்றெரு இடத்தில் பார்க்கலாம். அவர்கள் இதுவரை

அளித்ததற்கு எமது மனமார்ந்த நன்றியை அறிவித்துக் கொள்வதுடன் தொடர்ந்தும் சக்திக்குத் தக்கவாறு உபகரிக்க வேண்டுகிறோம்.

"ஐச்வர்யம் உள்ளவர்கள் பொற்காசுகள் அளியுங்கள்; ஸௌகர்யமில்லாதவர்கள் சில காசுகள் அளியுங்கள்" என்று சொன்ன கவியின் வார்த்தையைக் கருத்தில் கொண்டு தங்களாலும் தங்கள் நண்பர்களாலும் எவ்வளவு தூரம் உபகரிக்க முடியுமோ; அவ்வளவும் உபகரித்து நமது சந்திரிகையை எப்போதும் பூர்ண பிரகாசத்துடன் பிரகாசிக்கச் செய்ய வேண்டியது அன்பர்களின் கடமை என்பதைத் தெரியப்படுத்திக் கொண்டு இத்துடன் நிற்கிறோம்.

---

## சுகாதார இலாகா நிர்வாஹ யாதாஸ்துக் குறிப்பு.

*19—10—48*

பிரஸ்தாப வருஷத்தில் விலைவாசிகள் அதிகமாக இருந்தபோதிலும் மிகக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டபோதிலும் மாகாணத்தின் பொது ஆரோக்யம் மொத்தத்தில் த்ருப்திகரமாயிருக்கிறது.

| | 1946<br>1000க்கு | 1947<br>1000க்கு |
|---|---|---|
| ஜனன விகிதம் | 31·62 | 32·72 |
| மரண விகிதம் | 18·88 | 20·06 |
| சிசு மரணம் | 146·88 | 146·77 |
| தாய் மரணம் | 7·94 | 8·34 |

---

| | | |
|---|---|---|
| காலரா | 753 | 12,743 |
| வைசூரி | 7923 | 2650 |
| பிளேக் | 2854 | 2718 |
| பலவித சுரம் | 248663 | 25820 |
| சீதபேதியும் வயிற்றுப் போக்கும் | 62681 | 75719 |
| அம்மை தடுப்பு மருந்து பிரயோகித்தது | 8584105 | 4881375 |

---

ஸீதாராம தபோவன
வாசக சாலை.

# சிலாஜது

[ஆயுர்-டாக்டர் K. சிவஸுப்ரமணியம், நாவற்குழி, சிலோன்.]

---

இஃது சிலாதாது வென்றும் வழங்கப்படுகின்றது. ஜதுவென்றால் அரக்கு. சிலையிலிருந்து வருகிற அரக்குப் போன்ற வஸ்துவாகையால் சிலாஜது வெனப்படுகின்றது. சிலாசத்து என்றும் சிலர் கூறுவார்கள்.

கிரீஷ்மருதுவில் சூரியனுடைய கடும் வெய்யிலினால் பொன், வெள்ளி, செம்பு கனியங்களவையுமான இமய மலையின் அடிவாரங்களிலிருந்து கசிந்து சிலாஜது வெளி யாகின்றது.

இதில் இரண்டு பிரிவுண்டு 1. கோமூத்திர சிலாஜது 2. கற்பூர சிலாஜது. கோமூத்திர சிலாஜதுவானது கருநிற முடையதாயும், பசைத் தன்மையுடையதாயும், கடுரச முடையதாயுமிருக்கும். ஆனால் கோமூத்திரவாசனையுடை யது. [கோ—பசு] கற்பூர சிலாஜதுவானது வெண்மை யாகவும், தகடுகளாகவுமிருக்கும், இதில் சுண்ணும்புச் சத் தும், இரும்புச்சத்தும், வெடியுப்புச்சத்துமுண்டு.

**செய்கை:—** கிருமிநாசினி, வேதனுசாந்தினி, வியதா பேதகாரி, பலகாரி, லகுமலகாரி, மிருதுபேதனகாரி, பூதி கந்த நாசினி, கபஹரகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி, மூத்திர வர்த்தினி, சுவாச கர்மத்தையுற்சாகப்படுத்தும் தன்மையு முண்டு.

**பொதுக்குணங்கள்:-** அம்லசுவையோ? கஷாய சுவை யோ? என்று கூற முடியாமலிருக்கும். விபாகத்தில் கடு வாக மாறுகின்றது. இதற்கு 'யோகவாஹி' குணமுண்டு. நரைதிரை வராமல் தடுக்கக்கூடியது. தேகத்திற்கு உஷ் ணத்தையோ, சீதளத்தையோ உண்டாக்காது கிரியா வுறுப்புக்களிலிருக்கத்தகுந்த கபத் தன்மையையும், மலின வஸ்துக்களையும் வெளியாக்கும்.

மதுமேகம், கைகால் பதறுதல், அஸ்மரி, மூத்திரக்ஷதம் முதலிய மூத்திர சம்பந்த ரோகங்கள் க்ஷயம், சுவாசம், அர்சஸ், உன்மாதம், அரோசகம், குஷ்டம், கிருமி, ஜ்வரம், காமலா, உதர ரோகங்கள், சோமரோகம், அக்னி மாந்தம், மேதோ ரோகம், க்ஷதக்ஷீணம், சூலை, குன்மம், பிளீகோதரம், ஜலோதரம், இருதயவலி, அதிசாரம், கிரஹணீ, ஆகிய வியாதிகளை ஸ்வஸ்தம் செய்யும் தன்மை வாய்ந்தது. மூத்திரத்திலிருக்கின்ற உப்பு வகைகள் ஆகிய பொருட்களில் (Uricacid) என்பதை விருத்தி செய்யுமாகையால் யூரிக்காஸிட் சம்பந்தமான ரோகங்களில் இதைக் கொடுக்காது விடுவது நன்று. மூத்திரத்திலுள்ள ஏனைய பொருட்களைக் குணப்படுத்தும். இஃது தேகத்தைப் பலப்படுத்தி கிழத்தனமும் மரணமும் சீக்கிரம் நேரிடா வண்ணம் செய்யக்கூடியது. இதில் லோக சம்பந்தமுண்டு.

**சிலாஜது சுத்தி:–** 1. பசும்பால், திரிபலா கஷாயம், கையாந்தகரைச்சாறு இவைகளில் ஏதாவதொன்றில் பாவனை செய்ய சுத்தியாகும். 2. க்ஷாரங்கள், அம்லங்கள், கோசலம் இவைகளில் ஏதாவதொன்றில் சிலாஜதுவைக் கரைத்து வடிகட்டி உலர்த்திக்கொள்ளவும். 3. க்ஷாரங்கள், அம்லங்கள், குக்குலு இவற்றின் கஷாயத்தில் ஸ்வேதயந்திரப்படியும் சுத்தி செய்யலாம். 4. அரிசி கழுவிய நீரில் ஒருநாள் பாவனை செய்தெடுக்கவும் சுத்தியாகும்.

**சுத்தித்த சிலாஜதுவின் லக்ஷணம்:–** 1. நெருப்பிலிட்டால் புகையாமல் எரியும், எரிந்தபின் அயபஸ்மத்தினுடைய தன்மையைப் பெறுவதாயும், 2. அறுகம் புல்லின் நுனியினாலே சிலாஜது பஸ்மத்தை எடுத்துத் தண்ணீரில் போட்டால் நூல் இலைகள் போன்று கீழிறங்கும் தன்மையுடையதாயுமிருக்கும்.

**சுத்தித்த சிலாஜதுவின் உபயோகங்கள்:–** அயபஸ்மமும் சிலாஜதுவும் சேர்த்துச் சாப்பிட்டால் தாதுவை விருத்தி பண்ணும். நரை திரை பரவவொட்டாது தடுக்கும். ஆசயங்கட்குப் பலம் கொடுக்கும். ஞாபக சக்தியை விருத்தி

பண்ணும். தேகத்திற்கும் பலம் கொடுக்கும். இப்படிச்சாப்பிட்டால் ஒரு கிழமையில் இதன் பலனைப்பறியலாம். மூன்று கிழமையில் உத்தம பலனையும், ஏழு கிழமையில் விசேஷ பலனையுமறியலாம். இரசாயன முறைப்படி பத்திய பாகங்களைக் கவனித்து ஆறு வாரங்கள் சாப்பிட்டால் கிழத்தனம் சீக்கிரம் நேரிடாமல் சந்தோஷமாக நூறு ஆண்டுகள் வாழலாம்.

**பிரமாணம் அல்லது அளவு:–** சாதாரண பாவிப்புக்கு ஒரு தோலா, உத்தம பலனைப் பெற இரண்டு தோலா, விசேஷ பலனைப்பெற நாலு தோலா வரை நாளொன்றுக்குச் சாப்பிடவேண்டும்.

N. B. அசுத்தி சிலாஜதுவைச் சாப்பிடுவதாலுண்டாகும் துர்க்குணங்களாவன:- தேகத்தில் வீக்கம், வலி, சோம்பல், இரத்தஸிராவகம், அக்னிமாந்தம், மலபந்தம் ஆதியன.

**நிவர்த்தி:–** கேவலம் மிளகுப் பொடியைச் சூரணித்து கால் தோலா வீதம் ஏழு நாள் சாப்பிட ஸ்வஸ்தமாகும்.

**சிலாஜது பஸ்மம்:–** சுத்தி செய்த சிலாஜது ஒரு ராத்தல் எடுத்து அரிசி கழுவிய நீர் அல்லது குமரிஸ்வரஸம் விட்டரைத்து வில்லை தட்டி அகலில் வைத்து சீலைமண் செய்து அரைச்சாக்கு விராட்டியில் புடமிட பஸ்மமாகும்.

பாவிக்கும் அளவு 1, 2 கிறெயின்ஸ்.

**அனுபானமும் தீரும் வியாதிகளும்:–** 1. நெல்லிக்காய்க் கஷாயத்தில் கொடுக்க நீடித்த சூலை, சூலையுடன் கூடிய அதிஸாரம் தீரும். 2. திரிபலா கஷாயம் அல்லது தசமூல கஷாயத்துடன் கொடுக்க பித்த சூலை–காமாலை தீரும். 3. யக்ருத் சம்பந்தமான ரோகங்களுக்கு பவளமல்லிகை, நிலவேம்பு முதலிய மிருது பேதன திரவியங்களுடன் கொடுக்கவும். 4. நீராமை ரோகத்தில் ஆரம்பத்தில் அயபஸ்மத்துடன் சேர்த்துக் கொடுத்து பாலும் சோறும் அல்லது பாற்கஞ்சி சாப்பிட்டு வரச்செய்யவும். உப்பும், தண்ணீரும் விலக்கவும். 5. குழந்தைகளின் குலைக்கட்டி, ஈரல் கட்டி இவைக

ளுக்கும் நிலவேம்பு, பவளமல்லிகை இவைபோன்ற மிருது பேதன குணமுள்ள திரவியங்களின் கஷாயத்தில் கொடுக்கவும். 6. அசுவகெந்திஸ்வரஸ சத்துடன் கொடுக்க காமோத்திபனம் செய்யும். 7. வெள்ளை, வெட்டை ரோகங்களில் முந்திரிகைப்பழச் சாறு அல்லது திரிபலா கஷாயத்தில் கொடுக்கவும். [திரிபலை, கடுக்காய், நெல்லி, தான்றி] 8. மேக ரோகத்திற்கு வங்கம், வெள்ளி, நாகம் இவற்றின் பஸ்மங்களுடன் சேர்த்துக் கொடுக்கவும். வெந்நீர் அனுபானம்; அருந்துவதும் வெந்நீர். 9. ஆர்த்தவ மதிகமாய்ப் போதல், இத்துடன் பித்தம் யக்ருத் கோளாறு இருந்தால் சங்கோசனகாரி குணமுள்ள கற்கடக சிருங்கி, அதிவிடயம், ஓமம், காட்டாத்திப்பூ, வெந்தயம், ஆதிய கயருள்ள திரவியங்களைக் கொண்டு கஷாயம் செய்து பஸ்மத்தையும் சேர்த்து கொடுத்துக் கொள்ளவும். 10. பலவீனத்தாலுண்டாகும் வெள்ளைக்கு, தாரோஷ்ணக்ஷீரம் (காய்ச்சாத பால்) அல்லது சங்கோசனகாரி குணமுள்ள திரவியங்களைக் கஷாயம் செய்து பாவிக்க ஸ்வஸ்தமாகும். 11. மூத்திரக்ஷதம், மூத்திராஸ்மரி, மூத்திர கிரிச்சிரங்களுக்கு மதூகம், நெருஞ்சில் இவற்றின் கஷாயத்தில் கொடுக்கவும். 12. சலத்தில் வெண்தாது கலந்து இருந்தால், காசுக்கட்டி, அஸ்வர்த்தனு, துவரையிலைச்சாறு, உள்ளி ஸ்வரசம் இவைபோன்ற சங்கோசனகாரி குணமுள்ள அனுபானத்தில் கொடுக்கவும். 13. உன்மாதத்திற்கு (ஹிஸ்டீரியா) ஜடாமாஞ்சில் திரிபலை கஷாயம் அல்லது தசமூல கஷாயத்தில் கொடுக்கவும்.

**ஔஷத யோகம்:**– 1. **பாஷாணபேத சூரணம்,** சிலாஜது, அப்பிரக ஸிந்தூரம், நீறிய சுண்ணும்பு, திப்பிலி, பேப்புடல்- இவைகளைச் சூரணம் செய்து 10, 15 கிரெயின்ஸ் வரை கொடுக்கவும். பறங்கி வியாதி, ஸ்திரீகளுக்குண்டாகும் வெள்ளை தீரும்.

2. **யோகராஜ அவலேகம்:** சிலா ஜது பஸ்மம், அயபஸ்மம், ஸ்வர்ண பஸ்மம், வெள்ளி பஸ்மம் வகைக்கு 5 பங்கு. திரிபலை, திரிகடுகு, சித்திரமூலம், வாய் விடங்கம், வகைக்கு

1 பங்கு, வெல்லம் 8 பங்கு, அளவான நெய்-தேன் சேர்த்து லேகியம் பக்வம் செய்யவும்.

**பிரமாணம்:–** $\frac{1}{2}$ தோலா வீதம் காலை-மாலையுண்ணவும்.

**குணம்:–** இதற்கு விபாதாபேதகாரி குணமுண்டு. பாண்டு, காமாலை, புராணஜ்வரம், சர்ம ரோகங்கள், மூத்திர சம்பந்தமான ரோகங்கள், அர்சஸ் ஆதியன தீரும்.

**வெளிப்பிரயோகம்:–** சிலாஜதுவை வேறு திரவியங்களுடன் சேர்த்து லேபனமாகப் பாவிக்க கிருமி நாசினி, வேதனசாந்தினி, தாபமகற்றி ஆகிய குணங்களை யுண்டுபண்ணும். கிருமி சம்பந்தமான ரோகங்களில் பாவிக்க நற்பயனுண்டாம். வீக்கத்தைத் தணித்து வேதனையை நீக்கிச் சாந்தியையுண்டுபண்ணும். இஃது அஸ்திபக்னம், இசிவு, நரம்புச் சுளுக்கு முதலியவைகளில் நன்மை பயக்கும்.

**சிலாஜது லேபம்:–** சிலாஜத், நிம்பஸ்வரஸம், குறிஞ்சா, நெய் இவைகளைச் சேர்த்துச் சேர்வையாக அரைத்து வாத வீக்கம், வாதப்பிடிப்பு, சந்திகளிலுண்டாகும் வேதனை, இசிவுகள், பார்சுவ வாதம், கண்டல் காயம் இவைகளிலுபயோகிக்க ஸ்வஸ்தமாகும்.

**உட்பிரயோகம்:-** (அன்னபசன யந்திரங்கள்.) திக்த கஷாய சுவையுடையதாயும், தீபன சக்தியை விருத்தி பண்ணுவதாயும், பாசனத்திற்கு ஏற்ற ரசங்களை அதிகமாகச் சுரப்பித்தலும் சாரத்தை ரஸத்தில் சேர்ப்பதற்கு உதவி செய்யும். ஸங்குமலகாரி குணமுண்டு. நீடித்த சூலையை நீக்குமென்பது வைத்திய பண்டிதர்களின் அபிப்பிராயம். ஆமலகீ கஷாயத்தில் மிகக் குறைந்த அளவில் கொடுக்க வலி அல்லது சூலையுடன் கூடிய அதிசாரத்தை நீக்கும் தன்மையது. கல்லீரல்-மண்ணீரல் வியாதிகளில் திரிபலா கஷாயம் அல்லது தசமூல கஷாயத்தில் கொடுக்க நிவர்த்தியாகும். சூலை நோய்களில் விசேஷமாக பித்த சம்பந்தமான சூலையில் சிலாஜத் சாப்பிட்டவுடன் ஒரு மணி காலம் வரை தண்ணீர் சாப்பிடக்கூடாது. அப்படிச் சாப்பிடுவதால் சிலாஜதுவின் கிரியை கெட்டு விடும். சிலாஜதுவை அதிக

அளவில் கொடுத்தால் அக்னியில் ஏற்படும் கெடுதிகளைச் செய்யாது. ஏனெனில் லகுவிரேசனி குணமுண்டு.

**ஜலோதரத்தில்:-** சிலாஜதுவை அயஸிந்தூரத்துடன் கொடுப்பதாலும் சோறு பத்தியமாகச் சாப்பிட வேண்டும். இந்த ரோகத்தில் உப்பும், தண்ணீரும் விலக்க வேண்டும்.

**ஹ்ருதயதாபன ரோகங்களில்:-** திரிபலா கஷாயத்துடன் கொடுக்க இருதயத் துடிப்பு முதலிய நோய்களை ஸ்வஸ்தம் செய்யும். நீடித்துச் சாப்பிட இருதயத்துக்குப் பலத்தைக் கொடுக்கும். சுவாச கர்மத்தை உற்சாகப்படுத்தி, சுவாச நாளத்திலுள்ள குஞ்சகலையிலுள்ள கிருமிகளை நாசம் செய்து, கபத்தை வெளியாக்குகின்றது. நீடித்த ஸ்வாஸ ரோகங்களில் அதிக அளவில் நீண்ட காலம் சாப்பிட நற்பயனுண்டாம். யக்ருத் கோளாறு-அஜீரணம் இவற்றுடன் கூடிய ஸ்வாஸ ரோகங்களில் உபயோகிக்க உபத்திரவங்களை நீக்குவதுமல்லாமல் பூரண ஆரோக்யத்தையுமளிக்கும். பல்லாதகம் (சேராங்கொட்டை) உஷ்ண வீரியத்தாலும், சிலாஜது சீத வீர்யத்தாலும் வியாதிகளை நிவாரணம் செய்கின்றது என்பது ஆயுர்வேதாசாரியர்கள் கொள்கை அல்லது அபிப்பிராயம்.

மேலும் சிலாஜதுவானது கபதோஷத்தைச் சமனம் செய்து சிறுநீரை வெளியாக்கி கபத்தை வெளியாக்கும் திறனுடையது. இஃது அன்னபசன யந்திரங்களில் உத்தம பலனைச் செய்யக்கூடியது. க்ஷய ரோகங்களிலும் நன்மையளிக்கக்கூடியது. தேகஎரிவு, தாபம் இவற்றை நீக்கக் கூடியது.

**ஆண்களின் ஜனனேந்திரிய உறுப்புகள்:-** அஸ்வகந்தா போன்ற காமவர்த்தினி திரவியங்களுடன் சாப்பிடத் தாதுப் பலவீனம் தீரும். முந்திரிகைப்பழஸ்வரஸம்-திரிபலா கஷாயம் இவற்றுடன் கொடுக்க, வெள்ளை-வெட்டை ஆதியன தீரும். வங்கம், நாகம், ரஜதம் இவைகளின் தனிப்பட்ட பஸ்மங்களுடனாயினும், அல்லது ஒன்று சேர்த்

துக் கேவலம் சிலாஜதுவைக் கொடுக்க பறங்கி வியாதி, கிரந்தி முதலியன தீரும்.

**ஸ்திரீகளின் ஜனனேந்ரிய உறுப்புகள்:-** காசுக்கட்டி, காட்டாத்திப்பூ முதலிய சங்கோசனகாரி குணமுள்ள திரவியங்களுடனுவது, அல்லது பாலுடனுவது கொடுக்கப் பலவீனம் தீரும். சோம ரோகத்தை நீக்குவதில் முதன்மையானது. ஆமலகி கஷாயத்தில் கொடுக்க பித்த-யக்ருத் இவைகளுடன் கூடிய ஆர்த்தவ தோஷத்தை நீக்கும் தன்மையது.

**சலாசயத்தில்** (பஸ்தி):- மூத்திரவர்த்தினி திரவியங்களுடன் கொடுக்க தேகத்தில் பல விடங்களிலும் தங்கியிருக்கின்ற லவணங்களனைத்தையும் வெளியாக்கும் தன்மையது. நெருஞ்சில், மதுரம் முதலிய மூத்திரகர அல்லது மூத்திர விசர்ஜனி குணமுள்ள திரவியங்களுடன் கூட்டிக் கொடுக்க மூத்திராஸ்மரீ, அஸ்மரீ முதலிய மூத்திர சம்பந்தமான ரோகங்கள் தீரும். மாவிலிங்கத்துவக் கஷாயத்தில் (துவக்-மேல்பட்டை) அல்லது பஞ்சமூல கஷாயத்தில் கொடுக்க மேற்கூறிய ரோகம் ஸ்வஸ்தமாகும்.

### சிலாஜதுவின் பொதுப்பிரயோகம்

**நாடிகளிற் செய்யும் கிரியை:-** அதிக அளவில் சாப்பிட்டால் நித்திரையை யுண்டுபண்ணும். நரம்பு சம்பந்தமான வேதனை, இசிவு இவைகளை மாற்றும். சாதாரண அளவில் சாப்பிட்டால் பலத்தையும், சமனத்தையும் கொடுக்கும். காஞ்சோறி, ஜடாமாஞ்சில் இவைகளின் கஷாயத்தில் கொடுக்க ஜனனேந்திரிய உறுப்புக்களின் கோளாற்றால் உண்டான அபானவாயு, ஜலாசயத்தைச் சுத்தி செய்து நரம்புக்குப் பலத்தைக் கொடுத்து நிவர்த்தியாக்குகின்றது. திரிபலா கஷாயம் அல்லது தசமூல கஷாயத்தில் கொடுக்க உன்மாதம் நிச்சயமாக ஸ்வஸ்தமாகும். அன்றியும் காக்கை வலி, உன்மாதம், க்ஷயரோகம் இவைகளில் சிலாஜது சாப்பிடும்போது, மாமிசம் தின்னும் மிருகங்களின் இறைச்சி, அவைகளினுல் தயாரிக்கப் பட்ட சூப்பு, நெய் இவைகளைப் பாவிக்க வேண்டும்.

**பாவிக்கும் விதம்:-** பொது அனுபானமாகப் பால், திருணபஞ்சமூலக் கஷாயம், முந்திரிகைப்பழச்சாறு, திரிபலா கஷாயம் முதலியன. 'யோகவாஹி' குணமிருப்பதால் எந்த மருந்துகளுடன் சேர்கின்றதோ, அதற்கேற்ற குணங்களை விசேஷமாகச் செய்யும் தன்மையது. சிலாஜதுவை ரோகிகளுக்கு ஏற்ற அளவில் கொடுக்காதபடியாலும், ரோகத்திற்கேற்ற அனுபானத்துடன் கொடுக்காதபடியாலும், சிலாஜதுவைச் சாப்பிட்டு அதன் கிரியை ஆரம்பிக்குமுன் தண்ணீர் அமிதமாகப் பருகுவதாலும், சிலாஜதுவின் பலனைப் பிரத்தியக்ஷமாய்க் காணமுடியாதிருக்கின்றது. அபினி சாப்பிடுவதினுலுண்டாகும் துர்க்குணங்கள் சிலாஜது சாப்பிடுவதினுல் நீங்குகின்றது. நூறு வருஷம் சென்ற மண்டூர பஸ்மம், சிலாஜது பஸ்மம் இவற்றைச் சேர்த்து பாலுடன் சாப்பிட ரோகமணுகாது. ஞாபக சக்தியை விருத்தி பண்ணும். வாலிபத் தன்மையையும், அழகையும் உண்டுபண்ணும்.

**பத்தியா பத்தியம்:-** கடு, அம்ல லவணங்கள், உஷ்ண வீர்யம், ரூக்ஷத்தன்மை, எண்ணெயில் பொரிக்கப்பட்ட ஆகாரங்கள், அஜீர்ணமுண்டுபண்ணுமாகாரங்கள், சாப்பிட்டபின் புளிப்பை யுண்டுபண்ணுமாகாரங்கள்—இவற்றை விலக்க வேண்டும். கொள்ளு, புரு இறைச்சி, வாத்திறைச்சி இவைகளையும் விலக்கவேண்டும். அன்றியும் அதிகமான சம்போகம், வெய்யில் அதிகமான காற்று இவைகளையும் விலக்கவேண்டும். இதனுடைய உத்தம பலனையடைவதற்காக ஔஷதமுட்கொள்ளுவோர், ஏகாந்தமான குடிசையில் தனிமையில் ஜீவிக்க வேண்டும். அதிகமாகப் பால், நெய், வெண்ணெ, சம்பா அரிசி, கோதுமை, வாளி (பாளி) இவைகள், தேகத்திற்குப் புஷ்டியையும் பலத்தையும் தரக்கூடிய ஆகாரங்களையும், முந்திரிகை, மாதுளை இவை போன்ற மதுரரஸக் கறிகளையும், பருப்பு வகை, இறைச்சி வகை இவைகளால் தயாரிக்கப்பட்ட சூப்பு வகைகளையும் உபயோகிக்கவேண்டும்.

# சரபேந்திரர் வைத்ய முறைகள்

டாக்டர், S. வெங்கட்டராஜன், L. I. M. (Regd)
சரஸ்வதி மஹால், தஞ்சை.

(194-ம் பக்கத் தொடர்ச்சி)

## 16. கக்குவானுக்கு மருந்து

கொன்றை யாவாரம் பட்டை தூதுவிளை கொடிகள்
வேர்க்கொள்ளும்வெளவா
லொன்று வரம்பூவுள்ள நாக்கப்பாம்
பொன்றிந்த வகைகளோரைந்து
மன்று நல்லெண்ணெய் தனிலிட்டெரித்து
மாற்றி நக்கவும் கக்குவானு
மின்றகல்வோ மென்றெண்ணி முப்பிறை
கண்டிட்டது போது மென்றெழுமே· (159)

(இ-ள்) கொன்றைப் பட்டை, ஆவாரம்பட்டை, தூதுவிளை வேர்ப்பட்டை, ஈத்தின்னும் வெளவால், மண் புழு இவைகளை சமனிடை (ஒரு வராகனெடை) எடுத்து நல்லெண்ணெ ஒரு சேரில் போட்டு எரித்து நக்கிவர கக்கு வான் "மூன்றுபிறை கண்டது போதும்; இன்றே அகல் வோம்" என்பதுபோல உடனே தீரும்.

குறிப்பு:— குழந்தைகளுக்கு ஒரு தினுஸாக கூவிக் கொச்க ரித்து இருமலுண்டாகும் கோழை இளகியும் கெட்டிப்பட்டும் வெளிவராமலிருக்கும் இதை "கொக்குக் கொக்கெனும் கோழை இருமலாம் கக்குவான்" என்பதாலறிக.

## 17. பிள்ளைகள் மாந்தத்திற்கு மருந்து

ஏழு மிளகு மஞ்சணுறிய பட்டையிரு
மிளகினிடை வசம்புந்
தாழ்விலொரு மிளகளவே மஞ்சளுங்
காசிடையோ மந்தானிட்டியாவுஞ்
சாளிகைபோற் பொட்டணஞ் சல்லா
வினிட்டுத் தானுழக்குத் தண்ணீர் விட்டு
மாழியினற் சங்குநீர் நிற்கப் பொட்டணத்
தெடுத் தரைத்துத் தானே (185)

தானிறக்கிச் சங்குநீர் தனிற்கலக்கிப்
புகட்டவுமே தனையர் மாந்தம்
போனவிடந் தெரியாமற் போமென்றும்
வாகடநூற் புகன்றதெல்லா
மான்பானுஞ் சரபமகிபதி செந்தமிழ்
தனில் வகுத்துச் செய்வித்
தூன் மறநோயகலவுலகினுள்ளோருள
மகிழவுறை செய்தாரே (186)

(இ-ள்) நுணுப்பட்டை ஏழுமிளகு நிறை, வசம்பு இருமிளகு நிறை, ஓமம் ஒரு காசு எடை இவையனைத்தை யும் நசுக்கி ஒரு சீலையில் மூட்டைபோல் பொட்டணம் கட்டி ஒரு வாய் அகன்ற பாத்திரத்தில் ஒரு உழக்குத் தண்ணீர்விட்டு அதில் மேற்படி மூட்டையைப் போட்டு அடுப்பின்மேல் வைத்து ஒரு சங்கு ஆகும் வரை வற்றக் காய்ச்சவும். பின்னர் மூட்டையை எடுத்துச் சரக்குகளை அம்மியிலிட்டு அறைத்து ஒரு சங்கு தண்ணீரில் (பாத்திரத் தில் வற்றியிருக்கும்) கரைத்து மாந்தமுள்ள குழந்தைக்குப் புகட்டவும் மாந்தம் தீரும்.

## 18. மாந்த எண்ணெய்

வகையதாங் குதிரை வாலிதான்
சமூலம் வரு சிறுபுள்ளடி சமூலம்
மிகவுநல்வேளை சமூலமாம் விடத்தேர்
வேர்பட்டை வெள்வேலம்பட்டை
புகல் புன்முருங்கை யாமையோடிதெலாம்
பொடிப் பொடியாகவே நறுக்கி
தகைபெறச் சமமாய் விளக்கெண்ணெய்
நாழி தன்னிலுறவிட்டனற் காய்ச்சே (173)

காய்ச்சியோ வடித்து மாந்தம் வந்திடு
சேய்களுக்கெலாஞ் சற்றனற் காட்டிப்
பீச்சு பெண் முலைப் பாலினிற் கலந்தூட்
டப் பெயர்ந்திடும் பெரும் பிணிமாந்தம்
ஆச்ரமத்தோர் நால்வரும் மகிழ வண்ணல்
சரபேந்திர ராகுநூல்
வாச்சது நமக்கென்றுகந்திடும் நல்லோர்
வைத்யர் மதிக்க வாழ்பவரே (174)

(இ-ள்) முதியார் கூந்தல் சமூலம், சிறுபுள்ளடி சமூலம், நல்வேளை சமூலம், விடத்தேரிப்பட்டை, வெள் வேலம் பட்டை, நல்முருங்கைபட்டை, ஆமை ஓடு இவை களை (வகைக்கு 2 தோலா) எடுத்துப் பொடிப் பொடி யாக நறுக்கி விளக்கெண்ணெய் ஒரு நாழியில் போட்டு அடுப்பின் மீதேற்றிக் காய்ச்சவும். இதை பக்குவமாக வடித்து மாந்தமுள்ள குழந்தைக்கு சிறிது எண்ணெயை எடுத்து அனலிற் காய்ச்சி அதனுடன் சிறிது முலைப்பால் விட்டுக் குலுக்கிப் புகட்டவும். மிகுந்த குணம் தரும்.

**குறிப்பு:—** இது 21 வகைப்படும். எல்லா மாந்தத்திற்கும் பொதுவாயுள்ள குறிக்குணங்களாவன:- பிள்ளை கனக்கும், கால் பின்னும், கண் சிவக்கும், கையில் தங்காமல் வீறிட்டு அழும். குரல் கம்மி கண் குழியும், கைகால்கள் குளிர்ச்சி அடையும், பாலுண்ணாது, மயங்கி இருக்கும். சிற்சில சமயம் வயிறு கழியும்.

## 19. மாந்தப் பொருமலுக்கு மேற்பூச்சு மருந்து

பிள்ளையுடற்பிணி மாந்தந் தவிர்ந்திடவே
பெரியோர்கள் பேணிச்சொன்ன
உள்ளி வசம்புயர் பனை வேருடன் வேலிப்
பருத்தியிலை யுகந்து தேடி
வெள்ளாட்டின் புழுக்கையு மிட்டே காடி
விட்டரைத்து மேல் வயிற்றின்
வன்னியதாய் பூசவுமே வயிறு கழிந்திடும்
பொருமல் வாடிப்போமே (240)

போமிந்த மருந்தினையே கொதிக்க வைத்து
வயிற்றினிலே பூசப் பூசத்
தாமதியா துடனே தான்றவிந்து விடும்
பிணிமாந்தஞ் சவுக்கிய முண்டாஞ்
சேம மிதுவென் றுலகோர் தெளியுமெனச்
சரபேந்திரர் செப்ப நூலே
பாமரர்களறியார்கள் பாவாணர்
நயந்திவை பாராட்டுவாரே (241)

(இ-ள்) வெள்ளைப்பூண்டு, வசம்பு, பனைவேர், உத் தாமணி இலை, வெள்ளாட்டுப் புழுக்கை இவைகளை வேண்டுமளவுக்குச் சமன் எடுத்து இடித்து நன்றாகக் காடி

விட்டு அறைத்து மாந்தமுள்ள குழந்தையின் மேல் வயிற்றில் பூச வயிறு கழிந்து பொருமல் தீரும். இதையே கொதிக்க வைத்து வயிற்றில் பூச வயிறு கழிந்து பொருமல் தீரும். இதையே கொதிக்கவைத்து வயிற்றில் பூச மாந்தம் நீங்கி சுகமுண்டாகும்.

### 20. மாந்தப் பொருமல் கழிச்சலுக்கு மருந்து

உத்தாமணியோடுள்ளி வெதுப்படக்கி
 கோழியாவரை வசம்புடன் சாணுக்கி
இத்தனையு மோமத்தினிற் கூட்டிக் கருக்கி
 ட்டுமே புகட்ட
வத்தினமே மிகுதாக மணல் கண்டானு
 ணுவிலை வெந்தயம் வசம்பும்
மத்த வெங்காயமுங் கூட்டுங் கருக்குணப்
 பேதிகள் மாந்தம் பொருமல் போமே

(இ-ள்) உத்தாமணிவேர், வெள்ளைப்பூண்டு, வெதுப்படக்கி, கோழியாவாரை, வசம்பு, சாணுக்கிக்கீரை, ஓமம் இவைகளை சட்டியிலிட்டு நன்ருகக் கருக்கி தண்ணீர்விட்டு கஷாயம் செய்து அன்றைய தினமே புகட்ட, தாகமும், அனலும் (சுரமும்) தீரும்.

2. நுணா இலை, வெந்தயம், வசம்பு, வெங்காயம் இந்நான்கையும் கருக்கி கஷாயம் செய்து சாப்பிட்டால் பேதி மாந்தம், பொருமல் இவை தீரும்.

குறிப்பு:— மாந்தக் கழிச்சல் குறிகுணம்:- வாந்தி, மயக்கம், குரல் கம்மல். சுரம், கைகால் குளிர்ச்சி, பலநிறமுள்ள மலக் கழிச்சல் இவைகள் உண்டாகும். இது மகா கொடியது.

### 21. மாந்தத்திற்கு மருந்தும் புகையும்

மதுக்காரை வேர்ப்பட்டை எலுமிச்சம்பழச்
 சாறு வார்த்தரைத்தே
அதற்கேற்க வறுத்தூற்றும் விளக்கெண்ணெய்
 யதினெரித் திட்டதை வேண்டும்போ
திதத்துடன் சற்றனற் சுடவைத்திடுப்
 புகட்டு கடுகு புகைத்திட வலிப்புக்
கதைத்தான் சட்டியிலமலிட்டே
 கடுகிட்டே கிளறியதிற் றண்ணீரை (185)

தண்ணீரைத் தெளித்ததன் பிள்ளையைச்
சேலையில் மூடித்தான் வைப்பாயென்
றண்ணல் சரபேந்திரனூற் ருயுநூலின்
முறைகளாய்ந்து சொன்ன
துண்மையெனவே யுகந்த வுத்தமர்களை
தரிசித்தோர்க்கு மாந்தம்
நண்ணிடாதென பரிவிவானுலு
வருணத்தோரும் நவிற்றுவாரே (186)

(இ-ள்) மதுக்காரை வேர்ப்பட்டையை 2 வராகனெடையை எலுமிச்சம்பழச்சாறு விட்டு அறைத்து ஊற்றின விளக்கெண்ணெய் 2 சேர் விட்டுக்குழப்பி அடுப்பின்மேல் வைத்து பக்குவமாய் எரித்து வடிக்கவும். வேண்டும்போது இதில் சிறிதளவு எடுத்து அனலில் வெதுப்பிப் புகட்டவும்.

இதிலுள்ள கடுகை பத்திரப்படுத்தி குழந்தைக்கு மாந்த வலிப்பு வரும்போது ஒரு சட்டியை அனலின்மேல் வைத்து அதில் மேற்சொன்ன கடுகைப்போட்டு தண்ணீர் விட்டால் அதினின்றும் ஆவி எழும். குழந்தையை சேலையினுல் மூடி ஆவி வெளியே போகா வண்ணம் பிடிக்கச் செய்யவும். வலிப்பு நீங்கும்.

## 22. குளி தோஷத்திற்கு மருந்து

வேலிப்பருத்தியிலை குப்பைமேனியிலை
யுமை தண்ணீ
ராலங்கதனை பிசைந்நடைவாயங்
கைதனின் மங்கையரெடுத்து
பாலகன்றனை தனினும்
பரிவதாகப் பெற்றெடுத்த
கோலமடந்தை தலைதனினுந்
சொறியப்போமே குளிதோடம் (118)

(இ-ள்) வேண்டுமளவு வேலிப்பருத்தியிலை, குப்பைமேனியிலை இவ்விரண்டையும் தண்ணீர் விட்டு நன்ருக அரைத்து வடையாகத் தட்டி பிள்ளையைப் பெற்றெடுத்த தாயார் தன் தலையிலும் தன் குழந்தை தலையிலும் தடவி ஸ்நானம் செய்ய குளிதோடம் நீங்கும்.

குறிப்பு:— குளி தோடக் குறி குணங்கள். தூரம் வந்து குளித்த பெண் குளித்தவுடன் வேறு ஒருவரையும் பாராமலும்

எந்த உணவையும் உட்கொள்ளாமலும் அக்குழந்தையையே நேராகப் பார்த்ததினுல் உண்டாகும் தோஷம். குழந்தை சில சமயம் பால் குடிக்கும்: சில சமயம் குடிக்காது. உடம்பு இளைக்கும், வியர்வை விடும், அற்ப சுரம், வயிறு நோதல், உறக்கத்திலின்று எழுந்தவுடன் வாந்திஎடுத்தல் இவைகளுண்டாகும்.

(தொடரும்)

---

# உதவி! உதவி!!

# உடனே அளியுங்கள்.

அன்பார்ந்த வைத்திய ஸஹோதரர்களே,

நமது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்திற்கு "வைத்யசந்திரிகை" வந்தபின்பு இந்த இதழுடன் மூன்று ஆண்டுகள் முடிவடைகின்றன. பத்திரிகை மண்டலத்தின் சார்பில் நடத்த, ஆரம்பகாலத்தில் முதல் ஒருவருஷச் செலவிற்கு முன் பணமாகக் கைவசம் இல்லாமல் இயலாது என்று தயங்கின பொழுது, சந்திரிகையின் அதிபராயிருந்த பண்டித ஸ்ரீ நாராயணய்யங்கார், P. S. ராமசர்மா, V. R. ஸுப்பிரமணிய அய்யர், A. ராகவராவ், V. B. நடராஜ சாஸ்திரீ ஆக ஐவர்களும் ரூ. 500 கொடுத்து உதவினுர்கள் மேற்கொண்டுமிவர்கள் நாளது வரையிலும் திரவிய ஸகாயம் செய்து கொண்டேயிருக்கிறுர்கள். ஸ்ரீ N. மாதவமேனுேன் இரண்டாவது ஆண்டில் ரூ. 100 கொடுத்து உதவினுர். பிறகு மூன்றுவது ஆண்டில் கொடுத்து உதவி செய்துள்ள பெரியோர்களுடைய பெயர்கள் சென்ற சந்திரிகையில் 232-ம் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. சந்தாதாரர்களிடமிருந்து வசூலான தொகை, சந்திரிகைக்கு உதவியாளர்களிடமிருந்து அதிகம் கிடைத்த தொகை எல்லாம் போக பத்திரிகை அச்சிட்டு வெளியானதிற்கு அச்சுக் கூடத்தாருக்குக் கொடுக்க வேண்டியது நாளது தேதியில் ஏரக்குறைய ரூ. 500. இந்தக் கடனை அடைக்கவும் மேற்கொண்டு தொடர்ந்து பத்திரிகையை நடத்தவும் வைத்தியர்களுடைய ஆதரவு ஒன்றுதான் அடைக்கலம்.

..ய சந்திரிகை அச்சிடப்படும் ஸ்ரீரங்கம் ஸ்ரீ

விளாஸம் பிரஸ்காரருக்கு ஒரு மாஸத்திற்கும் கணக்கு நேர் செய்ய முடியாமல் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் கொடுத்து எத்தனை வருஷங்கள் காலங்கடத்த முடியும்? ஆதிமுதல் இதுவரையில் அப்போதப்போது பண உதவி செய்பவர்களாகிய ஒரு சிலருக்கே எவ்வளவு தடவைகள் மேன்மேலும் சிரமம் கொடுப்பது நியாயமாகும்?

இவ்வருஷத்தில் பத்திரிகை சிலமாதங்களில் வெளிவர வில்லையே. ஏன்? பரிகச் சிறிதாக வந்திருக்கிறதே ஏன்? ஆரோக்கிய சந்திரிகைப் பகுதி ஏன் வெளிவரவில்லை? ஸம்ஸ்கிருதாநுபந்தம் ஏன் தொடரவில்லை? என்றெல்லாம் அநேக சந்தாதாரர்கள் அடுத்தடுத்து லிகிதம் அனுப்பி வருகிறார்கள். இவைகள் எல்லாவற்றுக்கும் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் **பணமில்லாக் கொடுமை.** அங்கத்தினர்களுடைய ஆதரவு பண உதவி மூலம் கிரமமாய் ஓங்கும் என்ற ஒரு நம்பிக்கையினாலேயே பொது மக்களுடைய பிரயோஜனத்திற்காக ஆரோக்கிய சந்திரிகைப் பகுதியும், சாஸ்திரீய சர்ச்சைக்காக ஸம்ஸ்கிருதாநுபந்தமும் ஆரம்பித்து பத்திரிகை ஆகிருதியிலும் பெரிது செய்யப்பட்டது. ஆனால், வைத்தியர்களுடைய திரவிய ஸகாயம் எதிர்பார்த்தபடியாக ஏற்படாமல் பத்திரிகை நடத்துவதில் மிகவும் வருத்தமடையும்படியான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அதிகம் சொல்வானேன்? சந்தா முன் பணமாக அநுப்ப வேண்டுமென்று பிரதி பத்திரிகையிலும் பிரார்த்தனை புரிந்தும், பத்திரிகை வேண்டாதவர்கள் அவசியம் உடனே தெரிவித்து விட வேண்டும்; தெரிவிக்காவிடில் மௌனமே அங்கிகாரம் என்று நினைத்து அடுத்த மாதப் பத்திரிகை வி. பி. பி. மூலம் அநுப்பப்படும் என்றும் பல தடவைகள் ஞாபகப் படுத்திவிட்டு, பிறகு ஒரு மாதப் பத்திரிகையை வி. பி பி. மூலம் கடந்த வருட சந்தாவை வசூலிக்க அநுப்பினால், பல மாதப் பத்திரிகைகளையும் வாங்கி வைத்துக் கொண்ட பிறகும் வந்த வி. பி. பி யை ஏற்றுக் கொள்ளாமல் மறுதளித்துள்ள வைத்திய மகாநுபாவர்களும் சிலர் இருக்கிறார்கள்.

ஆயினும் பத்திரிகையோ வேண்டாம் இந்தக் கஷ்ட நிலையில்; நிறுத்தி விடலாம் என்று ஒருவரும் ஆலோசனை கூற முன் வர வில்லை. பத்திரிகையில்லாத சங்கம் ஊமை யல்லவா? பத்திரிகையில்லாமல் தமிழ் நாட்டில் ஆயுர்வேத மஹாமண்டலத்தின் லக்ஷியங்களை நிறைவேற்றுவதெங்ஙனம்? வைத்தியர்களுடைய ஸங்க சக்தியையும், ஹிருதயத்தையும் எவ்விதம் காண்பிப்பது? ஸம்சயங்களைப் போக்கிக் கொள்ளவும், ஆராய்ச்சிகளை வெளியிடவும் வழி வேறேது? ஆதலால் ஒரு மாதாந்தரப் பத்திரிகையாவது மண்டலத்தின் சார்பில் நடத்தாமலிருக்கவே கூடாதென்றுதான் பல வைத்தியர்களுடைய மனஸிலும் தீவிரமாயிருக்கிறது. இந்த உண்மைகளைக் கருதியே எப்படியும் நற்காலம் வருமென்ற நம்பிக்கையுடன் பத்திரிகை நடந்து கொண்டிருக்கிறது. பத்திரிகையின் பொருளாதார நிலையை நினைத்துப் பார்க்கும்போது அதைத் தொடர்ந்து நடத்த தைரியமேற்படவில்லை. நமது தேசீய வைத்தியப் பத்திரிகைக்கும் மற்றப் பத்திரிகைகளுக்கும் மிகுந்த வித்யாசமிருக்கிறது. பற்பல காரணங்களால் மற்றப் பத்திரிகைகளின் நிலைமை தொழில்கள் மூலம் சிறந்த லாபகரமான தொழிலாகவுமிருக்கிறது. நமது வைத்தியப் பத்திரிகையோ அதன் செலவிற்கும் கட்டாமலிருக்கிறது. இதற்குக் காரணம் யாவருமறிந்ததே. நமது வைத்தியப் பத்திரிகையும் இன்னம் சில வருஷங்கள் வரையில் வைத்தியர்களுடைய விசேஷ உதவியைப்பெற்றுவிடுமாகில் தொழில் திருஷ்டியிலும் த்ருடம் பெற்றுலாபகரமாக ஆகிவிடுமென்பதில் ஐயமில்லை. வைத்தியர்கள் அனைவரும் தங்களுடைய கடமைகளையுணராமல், பத்திரிகைக்கு விசேஷ உதவி அளிக்க முன் வராவிடில் பத்திரிகை பாலாரிஷ்டத்திற்கு இரையாகி விடுமென்பதிலும் ஐயமில்லை.

வைத்திய சந்திரிகை ஒருவருக்குத் தனிப்பட்ட சொந்த விஷயமல்ல. அது மண்டலத்தின் பத்திரிகை. அங்கத்தினர்களனைவர்களும் அதன் வளர்ச்சிக்குக் கடமைப் பட்டவர்களே. ஆதலால் அதிகம் சொல்லத் தேவையில்லை.

ஆகவே ஆயுர்வேத மஹாமண்டலத்தினுடைய அதாவது உங்களுடைய மாதப்பத்திரிகை மரித்து விடாமல் சிறப்பாக வாழ விரும்புவீர்களானால் அதற்கு உங்களால் இயன்ற உதவிகளை உடனே அளியுங்கள். இன்று அதற்குக் கடனிருப்பதையும் அடைத்து விட்டு மேல் வருஷமும் தொடர்ந்து நடத்தவும் கையில் முன் பணம் அவசியம் தேவையாயிருக்கிறது. மண்டலத்துக்கு சுமார் 210 அங்கத்தினர்களிருந்தும் 160 அங்கத்தினர்களிட மிருந்து மட்டில் 1948-ல் சந்தா மூலம் வசூலான தொகை ரூ 480 தான். ரூ 5-க்கு ஏற்றின பிறகு கூட சந்தாவினால் மட்டும் 12 மாதமும் பத்திரிகை வெளியிட சாத்தியமில்லை. 1949-ல் 12 மாதம் பத்திரிகை வெளியிடவும் மற்ற மண்டல கார்யங்கள் நடைபெறவும் குறைந்த பக்ஷம் சுமார் ரூ. 1600 ஆகும். இந்தத் தொகை மனஸ்விகளாகிய வைத்தியர்களுடைய உதவியினால்தான் பூர்த்தி செய்யப்பட வேண்டும். வேறு வழியில்லை.

"அருளிலார்க்கவ்வுலகமில்லை, பொருளிலார்க்கிவ்வுலகமில்லை." பணமின்றி பத்திரிகை நடத்தவும் வழி தெரியவில்லை. ஆதலால் உங்களுடைய விசேஷ உதவிப் பணத்தை உடனேயே அனுப்புங்கள்; நண்பர்களையும் அனுப்பச் செய்யுங்கள். உங்களுடைய மருந்துகளையும் உங்கள் நண்பர் வியாபாரிகளுடைய சரக்குகளையும் இப்பத்திரிகையில் விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள். (சார்ஜ் மிகக் குறைவுதான்) அதிகம் பண உதவி செய்ய ஸௌகர்யமில்லாதவர்கள் 1949 ஒரு வருஷச் சந்தாத்தொகை ரூ. ஐந்தையாகிலும் **1948 டிசம்பர் 20 தேதிக்குள் கிடைக்கும்படியாக** அவசியம் மணியார்டர் மூலம் அனுப்ப வேணுமென்று திரும்பத் திரும்ப பிரார்த்தனை செய்யப்படுகின்றது. அதிகமான சந்தாதாரர்களைச் சேர்ப்பதிலும் ஒவ்வொருவரும் ஈடுபடுங்கள். உங்களுடைய ஆதரவை உடனே பணத்தின் மூலம் காண்பித்தால்தான் பத்திரிகையின் கார்யம் சரிவர நடைபெற முடியும்.

## வைத்தியர்களுக்கு அறிவிப்பு

சாஸ்திர முறைப்படி கஞ்சா & அபின் சேர்த்து அடியிற் கண்ட மருந்துகள் தயாரிப்பதற்கும் வியாதிகளின் பேரில் வினியோகிப்பதற்கும் ரிஜிஸ்டர் & லைசென்ஸ் பெற்ற வைத்தியர்களுக்கும் சப்ளை செய்வதற்கும் லைசென்ஸ் பெற்றது.

### தீரும் வியாதிகள்.

எந்த மருந்தினாலும் தீராதென கைவிடப்பட்ட கிராணி, அதிசாரம், சீதரத்தவயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு, தூக்கமின்மை முதலிய நரம்பைப் பற்றின வியாதிகளுக்கு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை உபயோகிக்கக்கூடிய மிகச் சிறந்த மருந்துகள்.

### 1. வாழைப்பூ வடகம்

கஞ்சா சம்பந்தம். சிறு சுண்டைக்காய் அளவு ஒருதோலா எடைக்கு சுமார் மாத்திரை 32க்கு ரூ. 1

### 2. கபாட மாத்திரை

கஞ்சா & அபின் சம்பந்தம். குண்டுமணி அளவு ஒரு தோலா எடை சுமார் மாத்திரை 100 ரூ 2—8—0

### 3. கபாட வடகம்

அபின் சம்பந்தம். மிளகு அளவு ஒரு தோலா எடைக்கு சுமார் மாத்திரை 100க்கு ரூ. 3—0—0

ரிஜிஸ்டர் & லைசென்ஸ் பெற்ற வைத்தியர்களுக்கு 100க்கு 12½ கமிஷன் கழித்து அனுப்பப்படும்.

அட்வான்ஸுடன் ஆர்டர். வி. பி. வேறு.

**லைசென்ஸ் பெற்று தயாரிப்பவர்:—**

S. V. இராஜரத்தினக் கண்டர் R. I. M. P.

ராஜ சித்த வைத்தியசாலை,

சேர்மென் தம்மண்ண செட்டி ரோடு,

அரிசிபாளையம், சேலம்.